Registered at the G. P. O. as a Newspaper

வாரப்பதிப்பு

விலை சதம் 15

# ஈழநாடு

EELA NADU

National Tamil Daily

தேசிய தினசரி

போன்: 389

தபாற் பெட்டி எண் 49

மலர் 4 யாழ்ப்பாணம, சுபகிருது வைகாசி 7ஆம் நாள் துல்ஹஜு 5 (20 5-62) ஞாயிற்றுக்கிழமை இதழ் 97

பட்டு, பருத்திப்
பிடவைகளுக்குச்
சிறந்த ஸ்தாபனம்
டயரும்ஸ்
மெயின்வீதி. யாழ்ப்பாணம்.

# தமிழ் பல்கலைக் கழகம்

★ ஈழநாடு 20—5—62 ★

## வள்ளுவர் வழி

வெண்ணெயை வைத்துக்கொண்டு ஒருவன் நெய்க்கு அழுததாகக் கதையுண்டு. அதுபோலவே உள்ளது இன்று ஈழத்திலுள்ள நமது நிலை.

இம்மையில் மட்டுமன்றி மறுமையிலும் பேரின்பம் அடைவதற்கான வழிவகைகளை நமக்கு தெய்வப் புலமை திருவள்ளுவர், திருக்குறள் மூலம் தெளிவாக எடுத்துக் கொடுத்திருக்கின்றார். அந்தத் திருக்குறள் நூலை நாம் பூசிக்கிறோம். நூலை வைத்து ஊர்வலங்கள் நடத்துகிறோம். விழாக் கொண்டாடுகிறோம். என்றாலும் பலபல இன்னல்களுக்கும் உட்பட்டு, நம் எதிர்காலமென்ன என்று மனமுடைந்த நிலையில் திகைத்து அவதிப்படுகின்றோம்.

ஏன்? திருவள்ளுவப் பெருந்தகையை இது குறித்து நாம் கேட்டோமாயின் அவர் என்ன சொல்லுவார்? "கற்க கசடறக் கற்பவை, கற்றபின் நிற்க அதற்குத்தக" என்ற குறள் வாக்கிலே "நிற்க அதற்குத்தக" என்பதை அழுத்தமாகக் கூறுவார்.

திருக்குறள் அருமையான தெய்வீக நூல் தான். வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ் நாடு என்று நாம் பெருமைப்படுகிறோம். என்றாலும் அந்தத் திருக்குறளைக் கசடறக் கற்றவர் எத்தனை? கற்றபின் அதில் கூறியுள்ள நெறிப்படி நடப்பவர் எவ்வளவு?

இதைப்பற்றி நாம் சற்றே சிந்தனை செய்வோமாயின் நம்மை இன்று வருத்தும் இன்னல்களுக்கான உண்மைக் காரணங்களை உணர முடியும். வள்ளுவப் பெருந்தகை கூறியுள்ளபடி அன்பு வாழ்க்கை வாழுகின்றோமா? அறநெறிப்படி நடக்கின்றோமா? ஒவ்வொரு குறள் வாக்கையும் படிக்கும்போது, அதன் கருத்தை உணர்ந்து அதற்குத்தக நடக்கிறோமா? என்பதைப் பற்றி நாமே ஆத்ம சோதனை செய்து கொண்டோமாயின் பிறர் மீது குற்றங்கள் சுமத்தாமல் நமது குற்றங்களை உணரமுடியும்.

நம் குறைகளை நாம் பொதுவாகவே உணர்வதில்லை. நம்மிடம் குற்றமிருப்பதாகவே நினைப்பதில்லை. குற்றம் இருப்பதை தெரிந்து கொண்டால் தானே அவற்றை நீக்கிக் கொள்ள முயலமுடியும்.

வாழ்க்கையை சீர்படுத்தக்கூடிய முக்கியமான குறள் மணிகளை எடுத்து ஒரு சிறு நூலாக கருத்துடன் பதிப்பித்து அதை ஒவ்வொருவரும் தினசரி பாராயணம் செய்வதாயின், நமது குற்றங்குறைகளை உணர்ந்து அவற்றைத் தவிர்த்து வள்ளுவர் கூறிய இலக்கணப்படி வாழ்க்கை நடத்தி, இன்பமடைய முடியும். நாம் முதலில் திருந்தினால் உலகமும் தானே திருந்தக் கூடுமல்லவா? திருவள்ளுவர் திருநாளாகிய இன்று முதல் நம்மில் ஒவ்வொருவரும் குறள் கூறும் நெறிப்படி புது வாழ்வு வாழ முற்பட, வேண்டுதல் வேண்டாமை இலானை, தனக்குவமை இலாதானை தாள் சேர்ந்து வழுத்துவோமாக!

## தமிழர் கலைகளை வளர்க்கவே!

### வேலணை திருக்குறள் மகாநாட்டில் பேராசிரியர் விளக்கம்

வேலணை, சனி

'ஈழத்தில் தமிழர்களது கலைகள், பண்பாடு என்பன வளர்வதற்கேற்ற வசதிகள் கிடையாது. இதனால் தான் தமிழ்ப்பல்கலைக்கழக இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது' என வேலணை தொல்காப்பியர் அரங்கில் நடைபெற்றுவரும் தமிழ்மறைக் கழகத்தின் 10-வது மகாநாட்டில் பேராசிரியர் திரு. அ. சின்னத்தம்பி குறிப்பிட்டார்.

"பெயரளவில் எல்லோரும் தமிழர்கள் என்று சொல்லிக் கொண்டபோதும் ஒரு சிலரிடையே தான் உண்மையான தமிழ் உள்ளம் இருக்கிறது. தமிழர்கள் தமிழ் மறை வழி நின்று ஒழுகினால் இன்று தமிழ்ச் சமுதாயம் பின்தங்கியிருக்காது" என தலைமை வகித்துப் பேசிய தமிழ்மறைக் கழகத் தலைவர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் தமது தலைமையுரையின் போது கூறினார். தொடர்ந்து அவர் பேசியதாவது:-

உலகம் முழுவதையும் ஒரே கண்ணோட்டத்தில் பார்ப்பது திருக்குறள். தன் தாயை, மொழியை, இனத்தை போற்றாத ஒருவன் உலகத்தைப் போற்றமாட்டான். எனது நாடு எனது மொழி என்ற பற்றுத்தான் உலகப் பற்றுக்கு வழி காட்டுவதாகும்.

வேதம் ஆகமம் என்பவைகளின் வர்ண வேறுபாடுகளைப் பின்பற்றி தமிழ் நாட்டில் சாதிப்பாகுபாடு வளர்ந்தது. படித்தவர்கள் கூட அதனைப் பின்பற்றத் தொடங்கினர். 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற உயரிய கொள்கையின் வழிவந்த தமிழ்ச் சமுதாயம் இச்சீர்கேடுகளால் சின்னாபின்னமடைந்து தன் புகழ் குன்றியது. அது தமிழ்ச் சமுதாயத்தின் அழிவுக்கு வழி தேடும் என்பதைக் கருத்திற் கொண்டு "சிறப்பொக்கும்

(12-ம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்தில் வெசாக்

யாழ்ப்பாணம், ஞாயிறு.

யாழ்ப்பாணத்தில் நாகவிகாரையிலும் நயினாதீவிலுள்ள விகாரையிலும் இங்குள்ள சிங்கள பௌத்த இல்லங்களிலும் வெசாக் கொண்டாடப்பட்டது.

நேற்று யாழ்ப்பாணத்திலுள்ள சிறைச்சாலையில் சுமார் 75 கைதிகள் 24 மணிநேர 'சில்' அனுட்டித்தார்கள். இவ்வருடம் கைதிகள் வெசாக் பண்டிகையை சிறப்பாகக் கொண்டாடினார்கள். இவர்களுக்கு சிற்றுண்டிகள் வழங்கப்பட்டன. நந்தராமநாயகதேரே சமய வைபவங்களை நடத்தினார்.

சிறைச்சாலை சுப்ரின்டன் இந்த ஏற்பாடுகளைச் செய்திருந்தார்.

## சோமராமதேரோ இம்மாதம் தூக்கிலிடப்படுவார்

கொழும்பு, சனி.

பண்டாரநாயக்கா கொலையில் சம்பந்தப்பட்டவர் எனப் பிரிவிக்கவுன்சிலால் குற்றஞ் சாட்டப்பட்டுள்ள சோமராம தேரோ இம்மாதம் தூக்கிலிடப்படுவார் எனத் தெரிகிறது.

## "வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க மூலவளங்களைப் பயன்படுத்த வேண்டும்"

### சமூக பொருளாதார சங்க மகாநாட்டில் பேச்சு

யாழ்ப்பாணம், சனி

இன்று நமது நாட்டில் நிலவி வரும் வேலையில்லாத்திண்டாட்டத்தை தீர்க்கவேண்டுமானால் நாம் வுவசாயம், கடற்தொழில் இவற்றில் நன்கு ஈடுபட்டு நமது நாட்டில் இருக்கும் மூலவளங்களை முறையாகப் பயன்படுத்தவேண்டும்.

இவ்வாறு டாக்டர் பொன்னு விக்னராஜா, இளைஞர் சமூக பொருளதார முன்னேற்றச் சங்கததில் நடைபெற்ற மகாநாட்டில் பேசுகையில் கூறினர்.

'தொழில் வாய்ப்புக்கள்' பற்றி ஆலோசனை செய்வதற்காக திரு. எம். ஸ்ரீகாந்தா ஓ. பி. இ. தலைமையில் கூடிய இம்மகாநாட்டில் டாக்டர் விக்னராஜா மேலும் பேசியதாவது:

'இன்றைய இளைஞர்கள் காரியாலயங்களில் வேலை செய்வதற்கே பெரிதும் விரும்புகின்றனர். இதை விடுத்து நாட்டின் பொருளாதாரத்தை விருத்தி செய்வதற்காக இவர்கள் பல துறைகளிலும் ஈடுபட்டு உழைத்தல் வேண்டும்.

நம் நாட்டுக்குத் தேவையான பொருள்களைப் பெறும் பொருட்டு பல லட்ச ரூபாய்கள் வெளியே அனுப்பப்படுகின்றன. இந்நிலை மாறுவதற்கும் வேலையில்லாத் திண்டாட்டம் நீங்குவதற்கும் கால்நடை வளர்ப்பு, விவசாயம், கடற்தொழில் கைத்தொழில் ஆகியவை திட்டமிடப்பட்டுவிருத்தி செய்யப்படுவது அவசியம்.

திரு. கே. பரமானந்தராஜா பேசியதாவது:

கடல் தொழிலில் ஈடுபடுவதற்கு மக்களிற்பலர் பின்நிற்கிறார்கள். ஆனால் இத்தொழிலின் மூலம் ஒரு நாளைக்கு ஐந்நூற்றிலிருந்து ஆயிரம் ரூபா வரை ஊதியம் பெறக்கூடிய வாய்ப்புக்கள் இருக்கின்றன.

முற்காலத்தில் இத்தொழிலைச் செய்வதில் பல கஷ்டங்கள் இருந்தன. ஆனால் விஞ்ஞானம் வளர்ந்துவிட்ட இக்காலத்தில் இத் தொழிலைச் செய்வது இலகுவாகி விட்டது.

மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு உழைப்பவர்களுக்கு இத்தொழிலுக்குத் தேவையான இயந்திர மீன்பிடி வள்ளங்கள் வலைகள் முதலியவற்றை வாங்குவதற்குத் தேவையான பணத்தை நீண்ட தவணையில் திருப்பிக் கொடுக்கக் கூடிய வகையில் அரசாங்கம் கடனுதவி அளித்து வருகிறது. இதைப் பயன்படுத்தி இத்தொழிலில் ஈடுபட்டு விருத்தி செய்ய மக்கள் முன்வரவேண்டும்.

உதவி வித்தியாதிபதி திரு. எஸ். யு சோமசேகரம் பேசியதாவது:

முன்னர் பாடசாலைகள் பலரது நிர்வாகத்தின் கீழ்இயங்கி வந்ததால் மாணவர்கள்வெறும் புத்தகப்படிப்போடு மட்டும் நின்றுவிட்டார்கள். இன்று பாடசாலைகள் யாவும் ஒரு நிர்வாகத்தின் கீழ் இயங்கி வருவதால் நல்ல முறைகளைக் கையாண்டு நல்ல துறைகளில் மாணவர்களை இட்டுச்சென்று சமுதாயத்துக்கு வேண்டிய நற்பயன்களைப் பெறலாம்.

திரு. டி. செல்லக்கண்டு பேசியதாவது:

விவசாய, தொழில் வளர்ச்சிக்கு அளிக்கப்படும் நிதிஉதவிகளில் பெரும்பகுதி மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு உபயோகப்படுகிறது. விளைச்சல் காணிகளாயிருந்த நிலங்களில் எல்லாம் கட்டடங்கள் வளரத் தொடங்கிவிட்டன. இந்தநிலை ஓரளவுக்குக் கட்டுப்படுத்தப்படவேண்டும். இதனால் நாட்டுக்கு நன்மை ஏற்படும்.

திருவாளர்கள்: ஏ. தியாகராஜா, சி. பொன்னுத்துரை ஆகியோரும் பேசினார்.

# உங்கள் இராசி பலன்

சோதிட ஆசான் செ. தெல்லியூர் எழுதுவது

சுபகிருது ஆண்டு வைகாசி திங்கள் 7-ம் நாள் ஞாயிற்றுக்கிழமை (20-5-62) முதல் வைகாசித் திங்கள் 13-ம் நாள் சனிக்கிழமை (26-5-62) வரை உள்ள பலன்கள்.

### மேட இராசி

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற் பாதம்)

இவ்வாரத்தில் இவர்களுக்கு ஆலயதரிசனம், பெரியோர் நட்பு, சுபகருமகொண்டாட்டங்கள் நடத்தல், தொழிலபிவிருத்தி, வர்த்தகத்துறை செழிப்பு, உத்தியோகத்துறை கடும் உழைப்பு, மதிப்பு கிடையாமை, கல்விச்சிறப்பு, வாக்கு வன்மை, பெண்களுக்கு குடும்பத்தில் லக்ஷ்மிகடாட்சம், விவாகப்பேறு, பணவரவு ஆகியன காணப்படுகின்றன. இவர்களுக்கு மேமாதம் 24, 26 சுபதினங்களாகும்.

★

### இடப இராசி

(கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடம் முன்னரை முடிய.)

இவ்வாரத்தில் இவர்களுக்கு வெளியூர்ப் பிரயாணம், அகாலபோசனம், ஏமாற்றம், தொழில் வகையில் நன்மை, குடும்ப ஒற்றுமை, வர்த்தகத் துறையில் ஆதாயம், கடும் உழைப்பு, பயிர்த்தொழிலில் பணவரவு, தொழிற் சிறப்பு, மாணவருக்கு கல்விகேள்விகளில் முன்னேற்றம், பெண்களுக்கு மனத்திடம், குடும்ப சுகம், தனதானியவிருத்தி ஆகியன காணப்படுகின்றன. இவர்களுக்கு மேமாதம் 20, 26 சுபதினங்களாகும்.

★

### மிதுன இராசி

மிருகசீரிடம் பின்னரை, திருவாதிரை, புனர்பூசம் முன் முக்கால்)

இவ்வாரத்தில் இவர்களுக்கு குடும்ப ஒற்றுமை, பெண்களால் உதவி, ஆதாயம், நல்லோர் நட்பு, நாணய விருத்தி, உத்தியோகத்தில் பிடிவாதத்தால் தீமை, பயிர்த் தொழிலில் சொத்துவிருத்தி, தொழில் சீராக நடத்தல், மாணவருக்கு பணமுடை, பெண்களுக்கு மகிழ்ச்சி ஆகியன காணப்படுகின்றன. இவர்களுக்கு மேமாதம் 20, 22, 23 சுபதினங்களாகும்.

★

### கடக இராசி

(புனர்பூசம் 4ம் பாதம், பூசம், ஆயிலியம்)

இவர்களுக்கு இவ்வாரத்தில் செய்தொழில் விருத்தி, அரசாங்க ஆதரவு, நல்லோர் நட்பு, ஒற்றுமை, தொழிற் சிறப்பு, ஆதாயம், உத்தியோகத் துறையில் முன்னேற்றம், வருமானம், செல்வாக்குயர்வு, பயிர்த்தொழில் சிறப்பு, பிறர் சொத்து சேருதல், பெண்களுக்கு தனதானியவிருத்தி, சுபகரும முயற்சி, மாதா வழிஉதவி, மாணவருக்கு வித்தைச்சிறப்பு, அரசாங்க உதவி ஆகியன காணபபடுகின்றன. இவர்களுக்கு மேமாதம் 22, 23, 25 சுபதினங்களாகும்.

★

### சிங்க இராசி

(மகம், பூரம் உத்தரம், 1-ம் பாதம் முடிய.)

இவர்களுக்கு இவவாரத்தில் மனத்தைரியம், அதிகாரிகள் உதவி, பிரயாணம், குடும்ப ஒற்றுமை, பிதாவழி உறவு, வர்த்தகத்துறையில் தொழில் அபிவிருத்தி, வருமான அதிகரிப்பு, உத்தியோகத்துறையில் தொழிலில் நற்பெயர், பதவி உயர்வு, தாயாதிகளால் இடர், மாணவருக்கு பரீட்சைவெற்றி, அரசாங்க பண உதவி, பெண்களுக்கு சகோதரரால் உதவி, பணவரவு ஆகியன காணப்படுகின்றன. இவர்களுக்கு மேமாதம் 24, 26 சுபதினங்களாகும.

★

### கன்னி இராசி

(உத்தரம் பின் முக்கால், அத்தம், சித்திரை முன்னரை)

இவர்களுக்கு இவ்வாரத்தில் பிடிவாதம், பகை வளர்ச்சி, தொழில் கருமங்களில் சமபலன், பெண்கள் உதவி, வர்த்தகத்துறையில் ஆதாயம், உத்தியோகத்துறையில் கடும் உழைப்பு, கமத்தொழிலில் வீண் அலைச்சல், குடும்பத்தில் வைத்தியச் செலவு, மாணவருக்கு பரீட்சை வெற்றி, பிதாவழி உதவி, பெண்களுக்கு குடும்பநலம் ஆகியன காணப்படுகின்றன. இவர்களுக்கு மேமாதம் 20, 26 சுபதினங்களாகும்.

★

### துலா இராசி

(சித்திரை பின்னரை, சுவாதி, விசாகம் முன்முக்கால்)

இவர்களுக்கு இவ்வாரத்தில் வெளியூர்ப்பிரயாணம், கௌரவக் குறைவு, வம்புவழக்குகள், பணமுடை, குடும்ப ஒற்றுமை, வர்த்தகத்துறையில் தொழில் நலம், ஆதாயம், உத்தியோகத் துறையில் தேகநலக் குறைவு காரணமாக தொழிற்கேடு, அதிகாரிகள் அதிருப்தி, பயிர்த் தொழில் சுணக்கம், கடும் உழைப்பு, மாணவருக்கு உடல் நலக்கேட்டால் வித்தைத்தடை, ஞாபகமறதி, பெண்களுக்கு குடும்பசுகம். பிதாவழிஉதவி ஆகியன காணப்படுகின்றன. இவர்களுக்கு மேமாதம் 22, 23 சுபதினங்களாகும்.

★

### விருச்சிக இராசி

(விசாகம் 4-ம் பாதம், அனுஷம், கேட்டை.)

இவர்களுக்கு இவ்வாரத்தில் பிரயாணகஷ்டம், குடும்பத்தில் வைத்தியச் செலவு, தொழில் அபிவிருத்தி. வருமான உயர்ச்சி, ஊழியர் உதவி, வர்த்தகத் துறையில் பொதுவாக வருமான உயர்ச்சி, உத்தியோகத்துறையில் எதிர்ப்பு, அதிகாரிகள் கண்டிப்பு, கமத்தொழிலாளருக்கு செலவு அதிகரித்தல், பகை நீக்கம், மாணவருக்கு கௌரவம், வித்தைச்சிறப்பு, பிரயாணம், பெண்களுக்கு மகிழ்ச்சி, குடும்பசுகம் ஆகியன காணப்படுகின்றன. இவர்களுக்கு மேமாதம் 20, 24, 25 சுபதினங்களாகும்.

★

### தனு இராசி

(மூலம், பூராடம், உத்தராடம் 1-ம் பாதம்)

இவர்களுக்கு இவ்வாரத்தில் கபடதாரிகளால் ஏமாற்றம், வெளியூர்ப் பிரயாண கஷ்டம், குடும்ப ஒற்றுமைக் குறைவு, வர்த்தகத் துறையில் ஊக்கக் குறைவு, பயிர்த் தொழிலில் கடும்உழைப்பு, பலிதக்குறைவு, உத்தியோகத் துறையில் தொழிற் சிறப்பு, மாணவருக்கு கல்வித்தடை, பெண்களுக்கு தேகநலக்கேடு, தூக்கக் குறைவு, செலவு, பயம் ஆகியன காணப்படுகின்றன. இவர்களுக்கு மே மாதம் 22, 23, 26 சுபதினங்களாகும்.

★

### மகர இராசி

(உத்தராடம் பின் முக்கால், திருவோணம், அவிட்டம் முன்னரை)

இவர்களுக்கு இவ்வாரத்தில் நண்பருக்காக கஷ்டப்படல், சொந்த முற்சித் தடை, சுபகாரியப் பிரயத்தனங்கள் சீர்படாமை, வர்த்தகத்துறையில் மந்தநிலை, தொழிலில் பண முடக்கம், கடன்வராமை, உத்தியோகத்துறையில் கருதியவை கைகூடாமை, கடும் உழைப்பு, பயிர்த்தொழிலாளருக்கு தொழிலில் பற்றுதல், நற்பலிதம், மாணவருக்கு கல்வி விருத்தி, பெண்களுக்கு குடும்ப நிம்மதி, இடையிடை வைத்தியச் செலவு, ஆகியன காணப்படுகின்றன. இவர்களுக்கு மே மாதம் 20, 24, 25 சுபதினங்களாகும்.

★

### கும்ப இராசி

(அவிட்டம் பின்னரை, சதயம், பூரட்டாதி முன்முக்கால் முடிய).

இவர்களுக்கு இவ்வாரத்தில் பழைய பாக்கிகள் வரவு, அதிகாரிகள் ஆதரவு, பணவரவு, குடும்ப சுகம். வர்த்தகத்துறையில் ஆதாயம், பொருட்செழிப்பு, உத்தியோகத்துறையில் பிரயாணகஷ்டம், எதிரிகளால் இடர்ப்பாடு, அதிகாரிகள் பகை, மாணவருக்கு பரீட்சை வெற்றி, கமத்தொழிலாளருக்கு தொழிற்றுமதம், பணச்செலவு, பெண்களுக்கு மாதுருவழி ஆதரவு, ஆகியன காணப்படுகின்றன. இவர்களுக்கு மே மாதம் 20, 23, 26 சுபதினங்களாகும்.

### மீன இராசி

(பூரட்டாதி 4-ம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி)

இவர்களுக்கு இவ்வாரத்தில் இனபந்துக்கள் பகை, வழக்குகள், தொழிலில் கடும்உழைப்பு, வருவாய் குறைதல், வர்த்தகத் துறையில் ஆதாயம், மாணவருக்கு கல்வியில் அசிரத்தை, வெறுப்பு, உத்தியோகத்தருக்கு தொழிலில் சுறுசுறுப்பு, பகை நீக்கம், கமத்தொழிலில் பிதாவழி ஆதரவு, தொழில் நலம், பெண்களுக்கு சகோதர உதவி, மனச்சந்தோஷம், குடும்பத்தில் சுபபலன் நடத்தல், தெய்வவழிபாடு ஆகியன காணப்படுகின்றன. இவர்களுக்கு மே மாதம் 22, 25 சுபதினங்களாகும்.

## 'அருள் கூர்ந்து காக்கும் முதலே'

யாழ்ப்பாணம் ரசிக ரஞ்சன சபாவின் பதினோராவது ஆண்டு இசை விழா வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரத ராஜப் பெருமாள் கோவிலில் சமீபத்தில் நடைபெற்ற போது அவ்விழாவிற்கென இசைப்புலவர் சி. செல்லத்துரையால் இத்தோத்திரம் இயற்றப்பெற்று விழாக் கச்சேரியில் பாடப்பெற்றது.

அண்டகோ டிகள்படைத் தயன்றனி வழங்கிட
அருள்கூர்ந்து காக்குமுதலே!
அன்றுபாற் கடல்கடந் தமரர்துய ரொழிந்திட
ஆரமுத மீந்தவள்ளால்!
கொண்டல்வண்ணு! வுன்னை யின்றதே வகியுளங்
கோடிதவஞ் செய்ததையா!
குவலயங் கொண்டாடும் யசோதையின் அன்பின்
கொடிபோல வளர்ந்த செல்வா! [மென்
எண்டிசையும் புகழுபுல் லாங்குழ லிசையினல்
இதயங் குளிரவைப்பாய்!
இன்று யாழ்ப் பாணநல் ரஸிகரஞ் ஜனசபா
இசையரங் கொளிரவாராய்!
வண்டுலவு சோலைவளர் துவாரகா புரியனைய
வண்ணையம் பதியமர்ந்து
வந்திப்ப வாக்குவரம் வழங்கிடும் வேங்கடேச
வரதராஜப் பெருமாளே!

# யோகத்தில் ஏகமாவது தெய்வ வாழ்க்கை

— சுவாமி சிவானந்தர் —

தெய்விக வாழ்க்கைச் சங்கத்தின் வெள்ளிவிழா கண்டியிலுள்ள சச்சிதானந்த தபோ வனத்தில் நடைபெறுகிறது. சுவாமி சிவானந்தரின் போதனைகளிலிருந்து சிலபகுதிகள் இங்கு தொகுத்துத் தரப்பட்டுள்ளது.

வாழ் வாங்கு வாழும் வாழ்வே திவ்ய ஜீவனம், தூய்மை, வாய்மை, நேர்மை, சீர்மை, அன்பு-அறம் இவை போற்றி ஆண்டவன் திருவருளுக்கு இலக்காகும் வாழ்வே ஆன்மப் பொதுவில் வளரும் அமர வாழ்வாகும். இந்த உலகின்பத்தையோ, புகழையோ நாடி மனம் அலைந்தால் கவலை பெருகும். கலக்கம் வளரும். அமைதி குலையும். அடங்க அடங்க அமைதி. ஆட ஆட அலைவு. அடங்கு நிலை யோகம். அலைவு நிலை போகம். யோகத்தில் ஏகமாவதே தெய்வவாழ்க்கையாம்.

### சிறு செயல்கள்

சமய வாழ்க்கை வாழும் ஒருவன் பிரார்த்தனைக் கூட்டத்துக்குச் செல்கையில் வழியிலுள்ளவர்களை இடித்துத் தள்ளிக்கொண்டு விரைகிறுன். தன் முரட்டுச் செயலுக்காக மன்னிப்புக் கூட அவன் கேட்பதில்லை. உண்மையில் அவன் சமயப் பண்பு உள்ளவனு? பிரார்த்தனைக் கூட்டத்துக்குச் செல்ல வேண்டும் என்ற சமயச் சார்பான நோக்கத்திற் கூடச் சுய நலமே அவனிடம் தலை தூக்கி நிற்கின்றது. ஒருவன் அடைந்துள்ள ஆத்மீக முன்னேற்றத்தை அவனுடைய சிறு சிறு செய்கைகளைக் கொண்டு மதிப்பிட்டு விடலாம்.

### ஆன்மீகப் பாதை

ஆன்மீகப் பாதை ஆரம்பத்திலே கடினமாகத் தான் தோன்றும். சாதனைகள் அலுப்பூட்டுவனவாயும் கவர்ச்சியற்றனவாயும் சோர்வும் அமைதியின்மையும் மேவிடும் ஆரம்பச் சாதகர்களுக்கு இத்தகைய அனுபவங்கள் ஏற்படுவது இயல்பேயாகும். முயற்சித்து உறுதியுடன் முன்னேறினல் யாவும் சரியாய்விடும். புதிய உற்சாகமும் மகிழ்ச்சியும் தோன்றக் காண்பீர்கள். உங்கள் இதயத்துறையும் பரம்பொருள் தோன்றாத் துணையாய் நின்று உதவுவதை உணர்வீர்கள். அழிவற்ற ஆன்மீக இன்பத்தைச் சுவைப்பீர்கள். சீவன்முத்தர்களும் யோகிகளும் நித்திட சித்தர்களும் அமர புருஷர்களும் போராடும் சாதகனுக்குக் கைகொடுத்து உதவுவார்கள். சாதகன் இதை நேரடியாக உணரமுடியும்.

### உலகம் ஒரு பயிற்சிக் கூடம்

ஆன்மீக சாதனைக்கு உலகம் ஒரு தடையன்று. உலகம் மிகச் சிறந்த பயிற்சிக் கூடம். தினசரி அதில் பல அரிய பாடங்களைக் கற்றுக் கொள்கின்றோம். ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் யோகமுறையிற் பயன்படுத்த அறிந்து கொண்டால் ஆன்மீகத்துறையில் வெகு விரைவில் முன்னேறலாம்.

### மனக்கவலை மாற்றும் மருந்து

வாழ்க்கையைச் சரியாகப் புரிந்து கொள்ளுங்கள். இவ்வுலகில் எதுவும் பூரணமானதன்று. முழுமையும் பூரணத்துவமும் இறைவனிடம் மட்டுமே காணமுடியும். இறைவனது நீதி முறையில் அசையாத நம்பிக்கை வையுங்கள். இறைவன் எதையும் எமது நன்மைக்கே செய்கிறுர். உள்ளத்தை உயர்த்தும் நூல்களை ஓதுங்கள். உள்ளம் உருகிப் பிரார்த்தனை செய்யுங்கள். இறைவனது நாமங்களையும், லீலைகளையும் புகழையும் பாடுங்கள். மனத்திலுள்ள கவலைகளெல்லாம் மறைந்து மகிழ்ச்சி ததும்பும். நிகழ்காலத்தில் வாழுங்கள். தற்போதைய சூழ்நிலையிற் செய்யத்தக்கதைச் செய்துவிட்டு மற்றதையெல்லாம் இறைவனுக்கே விட்டு விடுங்கள். உங்கள் நலத்தை அவர் கவனித்துக் கொள்வார். வாழ்க்கையில் எந்த நிலையையும் சமாளிக்கப் போதுமான சக்தி உங்களிடம் உள்ளது. கிரமமான சாதனை மூலம் இத் தெய்வீக சக்தியை வளர்த்துத் தினசரி வாழ்க்கையில் அதனை வெளிப்படுத்துங்கள்.

### ஆன்மீக உணவு

உடலுக்கு உணவு தேவைப்படுவது போல உயிருக்கு உணவு தேவை. பிரார்த்தனை, ஜபம், சங்கீர்த்தனம், தியானம் முதலிய ஆன்மீக சாதனைகளே உயிருக்குத் தேவைப்படும் உணவு. குறிப்பிட்ட நேரத்தில் வயிற்றுக்கு உணவு கிடைக்காவிட்டால் அமைதியை இழந்து விடுகிறேமல்லவா? சிலநாட்கள் தொடர்ந்து பிரார்த்தனை, ஜபம் முதலியவற்றைக் கிரமமாகச் செய்து வந்த பின், ஒரு நேரம் அவற்றைச் செய்யாமல் விட்டாலும் அத்தகைய அமைதியின்மை ஏற்படும். உடலைப் போலவே உயிருக்கும் வேளா வேளைக்கு உணவு தேவைப்படுகிறது. சொல்லப் போனல் உடலைவிட உயிருக்குத்தான் உணவு அதிக முக்கியமானது. தூலசரீரத்தின் வளர்ச்சிக்கு உணவு எப்படி அவசியமாகிறதோ? அது போல சூக்கும சரீரத்தின் வளர்ச்சிக்கு ஆன்மீக உணவு அவசியம். ஜபம், தியானம் ஆகியவற்றை நீங்கள் கிரமமாகச் செய்துவராவிடில் சூக்கும சரீரம் பலவீனமடைந்து விடும். அப்போது தீய எண்ணங்களையும் தீய சமஸ்காரங்களையும் எதிர்க்கும் சக்தி குறைந்து விடும். சாதனைகளில் மிகக் கிரமமாக இருப்பதன் அவசியத்தை இப்போது உணர்கிறீர்களா? போராட்டத்தில் உன்னுடைய முக்கிய எதிரிகள் உன்னுடைய மனமும், இந்திரியங்களுமே. ஆகையால் அவைகளுடன் போராடி வெற்றியடை.

ஜபம், தியானம் மூலம் உன்னுடைய எதிரிகளை விரட்டு. ஆத்மீகத் துறையில் முன்னேறி ஞானத்தை அடைய முயற்சி செய்.

### அன்பே தெய்வம்

உண்மையே தெய்வம். அன்பே தெய்வம். உண்மையே பேசு. ஒவ்வொருவரையும் நேசி. நீ சீக்கிரமே தெய்வ தரிசனம் பெறுவாய். சாதுக்கள், சந்நியாசிகள், பக்தர்கள் இவர்களுடன் சத் சங்கம் கொள். இது ஒன்றே உனக்கு விவேகம், வைராக்கியம், ஆத்மீக பலம், மனச்சாந்தி இவைகளை

(9-ம் பக்கம் பார்க்க)

கண்ணகியைப் பெண்மகளல்லளெனவும் கண்கண்ட தெய்வமெனவும் கவுந்தியடிகளாகிய துறவியரின் வாக்கால் இளங்கோவடிகள் உணர்த்துவதன் மூலம் இல்லறத்தின் பெருமையும், இல்லறத்தை நல்லறமாக்கும் மங்கையரின் மாண்பையும் உலகறியத் தக்கவாறு குன்றின் மீதிட்ட விளக்காக்கினர்.

# உண்மையை அறிதலும் உவகை பெறுதலும்

— வித்துவான் பொன். முத்துக்குமாரன் —

இழந்த பொருளை மீளப் பெறும்போது உண்டாகும் இன்பம் அப்பொருளை முன்னே பெற்ற காலத்தில் அடைந்த இன்பத்திலும் பன்மடங்கு பெரிதாயிருக்கும். பொருளை மீளப் பெறும்போது அடையும் அவ்வித பேரின்பத்தைக் காட்டிலும் அப்பொருளின் பெருமையையும் அருமையையும் அறியும்போது உண்டாகும் இன்பம் மிகமிகப் பெரிதாயிருக்கும். கண்ணகி கோவலனை மீளப்பெற்றுக் களிப்புறுகின்றாள். கோவலன் தன்மனத்தாலும் புறத்தாலும் பிரிந்திருந்த கண்ணகியை மீளக்கூடப்பெறுதலோடு அவளது அருங்குணங்களை ஒன்றொன்றாகக் கண்டும் கேட்டும் களிபேருவகை எய்துகின்றான். இவ்வாறு கோவலனும் கண்ணகியும் ஒருவரைஒருவர்கூடப் பெற்றமையால் உள்ளத்தில் இன்பமும் புதிய உணர்ச்சியும் பெற்றவராகின்றனர்.

## மதுரை நோக்கி ....

பூம்புகாரை விட்டு நீங்கும் கோவலனது உள்ளத்தில் பல்வேறு உணர்ச்சிகள் தோன்றி மறைகின்றன. கடந்தகாலத்தை வீணாகக் கழித்தேன் என்னும் கழிவிரக்கம் ஒருகால் தோன்றுகின்றது. தளிர்போன்ற மெல்லடிகள் வருந்தக் கண்ணகி நடந்து வருதலைக் காணும் போது, அவளை அழைத்துச் செல்லவேண்டிய தனது நிலை குறித்த துயரம் ஒரு புறம் தோன்றி வருத்துகின்றது. இவ்வாறு மாறி மாறித் தோன்றும் பலவித உணர்ச்சிகளுக்கிடையில் அவன் மனத்தை ஒரே ஒரு எண்ணம் ஊன்றுகோல் போன்று தாங்குகின்றது. எதிர்காலத்தில் கண்ணகியை விட்டுப்பிரிவதில்லையாதலால் அவள் துணையாக நல்வாழ்வு வாழலாம் என்ற நம்பிக்கை அவனது சோர்ந்த உள்ளத்துக்கு உயிர்கொடுத்திருந்தது, ஆயின், கண்ணகி தனது கடந்த காலவாழ்வில் இரங்கத்தக்க செயல்யாதும் செய்திலளாகையால், அவள் மனம் எதிர்கால நல்வாழ்வொன்றையே எண்ணி, அவ்வெண்ணத்தால் ஊக்கம் பெற்று மலர்ந்தது. இவ்வாறு கோவலனும் கண்ணகியும் வருங்காலத்தில் தாம் உறுதியாகக் காணவிருக்கும் நல்வாழ்வில் நம்பிக்கையுடையவராய், பூம்புகாரையும், பிறந்த பொன்னாட்டையும் திரும்பிப்பாராது மதுரை நோக்கி ஆவலோடு விரைந்துசெல்கின்றனர்.

## கவுந்தி அடிகள்

உடல் களைத்துச் சோர்ந்த வேளையில் தென்றலானது ஊக்கம் தருகின்றது. மனம்நொந்து மடிந்த நேரத்தில் சான்றோர் வாய்மொழி ஊன்றுகோலாகின்றது. பூம்புகாரில் வாழ்ந்த

### சிலம்பின் சிறப்பு: 9

வாழ்வினால் உள்ளம் தளர்ந்து, உணர்வுமாய்ந்திருந்த கோவலனுக்கும் கண்ணகிக்கும் ஒரு சான்றோரது உறவுகிடைக்கின்றது. கவுந்தி அடிகள் என்ற சமணப் பெண்துறவி அவ்விருவர்க்கும் வழித்துணையாக வாய்க்கின்றார். இளங்கோவடிகள் தம் காப்பியத்தில் இடமறிந்து அப் பாத்திரத்தைப் படைத்துள்ளார். கவுந்தியடிகள் தளர்ந்து மெலிந்தோர்க்கு நன்மொழி கூறி, அவர்களைப் பத்துணர்ச்சி பெறச்செய்யும் அருளுடையராதலோடு தகாதன செய்தாரைத் தண்டிக்க வல்ல தவவலிமையும் உடையவர். அத்தகைய பெருமை சான்ற அடிகளின் உறவினால் கோவலனும் கண்ணகியும் தாம் சென்ற அரிய வழியை இனிதாகவும் இலகுவாகவும் கடந்தனர். அத்துடன் மாதவியையும் மாதவியோடு கழித்த வாழ்நாளையும் நினைத்து மனங் கசந்திருந்த கோவலன் உண்மைவாழ்வையும் உண்மை இன்பத்தையும் அடிகளின் உறுதிமொழிவாயிலாகஅறிந்து ஒரு புது மனிதன் ஆனான். கோவலன் அடிகளிடத்தில் பெற்ற புத்துணர்ச்சியானது வழிச்செலவில்கண்ட பல்வேறு அநுபவங்களினால் உறுதி பெற்று நிலைத்துவிட்டது.

## தெய்வ வாக்கு

மலைக்குகைகளிலே தங்கி மனத்தை அடக்கித் தவஞ் செய்கின்றார்கள் முனிவர்கள். மனையிலே அடங்கியிருந்து அன்பு நெறியிலே அறக்கடன்களை ஆற்றுகின்றார்கள் கற்புடை மகளிர்கள். மறைந்து வாழும் முனிவர்களுடைய தவவலிமையையும் மனையிலே அடங்கிவாழும் மகளிரின் கற்பு மேம்பாட்டையும் உலகம் அறிவதில்லை. ஆயினும் ஒரு காலத்தில் அவ்விருசாரரது ஆற்றலும் பெருமையும் உலகம் அறியவும் அறிந்து உய்யவும் வாய்ப்பு ஏற்படாமல் போவதில்லை. புகழையோ பொருளையோ விரும்பாத அவர் தம்பெருமையை இறைவன் உலகறியச் செய்து விடுகிறான். கண்ணகியும் கோவலனும் கவுந்தியடிகளும் நாடும் காடும் பல கடந்து ஐயகோட்டமொன்றினை அடைகின்றனர். அக்கோயிலிலுள்ள தெய்வத்திற்கு வேட்டுவர் வழிபாடு செய்கின்றனர். அப்பொழுது வேட்டுவ முதியாள் ஒருத்திமீது கொற்றவையாகிய அத்தெய்வம் ஆவேசித்து நின்று, அக்கோயிலின் ஒருபுறத்தே ஒதுங்கியிருந்த மூவரில் கண்ணகியைச் சுட்டிக்காட்டி, எல்லோருக்கும் அவளது உண்மைச் சிறப்பை எடுத்துக் கூறுகின்றது.

"கணவனொடிருந்த மணமலி கூந்தலை
இவளோ, கொங்கச்செல்வி குடமலையாட்டி
செந்தமிழ்ப்பாவை செய்ததவக் கொழுந்து
ஒருமா மணியாய் உலகிற் கோங்கிய
திருமா மணி"

என்று கூறிய தெய்வவாக்கு, கோவலனுக்கும் கவுந்தியடிகளுக்கும் கண்ணகியைப்பற்றிய உண்மைத்தன்மையை உணர்த்துகின்றது. ஆனால், கண்ணகிக்கு அவ்வார்த்தைகள் நகைவிளைக்கின்றன. "பேதுறவு மொழிந்தனள் மூதறவாட்டி" என்று கூறி நாணத்தால் கணவன் புறத்தில் ஒதுங்குகின்றாள்.

## கோவலன் உள்ளம்

கோவலன் தன் வாழ்க்கைத்

### இலக்கியச் சோலை

துணையான கண்ணகியின் சிறப்பினை அறிந்து உள்ளம் பூரிக்கிறான். அதே சமயத்தில் மாதவி குறித்து அவன் கொண்ட எண்ணமும் மாறுகின்றது. கவுந்தியடிகளின் உபதேசமொழிகளும் கண்ணகியின் பெருமைக்குணங்களும் கோவலன் மனத்தைத் திருத்திச் செம்மைப்படுத்தின. முன்பு மாதவி தன் காதலையெல்லாம் எழுதிய ஓலையை வசந்தமாலை என்னும் தோழியிடம் கொடுத்தனுப்ப, அவ்வோலையை வாசித்த கோவலன் மாதவியை நாடக மகளாகவும் அவளது வார்த்தைகளை வஞ்சகச்சூழ்ச்சியாகவும் இவ்வோலையிற் கண்டான். பின்னர், கண்ணகியோடும் கவுந்தியடிகளோடும் மதுரை நோக்கி வழிச்செல்லும் போது மதுரைக்கணித்தாயுள்ள மலர்ச் சோலையில் தங்கியிருக்கையில், கோசிகன் மூலமாக மாதவியனுப்பிய மற்றொரு கடிதத்தைக் கண்டான். ஆயின், அப்போது அவன் மனக்கண் முன் மாதவி நாடகமகளல்லள். அவளது கடிதம் வஞ்சகக்கடிதமுமன்று. தந்தையினிடத்து ஒரு மைந்தன் வைக்கும் அன்பினையும் பணிவினையும் மாதவியினிடத்திற் கண்டான். "அவள் தீதிலள்" என அவனுள்ளம் கூறியது. மாதவி தனக்கு எழுதியனுப்பிய கடிதத்தை வாசகம் மாற்றாமல் அவன் தன் தந்தைக்குக் கொடுக்குமாறு அனுப்பினான். எனவே, தீய நெறியிலே சென்று அழுந்தி நின்ற கோவலனை அத்தீய நெறியினின்றும் விலக்கி அவனுள்ளத்தையும் உயர்ந்த நெறியை நாடவும் விரும்பவும் செய்தது யாது? கோவலன் மாதவியை வெறுக்காமல் பொதுநோக்கோடு காணத்தக்கவாறும், கண்ணகியின் உண்மைப் பண்பை உவந்து காணத்தக்கவாறும் அவனது உள்ளக் கண்களைத் திறந்தது யாது? அது கண்ணகியின் கற்புள்ளமேயாகும்.

## கண்கண்ட தெய்வம்

சமணர்கள் துறவு வாழ்க்கையையே விரும்புபவர்கள்; மேன்மையானதெனவும் கூறுபவர்கள். இல்லறவாழ்க்கையை அவர்கள் இகழ்ந்து விலக்குபவர்கள். சமணநெறியில் துறவியாய் வாழ்ந்து சபிக்கவும் அருளவும் வல்லவராய் விளங்கிய கவுந்தியடிகள் கண்ணகியை நினைந்து நினைந்து வணங்குபவர் போல் உள்ளம் குழைகின்றார். அவளது தெய்வ இயல்பை பிறர்க்கு வெளியாகக் கூறவும் அவர் பின்னிற்கவில்லை. மதுரையில் மாதரி என்னும் இடைய முது மகளிடம் அடைக்கலமாகக் கொடுக்கும் போது கவுந்தியடிகள் கண்ணகியைப்பற்றி சொல்வன அவரது மதிப்புமிக்க கருத்தினை எடுத்துக் காட்டுகின்றது.

"இன்துணை மகளிர்க்கு இன்றியமையாக
கற்புக்கடம் பூண்ட இத்தெய்வ மல்லது
பொற்புடைத் தெய்வம் யாம் கண்டிலமால."

கண்ணகியைப் பெண்மகளல்லளெனவும் கண்கண்ட தெய்வமெனவும் கவுந்தியடிகளாகிய துறவியரின் வாக்கால் இளங்கோவடிகள் உணர்த்துவதன் மூலம் இல்லறத்தின் பெருமையையும், இல்லறத்தை நல்லறமாக்கும் மங்கையரின் மாண்பையும் உலகறியத்தக்கவாறு குன்றின் மீதிட்ட விளக்காக்கினர்.

# மணிக் குழந்தை

— சாலை இளந்திரையன் —

பேருலகே, நீ எனது மணிக்குழந்தை:
பெருவியப்பும் அருமகிழ்வும் நல்கு வாய் நீ!
ஆரிடத்தும் தனிக்கொள்ளா அன்பை உன்மேல்
அள்ளி அள்ளிச் சொரிகின்றேன் தாயன்றோநான்?

நீ வீழ்ந்தால் என்னிதயம் பதறும் உன்னை
நேர்நிறுத்த எத்துடிப்புத் துடிப்பேன் பிள்ளாய்!
ஈவீழ்ந்த புண்ணாகும் என்றன் உள்ளம்
என்னுலகே உன்முகத்தில் கண்ணீர் கண்டால்!

நான்சொன்ன படிகேளாய்; அப்போதும், என்
தலையடித்துக் கொள்வதல்லால் உன்னைத் தீண்டேன்
"ஏன் பிள்ளாய் இப்படிநீ செய்தாய்?" என்பேன்
ஏறுட்டும் பாராய் நீ; - வெறுக்க மாட்டேன்!

"வீழ்ந்தாலும் எழுந்திடுவாய்; நடக்கக் கற்று
வீரத்தில் ஊறிடுவாய்" என்றென்றே, நீ
தாழ்ந்தாலும் நம்பிக்கை தளர்ந்திடாமல்
தனியன்பை ஊட்டுகின்றேன்! ஏனிப் பாசம்?

தேனெடுத்து நிற்கின்ற மலரைக் கிள்ளிச்
சிறுகாலால் மிதிக்கின்ற குழந்தை போலே
நானளிக்கும் கருத்தைஎலாம் நசுக்கு வாய் நீ!
தன்மானம் பாராட்டேன்; - எடுத்தணைப்பேன்!

இப்பக்கம் நில்லென்றால் அங்கே போவாய் :-
எதையேனும் உருட்டிடுவாய், போட்டுடைப்பாய்!
வெப்பத்தை மனத்துக்குள் ஆற்றிக் கொண்டே
விழிநிறைந்த பரிவுடனே உன்னைப் பார்ப்பேன் ...

பலகோடி மனக்குறும்பும் இணைந்து வந்த
படுகுறும்பே, என் அகந்தை கரைந்து தேய, -
"நலமோங்க நீவாழ வேண்டும் கண்ணே"
என்றன்றோ நனைகின்றேன் விழியின் ஓரம்!

ஏனிந்தப் பேராசை உன்றன் மீதில்?
எனக்குமுனக் கும்உறவு கற்பித் தோர்யார்?
நானிங்கே :- நீஎங்கும்! நமக்குள் அன்பு
நாட்டுதற்கு யார்வேண்டும்? நாம்போதாதோ?

# புகழ் மண்டபத்தில் அமெரிக்க அறிஞர் தோரோ

**புகழ் பூத்த அமெரிக்க பெரியார்களின் சிலைகள் நியூயோர்க் நகரிலுள்ள "புகழ் மண்டபம்" என அழைக்கப்படும் தேசிய நினைவாலயத்தில் வைக்கப்பட்டுள்ளன. அவ் வரிசையில் இம் மாதம் ஹென்றி டேவிட் தோரோ என்ற அமெரிக்க இலக்கிய அறிஞரும் இடம்பெறுகிறார். அவர் காலமாகி இம்மாதம் நூற்றாண்டு முடிகிறது.**

புகழ் மண்டபத்தில் அறிஞர் தோரோ 87 வது அமெரிக்க பெரியாராக சேர்க்கப் படுகிறார். கவிஞரும் கட்டுரையாளருமாகிய தோரோ ஹார்வாட் பல்கலைக் கழகத்தில் கற்றுப் பட்டம் பெற்றவர். சிறிது காலம் நில அளவையாளராகப்பணியாற்றியவர். வாழ்நாள் முழுவதும் தத்துவக் கலைஞராக விளங்கியவர், லோகாயத வாழ்க்கையை ஓயாது எதிர்த்தவர் – உலகத்தில் ஒரு மூலையிலிருந்து அவர் பேசிய தத்துவம் - அமைதியான சட்டமறுப்பு - உலகம் முழுவதும் பரவியுள்ளது.

"சட்ட மறுப்பு" என்னும் தலைப்பில் தோரோ எழுதிய கட்டுரை மகாத்மா காந்தியை கவர்ந்த ஒன்றாகும்.

தோரோ படைத்த மிகச் சிறந்த இலக்கியத்தின் பெயர் "வால்ட்டன்". அது 150 பதிப்புகளில் பல மொழிகளில் வெளியாகியுள்ளது. அது அமெரிக்க இலக்கியத்தின் மாபெரும் நூல்களில் ஒன்று எனக் கருதப்படுவது.

## இலட்சியவாதி

1817 ஆம் ஆண்டில் தோரோ பிறந்தார். இயற்கையைக் கூர்ந்து நோக்கி ஆராய்வது அவரது வழக்கம். கணக்குப் பார்த்து விவேகமாக விவசாயம் செய்யும் திறமை அவருக்கு உண்டு. எனினும், அவர் கனவுலகத்தில் வாழ்ந்த இலட்சியவாதியாகவும் விளங்கினார். இந்தியத் தத்துவத்தை அவர் கற்றிருந்தார். அதில் அவர் மனம் தோய்ந்திருந்தது.

கல்லூரியில் படித்த காலத்திலேயே அவர் ஹிந்து நூல்களைப் படிக்கத் தொடங்கியதாகத் தெரிகிறது. "வால்ட்டன்" என்னும் அவரது புத்தகத்தில் இந்திய இலக்கியத்தின் மேற்கோள்கள் இருக்கின்றன. பகவத் கீதை தம்மை மிகவும் கவர்ந்துள்ளதாக அவர் கூறியுள்ளார். "கான்கார்டு" "மெரிமாக் ஆறுகளில் ஒரு வாரம்" எனும் தனது பிற்கால நூல் ஒன்றில் தோரோ பகவத்கீதையைப் பற்றி தமது ஐயப்பாடுகளையும் தெரிவிக்கிறார். கொலை நியாயமானது தான் என்று பகவத் கீதை சொல்லுவது போல் தோன்றுவது சரியா என்னும் வினா எழுப்பியுள்ளார் அவர். காந்தியைப் போல அநியாய சட்டத்தை அஹிம்சை முறையில் எதிர்க்கலாம் என்று கூறியவர் தோரோ.

இயற்கை, சமூகம், மனிதன் பற்றிய சிறந்த கருத்துக்களை அவர் எழுதிவைத்திருக்கிறார். இயற்கை கற்பிப்பதைக் பயிலும் பொருட்டு, வேண்டுமென்றே அவர் காடுகளில் வாழ்ந்ததாக அவர் எழுதியிருக்கிறார்.

## புகழ் மண்டபம்

நூற்றாண்டுக்கு முன்பு தோரோ கூறியவை இன்றும் மிகப் பொருந்தும். "மக்கள்

(4-ம் பக்கம் பார்க்க)

# விநோதனின் சாகசம்

இது விநோதன் என்ற ஒரு பொம்மையின் கதை.

இது சிறுவர்க்காக எழுதப்பட்ட சுவையுள்ள கதை. ஆனால் சிந்தனையை வளர்க்கக் கூடியது. சிறுவர் மனத்தை நன்கு கவரக் கூடியது. பெரியவர்களுக்கும் விருந்தாயிருக்கலாம்.

‘சோமசன்மா’

## I

முன்னொரு காலத்திலே...... “ஒரு ராஜா இருந்தார்” என்று சொல்லப்போகிறீர்கள். வேண்டாம் என் செல்வச் சிறுவர்களே அது தவறு. முன்னொரு காலத்திலே ஒரு மரத்துண்டிருந்தது.

அது அவ்வளவு நல்ல மரத்துண்டுமல்ல. சாதாரண மரத்துண்டு. அடுப்பங்கரையில் நெருப்பு மூட்ட எரிக்கும் விறகுத்துண்டு தான். மாரியில் குளிர் காய்வதற்கு நெருப்பிலே எடுத்துப்போடும் சாதாரண விறகுக்கட்டை தான்.

ஒரு நாள் — அது எப்படி நிகழ்ந்ததென்பதைச் சொல்வதற்கில்லை — ஒரு நல்ல நாள் இந்த விறகுத்துண்டு அந்தோனியென்ற வயது போன தச்சன் கடையில் கிடந்தது. இந்த மனிதனுக்குப் பதிவுப்பெயர் அந்தோனி தான். ஊரிலே வழங்கும் பெயர் மாம்பழம். ஏனென்றால் அவனுடைய மூக்கு மாம்பழம் போல வளைந்து சிவந்திருக்கும்.

மாம்பழம் இந்த விறகுத்துண்டைக் கண்டதும் மிக்க மகிழ்ச்சியடைந்தான். இரண்டு உள்ளங்கையையும் சேர்த்துக் கசக்கிச் சந்தோஷத்தினால் தனக்குள் சொல்லிக்கொண்டான். “இது நல்ல நேரத்தில் கிடைத்தது. நான் என் சிறு மேசைக்கு ஒரு கால் செய்யவேண்டுமென்று நினைத்துக்கொண்டிருந்தேன் ”

ஒரு கணப்பொழுதும் தாமதியாமல் மாம்பழம் கோடரியை எடுத்தான். மரக்கட்டையின் பட்டையை உரித்து மரத்தை அழகான மேசைக்காலாகச் செய்ய எண்ணினான். கோடரியை மேலே உயர்த்தி முதல் வெட்டுப் போடுஞ்சமயம், மிகச் சிறிய குரலில் யாரோ “மிச்சம் அடிக்காதே என்னை ” என்று கூறுவது கேட்டது. தச்சனின் கோடரி உயர்த்திய படியே நின்றது. மாம்பழம் ஆச்சரியமடைந்தான். அவனுக்குப் பயம் உண்டானது. எங்கேயிருந்து இந்தச் சத்தம் வந்திருக்குமென்று எண்ணிக் கடையைச் சுற்றிப்பார்த்தான். ஒருவரையும் காணவில்லை. தான் இருந்த வாங்குக்குக் கீழே பார்த்தான். ஒருவருமில்லை. எப்பொழுதும் தான் பூட்டிவைத்திருக்கும் அலுமாரியைத் திறந்து பார்த்தான். அங்கேயும் ஒருவரையும் காணவில்லை. மரத்தூசும் கட்டைகளும் போடும் கூடையில் பார்த்தான்; ஒருவருமில்லை. கடைக் கதவைத் திறந்து வெளியே பார்த்தான் ஒருவருமில்லை. “யார் சத்தமிட்டவர்”

“சரி தான் ” என்று சொல்லிக்கொண்டு தலையைச்சொறிந்தபடி சிரித்தான். நான் கனவுதான் கண்டிருக்கவேண்டும். இதுமனப்பிராந்தி. வேலையைப் பார்ப்போம். ”

கோடரியை மறுபடியும் எடுத்து அந்த மரத்துண்டை வெட்டினான்.

“ ஐயோ, நோகிறதே ” என்று அதே சிறிய குரல் சொன்னது.

இம்முறை மாம்பழம் இடி விழுந்தவன் போல் பிரமித்துப் போனான். பயத்தினால் விழி பிதுங்கிற்று. வாய் “ஓ” வென்று திறந்தது. நாக்கு நாடியை நோக்கித் தொங்கிற்று — வேழப் பொம்மை போல.

மூச்சுத்தெளிந்து பேச்சு வந்ததும் வாய் படபடக்க நடுங்கிக்கொண்டு அவன் சொன்னான். “ ஐயோ என்று அந்தச் சின்னக்குரல் எங்கிருந்து வந்தது ? இங்கே உயிருள்ள ஒரு பிராணியையுங் காணவில்லையே. ஒரு சமயம் இந்த மரக்கட்டைதான் குழந்தைகளைப் போல அழவும் முனுமுனுக்கவும் பழகிக்கொண்டதோ, என்றால் நம்பவே முடியாது. இந்த மரக் கட்டையா ? இதிலென்ன விசேஷம்; மற்றும் மரக்கட்டைகள் போலத்தானே. நெருப்பிலே போட்டால் தண்ணீரைச் சுடவைக்கும். ஒருவேளை யாராவது உள்ளே ஒளித்திருக்கிறார்களா ? அப்படியானால் ஆசாமிக்குத்தான் கெடுதி ”

இவ்வாறு சொல்லிக்கொண்டு அந்த விறகுத்துண்டை இரண்டு கையாலும் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு, தயவு தாட்சண்யமின்றிச் சுவரில் அடிக்கத் துவங்கினான்.

பின்னர் அடிப்பதை நிறுத்தி யாராவது சத்தமிடுகிறார்களா என்று கவனித்தான். இரண்டு நிமிடம் கவனித்தான். ஒன்றுமில்லை. ஐந்து நிமிடம் கவனித்தான், ஒருவருமில்லை. பத்து நிமிடம் பார்த்தான். அப்பவும் ஒரு சத்தத்தையும் காணவில்லை.

“ஓகோ, அந்தச் சிறிய குரல் ஐயோ என்று சொன்னதே அது என்னுடைய மனப்பிராந்திதான் ” என்று உரக்கக்கூறித் தலையைச் சொறிந்துகொண்டு உரக்கச் சிரித்தான். “ சரி நம்ம வேலையைப் பார்ப்போம் ”

இருந்தும் அவன் மனதில் பெரிய பயமுண்டானது. அதை மறப்பதற்காகப் பாடிக்கொண்டான்.

இதற்கிடையில் கோடரியைப் போட்டுவிட்டுச் சீவுளியை எடுத்து மரத்துண்டைச் சீவிமட்டமாக்கினான். சீவுளி மேலுங்கீழுஞ் சீவிக்கொண்டிருக்கும் போது அந்தச்சிறிய குரல் சிரித்தபடி “ நிறுத்து: நீ என்னைக் கூச்சங் காட்டுகிறாய் ” என்றது.

மாம்பழம் இடி விழுந்தவன் போலக் கீழே சரிந்தான். கண்ணை விழித்துப் பார்த்த பொழுது அவன் நிலத்திலேயிருப்பதை உணர்ந்தான்.

அவனிடத்துப் பெரிய மாற்றமுண்டானது. பார்த்தவர்கள் அவனை இன்னாரென்று சொல்ல முடியாதபடி மாறிவிட்டான். மாம்பழம் போலச் சிவந்த அவனுடைய மூக்குக் கூடப் பயத்தினால் நீலநிறமடைந்திருந்தது.

## II

அப்போது யாரோ கதவிலே தட்டுஞ்சத்தம் கேட்டது.

“உள்ளேவாருங்கள்” என்று தச்சன் சொன்னான். ஆனால் எழுந்து செல்வதற்கு அவனுக்குப் பலமில்லை.

கட்டையான ஒரு வயோதிபர் வந்தார். சுறுசுறுப்பான ஆள். அவருடைய பெயர் நாகப்பா. ஆனால் அயலிலேயுள்ள சிறு பையன்கள் அவருக்குக் கோபமூட்டுவதற்காக ‘அப்பச்சட்டி’ என்று ஒரு பட்டப் பெயரும் வைத்திருந்தார்கள். அவர் தலையிலே கட்டிய தலைப்பாகை அப்பஞ்சுடும் சட்டிபோலவிருந்ததால் அந்தப் பெயர்.

நாகப்பாவுக்கு மூக்கு நுனியிலே கோபம் எப்பொழுதும் தாண்டவமாடும். யாராவது அப்பச்சட்டியென்று சொல்லிவிட்டால் போதும்; அவர் சந்நதங் கொள்ளுவார். பிறகு அவரை ஒருவராலும் அடக்க முடியாது.

“வணக்கம், அந்தோனியாரே அங்கே என்ன செய்து கொண்டிருக்கிறீர்” என்றார் நாகப்பா.

“நானா? நான் இந்த எறும்புகளுக்கு எழுத்துச் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்கிறேன்”

“சொல்லிக் கொடுங்கள் அது உங்களுக்கும் எவ்வளவோ நல்லது.”

“உங்களை யார் இங்கே கொண்டு வந்தார்கள் நாகப்பரே.”

“என் கால்கள் தான். அதிருக்க, அந்தோனியாரே; உங்களிடம் எனக்கு ஒரு உதவி தேவை.”

“சொல்லுங்கள். இந்தக் கட்டை அதைச்செய்துதரும்.” என்று சொல்லிக் கொண்டே தச்சன் எழும்பினான்.

“காலையில் நான் ஒரு யோசனை செய்தேன்.”

“அதைத்தான் சொல்லுமேன்.”

“நூதனமான மரப்பொம்மை செய்யப் போகிறேன். அது நாட்டியமாடும் சண்டை போடும், காற்றிலே கரணம் போடும். அதை எடுத்துக் கொண்டு நான் ஒருக்கால் உலகமெங்குஞ் சுற்றிவர வேணும்.

ஏதோ வயிற்றுக்குப் பிழைத்துக் கொள்ளலாம் பாருங்கோ? நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்.”

“அப்பச் சட்டிக்கு ஜே!” என்று முந்திய அதே சிறிய குரல் சொன்னது.

தன்னை அப்பச்சட்டி என்று சொல்வதைக்கேட்ட நாகப்பாவுக்கு மூக்கு முட்டக் கோபம் வந்துவிட்டது. கண்ணெல்லாஞ் சிவந்து வாய் துடித்தது. உடனே தச்சன் மீது பாம்பு போலச் சீறி “நீ என்னை அப்படி ஏளனஞ் செய்யலாமா?” என்று கூறினான்.

“உன்னை நானா ஏளனஞ் செய்தேன்.”

“அப்பச் சட்டி என்று நீ தானே சொன்னாய்.”

“நான் சொல்லவில்லை.”

“அப்போ நானா சொன்னேன்; கேலி செய்தது நீ தான்.”

“இல்லை.”

“ஆமா.”

“இல்லை.”

“ஆமா.”

சொல்லு முற்றி அடிதடியில் முடிந்தது. தலைப்பாகையைப் பிடித்து இழுத்தார்கள். அடிபட்டார்கள்; கடிபட்டார்கள்; விறாண்டுப்பட்டார்கள்!

சண்டைமுடிவில், நாகப்பரின் தலைப்பா, அந்தோனி கையிலிருந்தது. அந்தோனியின் சின்னஞ் சிறு குடுமிமயிர் முழுவதுமே நாகப்பருடைய பற்களிடையே விளங்கிற்று.

“என்னுடைய தலைப்பாவைக் கொடு” என்றார் நாகப்பர்; “நீ என் குடுமியைக் கொடு” என்றார் அந்தோனி; கடைசியில் இருவரும் சமாதானஞ்செய்து கொண்டனர். “இனிமேல் உயிருள்ளவரை நாம் சண்டை செய்வதில்லை; ஆப்தநண்பராயிருப்போ”மென்று இருவரும் உறுதிசெய்து கொண்டார்கள்.

“நாகப்பா, என்னால் உங்களுக்கு என்ன ஆகவேண்டும். சொல்லுங்கள் என்று தச்சன் கூறினான். நான் ஒரு மரப்பொம்மை செய்ய வேண்டும். அதற்கு ஒரு சிறு மரத்துண்டு தருவாயா?”

அந்தோனிக்கு மனம் பூரித்தது. அவனுக்கு அத்தனை பயத்தை உண்டாக்கிய அந்த மரத்துண்டை எடுத்துக் கொண்டுவந்து நண்பனிடம் கொடுத்தான். கொடுக்கும் பொழுது அந்த மரத்துண்டு மிக வேகமாக அசையத் தொடங்கிற்று. அதனால் அது தச்சனுடைய கையிலிருந்து நழுவிவிழுந்து நாகப்பனுடைய காலில் மோதிக்கொண்டது.

“நல்ல வேலை செய்தீர்கள் அந்தோனியாரே! இந்த மாதிரி தானா ஒருவருக்கு கொடை கொடுக்க வேண்டும். இந்த மரத்துண்டால் என்னை அடித்தே விட்டீர்களே.”

“உண்மையாகவே சொல்லுகிறேன். நான் ஒன்றும் செய்யவில்லை.”

“ஓ! அப்போ நான் தான் செய்தேனா.”

“அதெல்லாம் இந்த மரத்துண்டின் தவறுதான் ... ”

“ஆமா ஆமா மரத்துண்டு தானே எனக்கு அடித்தது. ஆனால் நீங்கள் தானே அதை என் மீது வீசினீர்கள்.”

“நான் உங்கள் மீது வீசவில்லையே”?

“அது வெறும் பொய்.”

“நாகப்பரே, எனக்கு அவமானம் உண்டாக்காதேயும். அப்படிச் செய்தால் உம்மை நான் “அப்பச்சட்டி” என்று ஏசுவேன்.”

“உன்னைப் போல் மண்டு அல்ல நான்.”

“நீ அப்பச்சட்டி.”

“ஓ! கோவேறு கழுதையே.”

“குரங்குப் பயலே.” “அப்பச்சட்டி” மூன்றும் முறையாக அப்பச்சட்டி என்ற சொல்லைக் கேட்ட நாகப்பர் கோபாவேசம் கொண்டு தச்சன் மீது பாய்ந்தார்.

இந்த இரண்டாவது மகா யுத்தம் முதலாவது மகா யுத்தத்திலும் பார்க்க மிகக்கொடூரமாயிருந்தது. இரண்டாவது யத்தம் முடிந்ததும் அந்தோனியின் மூக்கிலே மேலும் இரண்டு காயம் உண்டானது.

நாகப்பர் சட்டையில் இரண்டே இரண்டு பொத்தான்கள் தான் உடைந்தன. இருவருக்கும் கணக்கு சரிசமனாய் இருந்தபடியால் ஒருவரையொருவர் கட்டித் தழுவிக்கொண்டு “இனிமேல் உயிர் உள்ளவரை நல்லசிநேகிதராய் இருப்போ” மென்று சபதம் செய்து கொண்டார்கள். பின்னர் நாகப்பன் அந்த மரத்துண்டை எடுத்துக்கொண்டு நொண்டி நொண்டி வீடு திரும்பினான்.

(அடுத்தஇதழில் முடியும்.)

# புகழ் மண்டபத்தில்....

(3ம் பக்கத் தொடர்ச்சி)

பலர் நம்பிக்கை இழந்து வாழ்கின்றனர்...... இவ்வளவு அவசரப்பட்டு நாம் ஏன் வாழ வேண்டும்? வாழ்க்கையை ஏன் வீணாக்க வேண்டும்.”

அரசாங்கத்தின் போக்கையும் சமூகத்தின் நிலையையும் அவரைப்போல கண்டித்தவர் அமெரிக்காவில் வேறு யாருமில்லை.

இக்கால அமெரிக்க வசன நடைக்கு வழிகாட்டியவர் இவர். புகழ்மண்டபத்தில் சேர்க்கப்பட்டுள்ள பத்தொன்பதாவது எழுத்தாளர் தோரோ. இலக்கிய அறிஞர் பலர் அடிக்கடி புகழ்மண்டபத்தில் சேர்க்கப்படுகின்றனர். அங்கு 17 இராஜதந்திரிகளின் சிலைகள் உள்ளன. அவர்களில் பன்னிரண்டு பேர் ஜனாதிபதிகள்.

புகழ் மண்டபம் 1920-ல் ஏற்பட்டது. அதை நிறுவியவர் டாக்டர் ஹென்ரி. எம். மெக்கிராக்கன் என்பவர். அக்காலத்தில் அவர் நியூயோர்க் பல்கலைக் கழக தலைவராய் இருந்தார். புகழ் மண்டபம் நியூயோர்க் பல்கலைக் கழகத்தின் பொறுப்பில்தான் இருக்கிறது. அப்பல்கலைக் கழகத்தின் மைதானத்தில் புகழ் மண்டபம் கம்பீரமான தூண்களோடு வரிசையாக பல பெரியார்களின் உருவச் சிலைகளோடும் நிற்பதைக் காணலாம்.

### தேர்தல்

ஐந்தாண்டுக்கு ஒரு தடவை புகழ் மண்டபத்துக்கு தேர்தல் நடக்கிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட தகுந்தவர்கள் அமெரிக்கப் பிரஜைகளாக இருக்கவேண்டும். அத்துடன் அவர்கள் காலமாகி குறைந்தது 25 ஆண்டுகளாவது முடிந்திருக்க வேண்டும். அமெரிக்காவின் வரலாறு, பண்பாடு, வளர்ச்சி ஆகியவற்றிற்கு அவர்கள் அழியாத தொண்டு செய்திருக்க வேண்டும். எந்த அமெரிக்க பிரஜையும் • இன்னாரைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று குறிப்பிடலாம். பல்லாயிரக் கணக்கானவர்கள் அவ்வாறு செய்திருக்கிறார்கள். பல சங்கங்களும் பெயர்களைக் குறிப்பிடுகின்றன.

புகழ் மண்டபத் தலைவர் நியமிக்கும் சபையொன்று இறுதியாகத் தேர்ந்தெடுக்கிறது. புகழ் பெற்ற 147 பேர் கொண்ட சபை அது. உறுப்பினர்களாக இருப்பவர்கள் ஒவ்வொரு அமெரிக்க மாநிலத்தையும் சேர்ந்தவர்கள். அதில் பல்வேறு துறையின் பிரதிநிதிகளும் நியமிக்கப் படுகிறார்கள். ஏழுபேரை அவர்கள் தேர்ந்தெடுக்கலாம். ஆயினும் பெரும்பான்மை வாக்குகள் தேவை ஆதலால், பெரும்பாலும் மூவரைத்தான் தேர்ந்தெடுக்க முடிகிறது. சில பெயர்கள் பெரும்பான்மை வாக்குகள் பெறுவிட்டாலும் இருபது வாக்குகளுக்கு மேல் பெற்றிருக்கலாம். அடுத்த தேர்தலுக்கு இத்தகையவர்களின் பெயர்கள் கட்டாயமாக நியமிக்கப்படும்.

# தூங்கும்போதே படிக்கலாம் உடல் நலனையும் பாதியாது

மாணவர்களைத் தூங்க வைத்து அவர்களுக்கு வெளி நாட்டு மொழிகள் போதிக்க முடியுமா என்பது பற்றி காரகண்டாவை சேர்ந்த கஜாக் விஞ்ஞானி எ. எம். சவியத்தோஷ் ஆராய்ச்சிகளில் ஈடுபட்டு, தூங்கும் போது அதிக சிரமமின்றி பாடங்களைக் கற்றுக் கொள்ள முடியும் என்றும் அதனால் உடல் நலனுக்கும் எந்தத் தீங்கும் நேராது என்றும் கண்டுபிடித்துள்ளார். ஆழ்ந்த நித்திரையில் இருக்கும் போது கல்வி போதிக்க முடியும் என்று அவற்றின் மூலம் தெளிவாகியுள்ளது. கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக இவை போன்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள இவர் இந்த ஆராய்ச்சிகளின் முடிவுகளை அடிப்படையாகக் கொண்டு இயற்கைத் தூக்கத்தின் போது பேச்சுமொழி பயிலுதல் என்ற விஞ்ஞான ஆராய்ச்சி நூல் ஒன்றை எழுதியுள்ளார். இந் நூல் கஜாக் சோவியத் சோசலிசக் குடியரசு விஞ்ஞானப் பேரவையின் பதிப்பகத்தால் வெளியிடப்பட்டிருக்கிறது.

தூங்கும் போது பாடம் பயிலுவதால் மூளைக்கு எந்த அளவுக்குக் களைப்பு ஏற்படுகிறது என்பதை அறிய பல ஆண்டுகள் ஆராய்ச்சிகள் நடத்தினர். சாதாரண முறைப்படி பயிலும் போது ஏற்படும் களைப்பை விட தூங்கும் போது ஏற்படும் களைப்பு குறைவாகும் என்று இவர் கூறுகிறார். சுவையான இந்த ஆராய்சித் துறையில் மனவியல் நிபுணர்கள் பலரும் ஈடுபட்டு வருகின்றனர். இப்பிரச்னை குறித்து அறுதியிட்டு முடிவு கூற இன்னும் பல ஆண்டுகள் ஆகும் என்றாலும் கூட மனித ஆற்றலும் அறிவும் வளர்ச்சி பெறுவதற்குப் புதிய வசதிகளும் வாய்ப்புக்களும் விரைவில் தோன்றிவிடுமென்பது தெளிவாக விளங்குகிறது. விஞ்ஞானத்தின் வாயிலாக சேகரிக்கப் பட்டுள்ள அளவு கடந்த அறிவை வருங்காலத் தலைமுறையினர் விரைவில் கிரகித்துக் கொள்வதற்கான புதிய வழிகள் உருவாக்கப் படும் என்பதில் ஐயமில்லை.

# ராஜன்பாபு ஓய்வு பெறும் ஸதாகத் ஆச்சிரமம்

## 'அன்று இந்திய விடுதலை இயக்கத்தின் அச்சாக இருந்த ஆச்சிரமம், இன்று சர்வோதய ஒளிபரப்பும் ஆலயம்'

இந்திய ராஷ்டிரபதியாக விளங்கிய ஸ்ரீ ராஜேந்திரப்பிரசாத் ஓய்வாக இருப்பதற்கு பீகார் ராஜ்யத்தில், பாட்னுவுக்கருகில் உள்ள ஸதாகத் ஆச்சிரமத்துக்குச் செல்லுவார் என்று தெரிகிறது. 'ஸதாகத்' என்பதற்கு உண்மை என்று பொருளாகும். இந்த ஆச்சிரமம் நாட்டு விடுதலைக்காகவும், நாட்டு முன்னேற்றத்துக்காகவும் 1920-ம் வருடத்திலிருந்து பாடுபட்டு வந்துள்ளது. மகாத்மாகாந்தி இங்கு பல தடவைகள் தங்கி இதன் நடைமுறைகளைப் பற்றி அரிய ஆலோசனைகளைக் கூறியிருக்கிறார்.



1921-ம் ஆண்டில் காந்திஜி ஒத்துழையாமை இயக்கத்தை ஆரம்பித்த காலத்தில், இந்த இயக்கத்தை வெற்றிகரமாக நடத்துவதற்குப் பல ஆச்சிரமங்கள் ஆரம்பிக்கப்பட்டன. அவற்றில் ஒன்றே இந்த 'ஸதாகத்' ஆச்சிரமமாகும்.

1920-ம் ஆண்டின்பிற் பகுதியில் கல்கத்தாவில் நடந்த இந்திய தேசிய காங்கிரஸின் விசேஷ கூட்டத்தில் ஒத்துழையாமை இயக்கத்தைக் குறித்து தீர்மானம் செய்யப்பட்டது. இது 1920-ல் நடந்த நாக்பூர் காங்கிரஸில் பிரேரிக்கப்பட்டு, ஒரு தேசிய இயக்கமாக ஒப்புக் கொள்ளப்பட்டது.

கல்கத்தா கூட்டம் முடிந்த பின், ஒத்துழையாமை இயக்கத்தில் ஆர்வம் கொண்ட 50-பாட்னு பொறியியல் பள்ளிக்கூட மாணவர்கள் பள்ளிக்கூடத்தை துறந்துவிடத் தீர்மானித்தனர். இவர்கள் பெருந்தலைவரான மௌலானு மஜருல் ஹக்கிடம் சென்று, அவரிடம் சிஷ்யர்களாக அமர்ந்து, நாட்டின் விடுதலைக்கான காரியங்களில் ஈடுபட ஆரம்பித்தனர்.

### ஆச்சிரம விஸ்தரிப்பு

ஸதாகத் ஆச்சிரமம் பாட்னுவிலிருந்து இரண்டுமைல் மேற்காக அமைந்துள்ளது. முன்பு இதற்கு 3-பர்லாங்கு தூரத்திலேயே ஒரு சிறு கிராமம் இருந்தது. இன்று புதிய காலனிகள் ஆச்சிரமத்துக்கு அருகில் அமைககப்பட்டுள்ளன. பாட்னு நகர் இன்று விஸ்தாரமடைந்து கொண்டே வருகிறது.

இங்கு வந்து மௌலானு வசிக்க ஆரம்பித்த பின் புதிய கொட்டகைகள் போடப்பட்டன. இந்தக் கொட்டகைகளில் சர்க்காக்களை இளைஞர்கள் செய்தனர். சிறிது காலத்துக்குப் பின் "மதர்லண்ட்" என்ற ஆங்கில வார இதழை மௌலானு வெளியிட ஆரம்பித்தார்.

1921-ல் ஒத்துழையாமை இயக்கம் ஆரம்பிக்கப்பட்ட பின் ஏராளமான மக்கள் தங்கள் கல்லூரிகளைப் பகிஷ்கரித்துவிட்டு, தலைவர்களின் புத்திமதிப்படி நடக்க விரைந்து வந்தனர். இவர்களுக்கு கல்வி போதிப்பதற்காக ஆச்சிரமத்தில் ஒரு தேசிய கல்லூரி திறக்கப்பட்டது. இது பூனுவிலுள்ள பெர்குஸன் கல்லூரியின் மாதிரியில் அமைக்கப்பட்டது. பாட்னு பி.என்.கல்லூரி பேராசிரியர் ஆச்சாரிய பத்ரிநாத் வர்மா, தமது வேலையை ராஜினுமா செய்துவிட்டு இக்கல்லூரியின் பொறுப்பை ஏற்றுக் கொண்டார், பாட்னு-கயாரா உள்ள கட்டடத்தில் இந்தக் கல்லூரி செயற்பட்டது.

### வித்தியாபீட அமைப்பு

பாட்னுவுக்கு 1921 பெப்ரவரி மாதத்தில் வந்த காந்திஜி, ஒரு தேசிய பல்கலைக் கழகத்தை ஆரம்பிக்கலாம் என்று ஆலோசனை கூறினர்.

இந்த வித்தியாபீடத்தின் ஆரம்ப செலவுகளுக்காக அவர் ரூ 55,000 கொடுத்தார். இந்தப் பல்கலைக் கழகத்துக்கு, அத்தியட்சகராக மௌலானுவும், உப அத்யட்சகராக ஸ்ரீ பிரோஜ்கிஷோர் பிரசாதும், பதிவாளராக டாக்டர் ராஜேந்திரப் பிரசாத்தும், துணை பதிவாளராக ஸ்ரீ ஆச்சார்ய பத்ரிநாத்வர்மாவும் பதவி ஏற்றனர். உதவி அத்தியட்சகராக பின்னல் ஸ்ரீ பிரசாத் பதவி ஏற்றிருந்தார். ஒருவருட காலத்திற்கு வாடகைக் கட்டிடத்தில் இருந்த கல்லூரி 1922-ம் ஆண்டில் ஸதாகத் ஆச்சிரமத்தில் புதிதாகக்கட்டப்பட்ட, கட்டிடங்களுக்கு மாற்றப்பட்டது.

அந்தக் காலத்தில் பிரதேச காங்கிரஸ் கமிட்டியின் அலுவலகம் பாட்னுவில் ஒரு வாடகைக் கட்டடத்தில் இயங்கி வந்தது. இவ்விடத்திலும், ஸதாகத் ஆச்சிரமத்திலுமாக ஸ்ரீ பிரோஜ்கிஷோர் பாபுவும், டாக்டர் ராஜேந்திரப் பிரசாத்தும் வசித்து வந்தனர். 1924 ம் ஆண்டில் பிரதேச காங்கிரஸ் அலுவலகம் ஸதாகத் ஆச்சிரமத்துக்கு மாற்றப்பட்டது. இதன் பின் ஸ்ரீ கிஷோரும், ஸ்ரீ பிரசாத்தும் ஆச்சிரமத்திலேயே நிரந்தரமாகத் தங்கினர். இச் சமயத்தில் மௌலானு மஜ்ருல்ஹக், தமது தலைமைக் காரியாலயத்தை சப்ரா நகரத்துக்கு மாற்றிக் கொண்டார். பிறகு உடல் அசௌக்கியத்தின் காரணமாக அவர் தீவிர அரசியலிலிருந்து விலகிக் கொண்டார். சரண்மாவட்டத்திலுள்ள பரித்பூர் கிராமத்தில் அவர் தங்கி ஓய்வெடுத்துக் கொண்டார்.

### மகாவித்தியாலயம்

ஸதாகத் ஆச்சிரமம் பிரிட்டிஷ் அரசாங்கத்தால் 1932-லிருந்து 1934 வரை, 1942ஆகஸ்டிலிருந்து 1945-ம் ஆண்டுவரை இருமுறை பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

1946-ம் ஆண்டில் வித்யாபீடம், கிராம கைத்தொழில் சேவகர்களுக்கு பயிற்சிதரும் நிலையமாகமாற்றப்பட்டது. இதுவன்றி கதர் கிராமத் தொழில் கமிஷனுல் நடத்தப்படும் வட்டார அபிவிருத்தி அதிகாரிகளுக்கான பயிற்சி தர ஒரு மஹா வித்யாலயமும் இங்கு உள்ளது.

கிராமக் கைத் தொழில்களான, காகிதம் செய்தல், வல்லம் காய்ச்சுதல் தச்சுவேலை, நூற்றல், சோப் செய்தல், தீக்குச்சி செய்தல், எண்ணெய் ஆட்டுதல், மட்பாண்டங்கள் செய்வது, கைக்குத்தல் அரிசி குத்துவது இவைகள் இந்த ஆச்சிரமத்தில் நிதரிசனமாக செய்து காட்டப்படுகின்றன. இப்போது பிரதேச காங்கிரஸ் கமிட்டியின் காரியாலயம் ஆச்சிரமத்துககு ஒருபர்லாங்கு தூரம் தள்ளியுள்ள ஒரு கட்டிடத்துக்கு அகற்றப்பட்டுள்ளது.

ஸதாகத்ஆச்சிரமத்தில்1946ம் ஆண்டு வரை டாக்டர் ராஜேந்திரபிரசாத் தங்கி வந்திருக்கிறார். நமது தேசிய அரசாங்கத்தில் பதவியேற்க அவ்வாண்டில் அவர் இதை விட்டு வெளியேறினர். இப்போது தமது ஓய்வு காலத்தை அவர் ஸதாகத் ஆச்சிரமத்திலேயே கழிப்பதென்று தீர்மானித்திருக்கிறார்.

"பீஹாரின் அரசியல் எழுச்சியின் அச்சு" என்று கூறப்படக் கூடிய இந்த ஆச்சிரமத்துக்கு ராஷ்டிரபதி செல்லுவது மிக பொருத்தமானதே.

இப்போது, இந்த ஆச்சிரமம் இருக்கும் நிலம் கெய்ருமியானிடமிருந்துஅதிக விலைகொடுத்து வாங்கப்பட்டுள்ளது. 35 ஏக்கர் நிலப் பரப்பைக் கொண்ட இந்த ஆச்சிரமம், ஸ்ரீ ராஜேந்திரப் பிரசாத்தின் வருகையால் இன்னும் முக்கியத்துவம் பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நம் நாட்டில் இப்போது முக்கியத்துவத்தை அடைந்துள்ள சர்வோதய இயக்கம் இந்த ஆச்சிரமத்தின் மூலம் விருத்தி அடையும் என நிச்சயமாக எதிர்பார்க்கலாம்.

# சிறுவர் 'மள மள' வென வளருகின்றனர்

## ஹார்மோன்களே காரணம்

சிறுவர் சிறுமிகள் முன்பிருந்த சந்ததியைச் சேர்ந்த சிறுவர்களைவிட "மள மள" வென்று வளர்ந்து வருகிறார்களாம். இதற்கு காரணங்கள் என்ன?

பிரெஞ்சு நிபுணர் ஒருவர் குடிக்கும் தண்ணீரிலுள்ள ஹார்மோன்களே இதற்குக் காரணமென்கிறார்.

பள்ளிக்கூடக் குழந்தைகள் அதிக வளர்ச்சியைப் பெற்று வருகிறார்கள் என்று அவர்களின் பெற்றோர்களே கூறுகிறார்கள். இதனல் "சிறுவர்கள் பிஞ்சிலேயே முதிர்ச்சியடைந்துவிடுகிறார்கள்" என்று அர்த்தமில்லை என்றும் ஆனல் அதிக உயரமாக வளருகிறார்கள் என்றும் கூறப்படுகிறது. இதை விஞ்ஞானிகள் "நீண்ட வளர்ச்சி" என்றும் துரித "வளர்ச்சி" என்றும் கூறுகிறார்கள்.

இம்மாதிரி வளர்ச்சிக்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. எனினும் விஞ்ஞானிகள் ஒரு திட்டவட்டமான முடிவுக்கு இன்னும் வரவில்லை. பெற்றோர்கள், விஞ்ஞானிகளுக்கு மட்டுமின்றி பள்ளிக்கூட அதிகாரிகளுக்கும் இது ஒரு பிரச்னையாக இருந்து வருகிறது. காரணம் வாங்கு, மேசை இவைகளைப் பள்ளிக்கூடச் சிறுவர்கள் உயரத்திற்கேற்ப மாற்றியமைக்கும்படி ஏற்படுவதே. உதாரணமாக மூனிச்சில் ஆரம்பக் கல்விக் குழந்தைகள் மூன்றில் ஒரு பங்கினருக்கு உயரமான வாங்கும் மேசையும் போடவேண்டியிருக்கிறது. 17 வயது மாணவர்களுக்கு 76 ஸெண்டிமீட்டர் மேசை போதிய அளவில் இல்லை.

இவ்வளர்ச்சிக்கான காரணங்கள் என்று பல சொல்லப்படுகின்றன. வெளிச்சத்தில் அதிகமாக உடம்பு படுவது ஒரு காரணமாக இருக்கலாமாம். உடல் வளர்ச்சி "ஹார்மோன்"கள் வெளிச்சம் படுவதால் அதிகரிக்கிறது என்று இதை ஆதரிப்பவர்கள் கூறுகிறார்கள். யுத்தகாலத்தில் வளர்ச்சியடையும் பருவத்திலுள்ள சிறுவர் சிறுமிகளுக்கு போஷாக்குள்ள உணவு கிடைக்கவில்லை. ஆகவே, அப்போது வளர்ச்சி குறைந்து வந்தது என்று கூறப்படுகிறது.

மக்கள் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்தில் இடம் மாறுவதும் ஒரு காரணமாக இருக்கலாம். இது பற்றி ஆராய்ச்சி நடத்திய மேற்கு ஜெர்மன் பேராசிரியர் தாமஸ் மனவளர்ச்சி அதிகம் இருந்தால் உடல் வளர்ச்சியும் அதிகமாக இருக்கும் என்று கூறுகிறார். கலப்பு இன வளர்ச்சியும் ஒரு காரணமாக இருக்கலாம் என்று கூறப்படுகிறது. நவீன காலத்தில் ஏற்பட்ட துரித போக்குவரத்து சாதனங்கள் இந்த இனக் கலப்புக்குப் பெரிதும் உதவியாக இருக்கிறது என்றும் கருதப்படுகிறது.

ஒரு பிரெஞ்சு ஆராய்ச்சியாளர் உடல் வளர்ச்சிக்கான ஒரு புதிய காரணத்தைக் கண்டு பிடித்திருக்கிறார். இது வரை கூறப்பட்ட எல்லாக் காரணங்களுக்கும் இது மாறுபட்டதாக இருக்கிறது. கழிவு நீரில் பல பொருள்கள் கலப்பதே இதற்கான காரணம் என்பது இவர் கருத்து.

உடல் வளர்ச்சிக்கான 'ஹார்மோன்கள்' இத்தண்ணீரில் உள்ளதென்றும், இது வடிகட்டும் போது தங்கி விடாமல் தண்ணீரிலேயே இருந்ததாகவும், இதுவே உடல் வளர்ச்சிக்குக் காரணமாக இருப்பதாகவும் இவர் கூறுகிறார். இது ஒன்றுதான் முக்கிய காரணமா என்பது திட்டவாகத் தெரியவில்லை. ஆனல் இது பற்றி மேற்கொண்டு ஆராய்ச்சிகளை நடத்த விஞ்ஞானிகளுக்கு வாய்ப்பு கிடைத்துள்ளது. இதன் மூலம் விரைவில் துரித உடல்வளர்ச்சிக்கான காரணம் ஏற்படலாம்.

# நமது நூல் நிலையம்

### நூற்றுண்டுகளில் தமிழ்

ஆசிரியர்: செந்தமிழ்க் கலைமணி கா. பொ. இரத்தினம், (தமிழாராய்ச்சித்துறைத் தலைவர், அரசகரும மொழித் திணைக்களம், இலங்கை.) வெளியீடு: இன்ப நிலையம், மயிலாப்பூர், சென்னை-4. விலை: ரூ. 5-00.

"மூப்பது நூற்றுண்டுகளுக்கு மேலாகத் தொடர்ந்து வளர்ந்துவரும் தமிழ்மொழி பன்னூற்றுக் கணக்கான புலவர்களுடனும், அவர்களுடைய பல்லாயிரக் கணக்கான இலக்கியப் படைப்புகளுடனும், கோடிக்கணக்கான தமிழ் மக்களின் வாழ்வுடனும் பின்னிப் பிணைந்துள்ளது. இவ்வாறு பிணைந்து பரந்து வளர்ந்துள்ள தமிழ்மொழியின் இலக்கிய வரலாற்றை வகுத்தும் தொகுத்தும் உரைப்பதே இந்நூலின் நோக்கமாகும்" என ஆசிரியர் தமது முன்னுரையில் தெரிவித்துள்ளார்.

நூற்றுண்டுகளாகப் பிரித்து கற்பிக்கும் முறை சிறந்தது என்ற முடிவையுடைய இந்நூலாசிரியர், இலக்கியப் படைப்புகளை ஆக்கித் தமிழை வளப்படுத்திய புலவர் பெருமக்கள் வாழ்ந்த காலப்பிரிவுகளை நூற்றுண்டுகளினுட்படுத்தி இவர்கள் ஆற்றிய பணிகளைச் சுருக்கமாக "நூற்றுண்டுகளில் தமிழ்" என்ற இந்நூலில் தந்துள்ளார்.

ஆசிரியரின் 'ஆய்வுரை' நூலின் திறவுகோலாக அமைந்துள்ளது. 'முன்னைப் பழமை'யை அடுத்து நூற்றுண்டுகளாக வகுக்கப்பட்டு நூற்றுண்டுக்கொரு அத்தியாயமாக 'இருபதாம் நூற்றுண்டு' (1961) வரை செல்கிறது. இவைகளையடுத்து சங்ககாலப் புலவர்கள், புலவர் அகரவரிசை, நூலகரவரிசை, ஏட்டகரவரிசை ஆதியனவும் பின்னுற் சேர்க்கப் பட்டுள்ளன. புலவர்களின் சமயங்களும், அவர்கள் செய்த தமிழ்த்தொண்டுகளும், ஒவ்வொரு நூற்றுண்டுத் தொடக்கத்திலும் தமிழ் நாட்டின் அரசியல் நிலைமையும் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளது.

"இலக்கிய வரலாற்றிலே புலவர்களுக்கும், அவர்களுடைய படைப்புகளுக்கும் கொடுக்கப்படும் இடத்தையும்மதிப்பையும் வரையறை செய்தலிற் கருத்து வேறுபாடுகள் தோன்றல் இயல்பே. எனினும், முழுதுமறிந்து, நடுநிலையில் நின்று முறையாக நோக்கின் ஒருமைப்பாட்டைக் காணல் சாலும்" என்றிடும் நூலாசிரியரின் கருத்து இந்நூலில் இழையோடுகிறது.

"தமிழ் மக்கள் இப்பொழுது பல நாடுகளில் வாழ்கிறார்கள். இவர்கள் தத்தம் நாடுகளிலே தமிழாக்கத்துக்காகப் பல பணிகளைச் செய்கிறார்கள். இப்பணிகளை எல்லாம் இணைத்து ஒருமுகப்படுத்தி வளர்க்கவும் உலகெங்குமுள்ள தமிழ் மக்களை ஒன்றுபடுத்தவும் 'உலகத் தமிழ் மாமன்றம்' என்னும் ஒரு நிலையம் இன்றியமையாதது" என்று தமிழார்வம் கொண்ட பண்டிதர் இரத்தினம் அவர்கள் காலத்திற்கேற்ற கருத்தொன்றையும் எடுத்துக்கூறி அதற்கான வேண்டுகோளையும் இறுதியில் விடுத்திருக்கிறார். இந்த ஆர்வமே இந்நூல் ஆக்கத்திற்குக் கால்கோளாக அமைந்துள்ளது. அத்தகைய இந்நூலை உலகமெங்கும் வாழும் தமிழ் மக்களுக்கு உரிமையாக்கியிருப்பது முற்றிலும் பொருத்தமாக இருக்கிறது.

ஆராய்ச்சித்திறன் படைத்த ஆசிரியர் நல்லமுறையில் ஆக்கியளித்திருக்கும் 350 பக்கங்களுக்கு மேலான இந்நூல், தமிழாராய்ச்சித்துறையில் ஈடுபடுவோருக்கும் மாணவர்களுக்கும் உபயோகமானது. பொது நூல்நிலையங்களிலும், கல்லூரிகளிலும் இருக்கவேண்டிய ஒரு நூல் இது.

### கப்பலோட்டி — செக்கிழுத்த செம்மல் வ.உ.சி.

எழுதியவர்: "ஈழவேந்தன்" விலாசம்: 15, சுவிசுத்தராம் வீதி, வெள்ளவத்தை. விலை: சதம் 10.

"சுதந்திரமே மூச்சாக, சுதேசிக் கப்பலோட்டிய சிதம்பரப் பிள்ளையின் வாழ்வு நம் வாலிபர் சமுதாயத்திற்கு கலங்கரை விளக்கமாக உரிமைத் துறை சேர உதவும் என்ற எண்ணமே தம்பி 'ஈழவேந்தனை' இச் சிறு நூலைப் படைக்கத் தூண்டியிருக்கிறது" என்று இந்நாலுக்கு அணிந்துரை வழங்கியிருக்கும் திரு. அ. அமிர்தலிங்கம் எம். பி. குறிப்பிட்டுள்ளார்.

'வண்டமிழை வாழ்வித்த மாவீரன் வன்னியசிங்கம் நினைவு வெளியீடான 14 பக்கங்களையுடைய இந்நூலின் அட்டையை அலங்கரிக்கிறது வ. உ. சி. யின் படம்.

**புத்தொளி:** ஆசிரியர்: கலை அழகு வெளியீடு: குருநகர் கலைக்கழகம், 19, சென். யேம்ஸ் வீதி, யாழ்ப்பாணம், தனிப் பிரதி சதம் 5.

குருநகர் கலைக்கழக வெளியீடாகிய 'புத்தொளி' புத்துயிரும் புத்துணர்வும் பெற விளையும் புதுமைப் பிரியர்களுக்குப் புத்துணர்ச்சி யூட்டப் பிறந்திருப்பது மகிழ்ச்சிக்குரியது. சமூக, பொருளாதாரத்துறைகளில் நாடு விருத்தியுறுவதற்கு இவ்வெளியீடு உழைத்துவருமென அறிந்து மகிழ்கின்றோம். சுவையான கட்டுரைகளும் இதன் கண் உள.

## அரசியல் அதிகாரம்

எனக்கு அரசியல் அதிகாரமே ஒரு குறிக்கோளல்ல. அது மக்களை எல்லாத் துறைகளிலும் முன்னேறச் செய்வதற்கு உதவக்கூடிய சாதனங்களுள் ஒன்றே.

அரசியல் அதிகாரமென்றால், நாட்டின் பிரதிநிதிகள் மூலம் தேசிய வாழ்க்கையை ஒழுங்கு பெற அமைக்கும் சக்தி என்று பொருள். தேசிய வாழ்க்கை தானே எல்லாவற்றையும் நடத்திக் கொள்ளும் அளவுக்குச் சிறப்படையுமானால், பிரதிநிதித்துவமே தேவையிராது. அப்பொழுது நல்லறிவுள்ள அராஜகம் நிலவும். அந் நிலையில் ஒவ்வொருவரும் தன்னைத் தானே ஆண்டு கொள்வார். எல்லோரும் தம் அயலாருக்கு எவ்வகையிலும் இடையூறு விளைவிக்காமல் தன்னைத் தானே ஆண்டுகொள்வர்.

எனவே, லட்சியஅரசாங்கத்தில் ஆட்சியே இராதாகையால், அரசியல் அதிகாரமும் இராது. ஆனால் உலக வாழ்க்கையில் இந்த லட்சியத்தை அடைவது ஒருபொழுதும் சாத்தியமல்ல. இதனாலேயே 'கூடியவரை குறைவாக ஆட்சி புரியும் அரசாங்கமே தலை சிறந்த அரசாங்கம்' என்று தோரோ என்ற பெரியார் கூறினர்.

அரசாங்கத்தின் ஆதிக்கம் வளர்வதைக் கண்டு எனக்குப் பெரும் பீதி உண்டாகிறது. ஏனெனில், அது பார்ப்பதற்கென்னவோ சுரண்டலைக் குறைப்பதன் மூலம் நன்மை செய்வதாகத் தோன்றினாலும், முன்னேற்றமனைத்திற்கும் ஆதாரமான தனி மனித முயற்சியை அழிப்பதன் மூலம் மனித இனத்திற்கு அது பெரும் தீங்கை விளைவிக்கும். மக்களாக அமைத்துக்கொண்டு நடத்தும் ஸ்தாபனங்கள் இருக்க வேண்டுமாயினும், இம்சையின் அடிப்படையில் அமைந்த ஸ்தாபனமான அரசாங்கத்தை ஆதரிக்க மறுக்கிறேன்.

லட்சிய நிலையிலுள்ள சமுதாயத்தில் அரசாங்க ஆட்சி இருக்க வேண்டுமா, வேண்டாமா என்பது குறித்து நாம் இப்பொழுது அலட்டிக்கொள்ள வேண்டும் என்று நான் நினைக்கவில்லை. அம்மாதிரியான சமுதாயத்திற்காகப் பாடுபடுவோமானால், அது மெல்ல மெல்ல வரவே செய்யும்.

உலகத்தில் எங்குமே ஆட்சியில்லாத அரசாங்கம் இல்லையென்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். ஆட்சியில்லாத அரசாங்கமொன்று என்றேனும் தோன்றுவதானால், அது இந்தியாவில்தான் தோன்றவேண்டும். ஏனெனில், நம் நாடு ஒன்றில் தான் இதற்கான முயற்சியேனும் செய்யப்பட்டிருக்கிறது.

—காந்தியடிகள்

# உலகமேடை

டி.எம்.எம்.

## புதிய யோசனை

வெள்ளையர்களுக்கும், கறுப்பர்களுக்கும் மனப்பான்மையிலும் சரி - வெளிநடவடிக்கையிலும் சரி அடிப்படை வித்தியாசமுண்டு. இந்த வித்தியாசம் 2-வது உலகமகா யுத்தத்துக்குப்பின்பு நன்குதெளிவாகி வருகிறது. லோகாயத வாழ்வில் ஐரோப்பியர் கறுப்பர்களைவிட மூளையில் சிறந்து விளங்குகிறார்கள் என்பதை மறுப்பதற்கில்லை.

ஆத்மிகரீதியில் கீழ்நாடு உலகுக்கே வழிகாட்டியாய் விளங்குகிறது. வேதங்களுக்கும் தத்துவ ஞானத்திற்கும் கீழ்நாடு உதாரணமாகத்திகழ்கிறது. புத்தரையும், கிறிஸ்துவையும், நபிகள் நாயகத்தையும் கீழ்நாடே உண்டாக்கியது. ஆனால் விஞ்ஞானத்திலும், நடைமுறைவாழ்விலும் ஐரோப்பாவும், இதா வெள்ளையர்நாடுகளும் நம்மைவிட எவ்வளவோ முன்னணியில் உள்ளன. உதாரணமாக காலனி ஏகாதிபத்தியங்களைக் குறிப்பிடலாம். சின்னஞ் சிறிய போர்த்துக்கல், ஹாலந்து, இங்கிலாந்து, பிரான்ஸ், பெல்ஜியம், ஸ்பெயின் ஆகிய நாடுகள் உலகின் எவ்வளவு பகுதிகளைத் தம் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தன என்பதை அறியும்போது நாம் மூக்கின் மேல் விரல் வைத்துஅதிசயிக்கிறோம். ஐக்கிய அமெரிக்காவும் கூட பிரிட்டிஷ்ஆதிக்கத்தில் இருந்ததென்பதையும் ஜோர்ஜ்வாஷிங்டன் நடத்திய விடுதலைப் போராட்டத்தின் பின்பே அந்நாடு சுதந்திரமடைந்தது என்பதையும் அறியும்போது வியப்பு உண்டாகிறது. அடிமை நாடாய் இருந்த ஐக்கிய அமெரிக்கா, அதன் முன்னைய ஏகாதிபத்தியமான பிரிட்டனைவிட பலத்திலும், விஞ்ஞானத்திலும் பொருளாதாரத்திலும், செல்வாக்கிலும் சிறந்துவிளங்குகிறது என்பது இன்னும் அதிசயமான விஷயமல்லவா? இவைதான் காலமாறுதல் அல்லது சரித்திர உண்மைகள் எனலாம்.

வெள்ளையர்கள் தான் உலகில் புதிய பல நாடுகளைக் கண்டுபிடித்தனர். கொலம்பஸ் அமெரிக்காவையும் வாஸ்கொடகாமா இந்தியாவையும் கண்டுபிடித்தபின்பு உலகின் அரசியல், பொருளாதார வாழ்க்கையில் ஏற்பட்ட மாறுதல்கள் தான் எத்தனை! புதிய நாடுகளைக் கண்டுபிடிப்பதும், புதிய விஞ்ஞான உண்மைகளைக் கண்டுபிடிப்பதும் ஐரோப்பியர்களின் இயற்கையான தனிப்பெரும் தன்மை என்பதை ஒப்புக் கொள்வதற்கு வெட்கமடைவதில் பயனில்லை.

மற்றொரு முக்கியவிஷயத்தை இங்கு குறிப்பிட வேண்டியிருக்கிறது. ஏகாதிபத்திய ஆட்சி செலுத்திய வெள்ளையர்கள், சிறுபான்மையினராய் இருக்கும் நாடுகளில் காட்டும்துணிச்சலை கறுப்பர்கள் காட்டுவதில்லை என்பதே அந்த விஷயம். அல்ஜீரியா, அங்கோலா, மத்திய ஆபிரிக்க சம்மேளனம், தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளைப் பாருங்கள். அங்கு இருக்கும் வெள்ளையர்களின் எண்ணிக்கை என்ன என்பதையும் பாருங்கள். அப்போது ஐரோப்பியரின் தீரம் எத்தகையது என்பது தெரியவரும். மிகச் சிறுபான்மையினரான ஐரோப்பியர்கள், அங்குள்ள பூர்வகுடிகளான மிகப் பெரும்பான்மையினரான சுதேசிகளை ஆண்டு வந்தனர் - வருகின்றனர். எவ்வித நியாயமான அரசியல் மாற்றங்களுக்கும் அவர்கள் இடமளிக்கத் தயாராய் இல்லை. இத்தனைக்கும் ஐரோப்பியர்களுக்கு நியாய அநியாயம் தெரியாது எனக் கூறுவதற்கில்லை. புத்திக்கூர்மைவாய்ந்த ஐரோப்பியர்களுக்கு எது நியாயம் எது அநியாயம் என்பது மற்றவர்களைவிட நன்கு தெரியும். ஆயினும் தங்களது பிடியை அவர்கள் கைவிடத் தயாராய் இல்லை.

ஒரு வெள்ளை நாட்டில் கறுப்பு மைனரிட்டிகள்ஒருபோதும் இவ்வளவு துணிச்சல் காட்டமாட்டார்கள். அல்ஜீரியாவில் யுத்த நிறுத்த ஒப்பந்தத்திற்குப் பின் ஒரு தடவை 110 பேர்களும், மற்றொருதடவை 70 பேர்களும் படுகொலைசெய்யப்பட்டிருக்கிறார்கள். கறுப்பர்கள் மைனரிட்டியாகவுள்ள எந்த நாட்டிலாவது பெருமபான்மை சமூகம் இவ்வாறு படுகொலை செய்யப்படுகிறதா? தீரத்திற்கும் துணிச்சலுக்கும் ஐரோப்பியர்களைப் பின்பற்றவேண்டும் என்பதில் என்ன சந்தேகம்? அங்கோலாவில் லட்சக்கணக்கானோர் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். மைனரிட்டிகளாய் இருந்தும் பழைய உரிமைகளை விட்டுக்கொடுக்க அவர்கள் தயாராய் இல்லை என்பதே இதற்குக் காரணம்.

நல்லது. இவ்வாறு மைனரிட்டிகளாய் உள்ள ஐரோப்பியர்கள் தாங்கள் வாழும் பெரும்பான்மை சுதேசிகளின் சுதந்திரத்திற்கு முட்டுக்கட்டையாய் இருப்பதின் காரணம் என்ன? பொருளாதாரக் காரணமே அது. மைனரிட்டிகளான ஐரோப்பியர்கள் அந்நாடுகளின் பெரும்பான்மை பொருளாதாரத்தை நிர்வகிப்பதே இதற்குக் காரணம். இப் பிரச்சினையைத் தீர்க்க வழியே கிடையாதா?

ஒருவழி நமக்குப் புலப்படுகிறது. அதாவது, புதிய ஒரு யோசனை. இந்த யோசனையை காரியசாத்தியமாக நிறைவேற்ற வேண்டுமானால் அமெரிக்காவும், மேற்கு ஐரோப்பிய நாடுகளும் பிரம்மாண்டமான ஒரு திட்டத்தை நிறைவேற்ற வேண்டியிருக்கும். அதாவது, கறுப்பர் நாடுகளில் மைனரிட்டிகளாய் இருந்து, கறுப்பர்களின் ஆட்சியை ஏற்காத வெள்ளையர்கள் வேறொரு வெள்ளை நாட்டில் குடியமர்த்தப்படவேண்டும். இப்போது பாருங்கள். அவுஸ்திரேலியா இருக்கிறது பெரும் நிலப்பரப்பைக் கொண்டது. இந்தியாவைவிடப் பலமடங்கு பெரியது. ஆனால் அங்குள்ள ஜனத்தொகையோ ஒருகோடி மட்டும்தான். ஆசியர்கள் அந்நாட்டின் குடியேற்ற முடியாது. நிரந்தரமான கறுப்பர் குடியேற்றத் தடைச்சட்டம் அங்கிருக்கிறது. சிலவருடங்களுக்கு முன்பு வெள்ளையர்களைக் குடியேற்ற அந்நாடு முன்வந்தது. பல நாடுகளிலுமுள்ள வெள்ளை மைனரிட்டிகள் ஆஸ்திரேலியாவில் குடியேறிவிட்டால் என்ன? அப்படியானால் கறுப்பர்களின் பிரச்சினைக்கும் வெள்ளையர்களின் பிரச்சினைக்கும் ஒரு முடிவேற்பட்டுவிடுமே. அல்லது தென்னமெரிக்காவில நிலப்பரப்பில் பெரிய குடியரசுகள் பல இருக்கின்றன. அர்ஜன்டைன, பிரேஸில் போன்ற நாடுகள் இருக்கின்றன. இவைகளில் ஒன்றில் குடியேறிவிடலாமே. தங்கள் மூலதனத்தை எடுத்துக்கொண்டு போய்புதிய நாடுகளில் முதலீடு செய்து வெள்ளையர்களுடன் வெள்ளையர்களாக அவர்கள்வாழலாம். அப்போது கறுப்பர் - வெள்ளையர், உயர்வு - தாழ்வு ஒருபோதும் ஏற்படாது.

யூதர்கள் உலகமெங்கும் சிதறிக் கிடந்தார்கள். குறிப்பாக ஹிட்லரின் ஆட்சியில் அவர்கள் சொல்லொணாத் துன்பத்தை அனுபவித்தார்கள். ஐன்ஸ்டீன் போன்ற மேதைகள் ஜெர்மனியை விட்டே ஓடினார்கள். பலர் படுகொலை செய்யப்பட்டார்கள். ஆயினும் பைபிள் கால நிலையை ஆதாரமாகக் கொண்டு அவர்களைபாலஸ்தீன் நாட்டில் அமெரிக்காவும் மேற்கு நாடுகளும் குடியமர்த்தவில்லையா? அராபியர்களின் ஏகோபித்த எதிர்ப்புக்கிடையில் அவர்கள் பாலஸ்தீனில் குடியமர்த்தப்பட்டார்கள். அந்நாட்டைப் பலநாடுகள் அங்கீகரித்தன. இவ்வளவு துணிச்சலுடன் செயல்பட்ட நாடுகள் வெள்ளையர்களை மற்றொரு வெள்ளையர் நாட்டில் குடியமர்த்த முயல்வதில் என்ன கஷ்டம் இருக்கும்? மனமுண்டானல் இடமுண்டு.

வெள்ளையர் நாட்டில் மைனரிட்டி வெள்ளையர்களைக் குடியமர்த்துவதானல் பல பிரச்சினைகள் எதிர்நோக்கும். முதலில் அவர்கள் குடியேறச் சம்மதிக்க வேண்டும். இரண்டாவது, அவர்களின் பொருளாதார அஸ்திவாரம் சேதமடையாத வண்ணம் புதிய வாய்ப்புக்கள் கண்டுபிடிக்கப் படவேண்டும். அமெரிக்கா வருடமொன்றுக்கு25000கோடி ரூபாய் பாதுகாப்புக்காகச் செலவழிக்கிறது. அதன் ஒரு வருடச்செலவைக் கொண்டே உலகில் எத்தனையோ ஆக்க வேலைகளை மேற்கொள்ளலாம். எனவே வெள்ளையர்பிரச்சினை தீருவதற்கு அமெரிக்கா தலைமையில மேற்கு நாடுகளும் தீவிரமாக ஆராயவேண்டும். ஒரு பெரும் திட்டத்தைத் தயாரிக்க வேண்டும். கறுப்பர் ஆட்சியின் கீழ் இருக்க விரும்பாத வெள்ளையர்களை, வெள்ளையர்களுடன் குடியமர்த்த அது ஏற்பாடு செய்யவேண்டும். நிரந்தரப் பரிகாரத்துக்கு இது ஒன்றே வழியாகும்.

## அகதிகள் பிரச்சினை

உலகில் அகதிகள் பிரச்சினை இப்போது தலைதூக்கி வருவது போல் தோன்றுகிறது. தினசரி கம்யூனிஸ்ட் சீனவிலிருந்து ஹாங்காங்கில் அகதிகள்வந்து குவிவதாகச் செய்திகள் கூறுகின்றன. இவர்கள் வருவதற்கான காரணம் என்னவென்று தெரியவில்லை என்றும் கூறப்படுகிறது. சீனவில் நிலவும் பட்டினிப் பிரச்சினையே இதற்குக் காரணமாக இருக்கவேண்டும். அல்லது, கம்யூனிஸ்ட்கட்டுப்பாட்டை விரும்பாத சுதந்திர மக்கள் இவ்விதம் வெளியேறிக் கொண்டிருக்க வேண்டும். வெளியேறும் அகதிகளை சீன எல்லைக் காவல் வீரர்கள் சிலசமயம் தடுப்பதில்லை என்றும் கூறப்படுகிறது. அப்படித் தடுத்தால் பலாத்காரம் உருவாகும் என்ற பயமே இதற்குக் காரணமாம். இதிலிருந்து ஒரு விஷயத்தை ஊகிப்பதில் தவறில்லை. சீனவின்பட்டினிப் பிரச்சினை பெரியது என்பதே அந்த விஷயம். பசியும் பஞ்சமும் கம்யூனிஸத்தை உண்டாக்குகிறது என்பார்கள். ஆனல் சீனக் கம்யூனிஸம் பசியையும் பட்டினியையும் உண்டாக்கியிருக்கிறது. சீனவின் உணவுப் பஞ்சத்திற்கு இயற்கை காரணமா அல்லது தலைவர் மாசே - துங்கின் கூட்டு விவசாயத் திட்டத்தின் தோல்வி காரணமா என்பது தெரியவில்லை. எதுவாயினும் சீனவில் உள்நாட்டு நெருக்கடி நிலவுகிறது என்பதற்கு இது ஒரு உதாரணம்.

கிழக்கு ஜெர்மனியிலிருந்தும், கிழக்கு பேர்லினிலிருந்தும் மேற்கு ஜெர்மனிக்குள் தினசரி அகதிகள் புகுந்துவருகிறார்கள். முள்வேலியும், காங்கிறீட் சுவரும் அவர்களைத் தடுக்க

(7-ம் பக்கம் பார்க்க)

## பூஜ்யம் தபால்

டாக்டர் எஸ்.
ராதாகிருஷ்ணன் அவர்கள்
ராஷ்டிரபதி,
புதுடில்லி.

அன்புள்ள ஜனதிபதி!

மீண்டும் தங்களுக்கே கடிதமெழுத நேரிட்டதற்காக மகிழ்ச்சியடைகிறேன்.

தாங்கள் பதவி ஏற்றதும் முதல் வேலையாகத் தங்கள் சம்பளத்தில் பெரும்பகுதியைக் குறைத்துக் கொண்டுவிட்டதாகக் கேள்விப் பட்டேன். சட்டப்படி தங்கள் சம்பளம் மாதம் ரூ. 10 ஆயிரம். தாங்களோ அதில் முக்கால் பகுதியைக் குறைத்துக் கொண்டுவிட்டீர்கள். மிச்சமுள்ள 2500 ரூபாவிலும் அறுநூறு ரூபாய் வருமானவரிக்குச் சென்றுவிடுமென்றும், மாதம் ரூ. 1900 ந்தான் தங்களுக்குச் சம்பளமாகக் கிடைக்குமென்பதையும் அறிந்ததும், தங்களைப்பற்றிய மதிப்பு பெரிதும் அதிகரித்துவிட்டது!

ஏற்கெனவே திருத்தணியிலிருந்த தங்கள் வீட்டை பொது மக்களுக்காக, சென்னை அரசாங்கத்திடம் கொடுத்துவிட்டீர்கள். இப்போது சம்பளத்தைப் பெரிதும் குறைத்துக் கொண்டு விட்டீர்கள். தாங்கள் செய்யும் இவ்வித தியாகம் இலங்கை உள்ளிட்டு, உலகில் பலருக்கும் மேலான முன்மாதிரியாக இருக்க வேண்டுமென்பதே எனது ஆசை.

43 கோடி மக்களின் ஜனதிபதியே இரண்டாயிரத்துக்கும் குறைவாக சம்பளம் எடுப்பதாயின் சுமார் ஒரு கோடி மக்களே உள்ள எங்கள் இலங்கையைப் பற்றி யோசித்தேன். ஆனல் எங்கள் கவர்னர்ஜெனரல் தங்கள் முன் மாதிரியைப் பின்பற்ற முடியாதபடி இப்போதுள்ள எங்கள் அரசியல் சட்டம் தடுக்கிறது. கவர்னர் ஜெனரல் வருடத்துக்கு 8000 பவண் சம்பளம் (மாதம் சுமார் 8 1/2 ஆயிரம் ரூபாய்) பெறத்தான் வேண்டுமென்ற முறையில் "ஷால்" என்ற சொல் பாவிக்கப்பட்டுள்ளது. என்ன செய்யலாம்? ஒருவேளை இலங்கையும் சீக்கிரம் குடியரசானதும் தாங்கள் காட்டிய முன்மாதிரி எங்களுக்கும் பயன்படக் கூடும்.

இப்படிக்கு,
பூஜ்யம்.

குறிப்பு:–

தாங்கள் தலைவரானதும், ஜனதிபதி மாளிகையில் வாரம் இரண்டு நாட்கள், யாரும் முன் ஏற்பாடின்றி வந்து தங்களைக் காணலாமென்று தாங்கள் போட்டுள்ள உத்தரவைக் கண்டேன். பழைய தமிழ் மன்னர்கள் 'ஆராய்ச்சிமணி' கட்டி மக்களின் துயரைத் துடைத்து வந்த பழக்கம் ஞாபகம் வருகிறது. ஆனல் முதல் நாள் வந்தவர்களுடன் கைகுலுக்க தங்களுக்கு 40 நிமிஷமாயிற்றாம்... தங்கள் வயோதிபத்திலே ஆண்டவன் அதிக பலம் அளிப்பாராக!

"பூ"

* * *

டாக்டர் சுகார்னோ.
ஜனதிபதி,
இந்தோனேஷியா.

தலைவரே!

தங்களை ஒரு வெறியன் மீண்டும் சுட்டுக்கொல்ல முயன்றும், தாங்கள் உயிர்தப்பிவிட்டதற்காக தங்களைப் பாராட்டுகின்றேன். இதுவரை 5 முறை தங்களுக்கு பெரிய கஷ்டங்கள் வந்தன. ஐந்துமுறையும் ஆண்டவனே தங்களை ஆச்சரியமாகக் காப்பாற்றிவிட்டான்.

ஆனல் எங்கள் பழைய பிரதமர் பண்டாரநாயக்காவை ஒரு வெறியன் முதல் முறையாகச் சுட்டபோதே அவர் துரதிருஷ்டவசமாக மாண்டுவிட்டார். ஏன் இப்படி என்று புரியவில்லை. "அரசியல் பிழைத்தார்க்கு அறம் கூற்று" என்று வேலணையில் நடந்த திருக்கு

(7-ம் பக்கம் பார்க்க)

## வள்ளுவருக்கு...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்கைகளுடைய பெண் ஒருத்தியாலேயே சிறந்த ஆடவனும் சிறப்புடன் விளங்கமுடியும் என்பது திருவள்ளுவரின் கருத்து. இல்லற வாழ்க்கையின் சிறப்பு பெண்களிலேயே தங்கியுள்ளதென்பதைக் கூறிப் பெண்களுக்குத் தெம்பும் தைரியமும் ஊட்டியுள்ளார் அந்தப் பெருந்தகை.

### சிறந்த புத்திமதி

'தற்காத்துத் தற்கொண்டாற்
பேணித் தகைசான்ற
சொற்காத்துச்
சோர்விலாள் பெண்.'

இங்கு பெண்ணுக்கு ஒரு அரிய புத்தியைச் சொல்கிறார் அந்தப் பெரியார்.

ஒருபெண் கற்பினின்றும்வழுவாது தன்னைக் காத்துக் கொள்ளவேண்டுமாம். தன்னை மணம் செய்து கொண்ட கணவனையும் அவள் உணவு முதலியவற்றால் பேணிக் காத்துக் கொள்ளவேண்டுமாம். அதுவுமல்லாமல் தனக்கும் தனது கணவனுக்கும் நன்மைநிறைந்த புகழைத்தேடி அப்புகழைப் பாதுகாக்க வேண்டியவளும் பெண்ணே. பெண்ணுக்குள்ள பெரிய பொறுப்பையும் நற்குடிப் பெண்ணுக்கு இருக்க வேண்டிய இலட்சணங்களையும் கூறும் இக் குறைகளையிட்டுப் பெண்கள் பெருமைப்பட வேண்டுமல்லவா? அத்தோடு அது கூறும் அறிவுரைக்கேற்ப வாழ்க்கையில் ஒழுகவேண்டியது, அதை இயற்றிய பெரியாருக்குப் பெண்கள் செய்யக் கூடிய பெரும் அஞ்சலியன்றோ! வள்ளுவர் விழாக்களில் பங்கு பற்றுவதோடு மட்டும் நின்று விடாமல் அவரது புத்திமதிகளைப் பெண்கள் கடைப்பிடித் தொழுகவேண்டும்.

நாகரிகம் மிகுந்த இன்றைய உலகில் 'கற்பு' என்னும் பொருள் கடைச்சரக்காகி விட்டதென்று பலர் கூறிக் கொள்வர். பெண்கள் ஆண்கள் ஆகிய இருபாலாருக்கும் கற்பு பொது எனினும் பெண்களுக்கு அது ஓர் அத்தியாவசியமான தர்மம்.

'பெண்ணிற் பெருந்தக்க
யாவுள கற்பென்னுந்
திண்மையுண்டாகப் பெறின்.'

ஒருவன் அடையும் பெண்ணுடைய பொருள்களில் சிறந்தது அப்பெண்ணின் கற்பேயென்றார் கற்புடைய பெண் ஒருத்தியை மணம்செய்யும் ஆடவன் பெரும் பொருளை எய்துபவனாவான் என்றார் வள்ளுவர். வேறு எந்த ஐசுவரியத்திலும் பார்க்கப் பெண்ணுக்குச் சிறந்த அணிகலன் கற்பு ஒன்றுதான். இந்த நிலைமாறிப் பெண்களிடையே கற்புக் கடைச்சரக்காகி விட்டதாக இன்று கூறப்படுவதையிட்டுப் பெண்கள் கவலை கொள்ளாதிருக்க முடியுமா? இது பற்றிப் பெண்கள் தமது சிந்தனையைத் தட்டியெழுப்ப வேண்டுமல்லவா?

கற்புடைய மாதரை வள்ளுவர் பெருந்தகை தெய்வமாக மதித்தார் என்பதை அவரது பின்வரும் குறள் விளக்குகின்றது. கற்புடைய பெண்ணொருத்திக்கு அவளது கணவனே தெய்வம்.

"தெய்வம் தொழாஅள்
கொழுநற்றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை'

மழை பெய்ய வேண்டும் என்று நினைத்த மாத்திரத்திலேயே மழை பொழியச்செய்ய வல்ல தெய்வத்தின் சக்தி கற்புடைய பெண்ணுக்குண்டு என்கிறார் வள்ளுவப் பெருந்தகை. பெண்களின் மாட்சிமை பாடிய வள்ளுவர் கூறிய நெறிப்படி நாம் ஒழுகுகிறோமா என்று வள்ளுவன விழாக் காலங்களில் நாம் நன்றாகச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அவ்வாறு ஒழுகவில்லையென்று கண்டால் இனிமேல் எனினும் ஒழுகக்கற்றுக் கொள்வோமாக.

# ஆகஸ்ட் தியாகி செல்லையா

— ரா. மு. நாகலிங்கம் —



ஈழத்திலே வாழ்கின்ற இந்திய வம்சாவழியினரின் எதிர்காலம் இருள் சூழ்ந்துகாணப் படுகின்றது. நெற்றி வியர்வை நிலத்தில் விழப்பாடுபட்டு காட்டையும், மேட்டையும் திருத்தி ஈழத்தைப் பொன் விளையும் பூமியாக்கியதோடு ஈழத்தின் சமூக அரசியல் வாழ்விலும் ஈடுபட்டு உழைத்தனர். ஈழத்தின் சுதந்திரப் போராட்டத்திலும் அவர்கள் பங்குபற்றி இருக்கிறார்கள். திரு. செல்லையாவின் வாழ்க்கை இதற்கு ஓர் உதாரணமாகும்.

"குடியேற்ற வெளியேற்றச் சட்டங்களின் நெருக்கடி காரணமாக திரு. ஆர். எம். செல்லையா தமது இலங்கை வாழ்க்கையை முடித்துக் கொண்டு இன்று தமிழகம் செல்ல இருப்பதால் கண்டியிலே அருக்கின்ற அவருடைய நண்பர்களைப் ஒரு பிரிவுபசார விழா நடத்தப்படுகிறது. திரு. ஆர். எம். செல்லையாவின் வாழ்க்கை தன்னலம் கருதாத ஒரு புரட்சிகரமான வாழ்க்கையாகும். இராம்நாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த வலசைஎன்ற கிராமத்தில் பிறந்த திரு.செல்லையாவுக்கு இன்று ஏறக்குறைய 52 வயது ஆகிறது. வாழ்க்கையின் பெரும் பகுதிகளை ஈழத்தின் பொதுப் பணிக்காக செலவிட்டதோ மட்டுமல்லாமல் இந்தியாவில் நடைபெற்ற விடுதலை இயக்கத்திலும் பங்குபற்றி சிறை சென்றுள்ளார். தீரர் நேத்தாஜி, முத்துராமலிங்கத் தேவர், சுப்பிரமணியசிவா போன்ற தீவிரவாதிகளின் எழுச்சிமிக்க சொற்பொழிவுகளைக் கேட்டும் உணர்ச்சியடைந்திருந்த இளைஞர் செல்லையா சென்னையில் ஒரு தொழில் ஸ்தாபனத்தில் பணியாற்றிக்கொண்டிருந்த சமயம் அன்னியத்துணி பகிஸ்காரத்துக்காக 1926 - ஆம் ஆண்டு அண்ணல் காந்திஜி அன்னை கஸ்தூரிபாயுடன் சென்னைக்கு வந்திருந்தார் திரு செல்லையாவும் உணர்ச்சிமேலிட்டு தன்னுடைய ஆடைகளையும் நெருப்பில் போட்டுக் கொழுத்தி விட்டு அன்று முதல் இன்று வரை கதரையே அணிந்து காந்தி பக்தராக விளங்கி வருகிறார்.

கண்டி திருக்கோணமலை வீதியிலுள்ள பிரபல வர்த்தக ஸ்தாபனத்தின் பொறுப்பாளராக 1927 – ம் ஆண்டில் சென்னையிலிருந்து ஈழநாட்டுக்கு வந்தார். எரிமலையாகக் குமுறிக்கொண்டிருந்த இந்திய விடுதலை இயக்கத்தின் எதிரொலி ஈழத்திலே இருந்த தமிழ் இளைஞர்களையும் கவரத்தான் செய்தது. அதன் விளைவாக சுமார் 35 ஆண்டுகளுக்குமுன் மலைநாட்டின் மத்திய நகரான கண்டியில் "அகில இலங்கை இந்திய வாலிபர் சங்கம்" என்ற பெயரில் ஒரு இளைஞர் இயக்கம் உருப்பெற்றது. அக்காலத்தில் இலங்கையில் ஏற்பட்ட சுதந்திர எழுச்சியைக்கண்ட வெள்ளையர்கள் நான்கு பேர் கூடிப்பேசுவதற்கோ பொதுக்கூட்டங்கள் நடத்துவதற்கோ அனுமதி அளிக்க மறுப்பதுண்டு. இதைப்போன்ற இக்கட்டுகளை எல்லாம் தாண்டி இரவென்றும் பகலென்றும் பாராமல் விடாமுயற்சியுடன் கல்வி கற்ற பல இளைஞர்களை எல்லாம் ஒன்று திரட்டுவதில் முயன்று திரு. செல்லையா அவர்கள் அதில் வெற்றியும் பெற்றார்.

1928 - ம் ஆண்டில் அகில இலங்கை இந்திய வாலிபர் சங்கத்தின் வருடாந்த மகாநாடு கண்டியில் நடைபெறுவதற்கு இடைவிடாது முயன்று காலஞ்சென்ற தீரர் சத்தியமூர்த்தி, ருக்மணிலட்சுமிபதி, டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி போன்றவர்களை வரவழைத்து வெற்றியுடன் மகாநாடு நடத்துவதற்கு அரும்பாடுபட்டார். ஜவஹர்லல் நேரு தமது மனைவியுடன் 1931ல் கண்டிக்கு விஜயம் செய்தபோது வாலிபர் சங்கத்தின் சார்பாக கண்டியில் நடைபெற்ற வரவேற்பு உபசாரத்தில் சளியாது உழைத்தார்.

1933-ம் ஆண்டு தொடங்கிய அகில இலங்கை இந்திய வாலிபர் சங்கம் போஸ் சங்கம் என்று மாற்று நாமம் பூண்டு ஆரம்ப காலம் முதல் 1941-ம் ஆண்டுவரை திரு. செல்லையா இச்சங்கத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்று, தமிழ் மக்களுக்கு அரும்பணி ஆற்றியுள்ளார். கவிதாகூர் இலங்கைக்கு விஜயம் செய்தபோது போஸ் சங்கத்தின் சார்பில் கவிஞருக்கு 1000 ரூபா பெறுமதியான பொற்கிழியும் வழங்கப்பட்டது.

திரு. செல்லையா அரசியலில் குதித்தது முதல் இன்று வரை நற்பண்புகள் நிறைந்த காந்தீயப் பற்றுள்ள ஒரு தீவிரவாதியாக விளங்குகிறார். இந்திய விடுதலைப் போராட்டமான 1942 ஆகஸ்ட் தியாகத்தில் பங்குபற்றியதற்காக 23-12-42 ல் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் இராமநாதபுரம் நீதிபதியால் பதினெட்டு மாதங்கள் கடுங்காவல் தண்டனைக்குள்ளாகி அலிபுரம் சிறையில் வைக்கபபட்டிருந்தார்.

சென்னை முதன்மந்திரி திரு. கே. காமராஜர் திரு. செல்லையாவின் 1949 முதல் கொட்டகலை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கௌரவப் பிரதிநிதியாகக் கடமையாற்றி உள்ளார். இலங்கை எங்கணும் அவருக்கு நண்பர்கள் பலர் உள்ளனா. திரு. செல்லையா பல்லாண்டு வாழ்ந்து தமிழகத்திலும் பணி ஆற்றுவதற்கு இறைவன் அருள் புரிவாராக.

## உலக மேடை

(6ம் பக்கத் தொடர்ச்சி)

முடியவில்லை. அகப்பட்டவர்கள் சுட்டுக் கொல்லப்படுகிறார்கள்.

அகதிகள் எதனால் உண்டாகிறார்கள்? ஒரு நாட்டில் ஏற்படும் பஞ்சம், அல்லது வகுப்புக் கலவரம், அல்லது அரசாங்கத்தின் நசுக்குதல் காரணமாக இருக்கும்.

இந்தியஉபகண்டத்திலிருந்து பாகிஸ்தான் பிரியுமுன்பு இந்தியாவிலிருந்து முஸ்லிம்களும், பாகிஸ்தானிலிருந்து ஹிந்துக்களும் பல லட்சக்கணக்கில் அகதிகளாகக் குடிபெயர்ந்தார்கள். சரித்திரத்தில் இதற்கு உதாரணமே கிடையாது. வகுப்புக்கலவரத்தின் கோரம் அங்கு களிநடனம் புரிந்தது. இதேபோல்தான் பலநாடுகளில் யூதர்கள் அகதிகளாகக் குடிபெயர்ந்தார்கள். அந்நியப் படையெடுப்பின் காரணமாகவும் அகதி தோன்றுவதுண்டு. திபேத்தை சீன ஆக்கிரமிப்பு செய்தபோது தலாய்லாமாவும் அவரது ஆதரவாளர்களும் அகதிகளாய் இந்தியாவுக்கு வந்தனர். அகதிகளை ஆதரிப்பது அந்நியநாடுகளின் கடமையாகும். அங்கோலாவில் போர்த்துக்கல்லின் நெருக்கடியிலிருந்து காங்கோவிற்குள் அகதிகளாக ஓடிவந்தனர். ஆனால் இந்த அகதிகளெல்லாம் மீண்டும் தமது பழைய இடங்களுக்குத் திரும்பிச் செல்வார்களா என்பது சந்தர்ப்பம், சூழ்நிலைகளையே பெரிதும் பொறுத்ததாகும்.

## "ரா"வின் சிறப்பு

"ரா" என்ற எழுத்தின் மகத்துவத்தைப் பற்றி முன்பே எழுதியிருந்தோம். "ரா"வின் சிறப்பு எத்தகையது என்பது இப்போது நன்கு தெளிவாகின்றது. பாரதநாட்டின் தலைமைப்பதவிக்கு வருபவர்கள் எல்லாம் "ரா" வைத் தங்கள் பெயரில் முதல் எழுத்தாகக் கொண்டிருப்பதுஒரு விசேஷம். சுதந்திர இந்தியாவின் முதலாவது கவர்னர் ஜெனரலாக ராஜாஜி இருந்தார். பின்பு ராஜேந்திர பிரஸாத் ஜனபதியானார். இப்போது ராதாகிருஷ்ணன் ஜனதிபதியாகப் பதவி ஏற்றிருக்கிறார். காந்திஜி கண்ட ராமராஜ்யக் கனவுக்கு இவைகள் உதாரணமாய் விளங்குகின்றன என்பது பொருத்தமாய் இருக்கின்றதல்லவா !.

## மேற்கு ஜெர்மனியில்.....

(9-ம்பக்கத் தொடர்ச்சி)

ஜெர்மனியில் தங்கிப் படிக்கவோ ப்யிற்சி பெறவோ வேண்டுமென்றால் முதலில் ஜெர்மன் மொழியைக் கற்கவேண்டும்.

கத்தே கழகம் ஜெர்மன் மொழியைக் கற்பிக்கும் பணியை மேற்கொள்கிறது. பவேரியாவின் ஆல்ப்ஸ் மலைச் சரிவில் கொச்சல் ஏரிக்கரையில் அமைந்துள்ள ஒரு பள்ளியில் அயல்நாட்டு மாணவர்கள் ஜெர்மன் மொழி கற்பது படத்தில் காட்டப்படுகிறது. பிரதி ஞாயிறன்றும் இவர்கள் மூனிச்சின் சுற்றுப்புறங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டு ஜெர்மனியின் வனப்புகளையும் அம்மக்களின் வாழ்க்கையையும் பற்றி நேரில் அறிகின்றனர். ஜெர்மன் பல்கலைக்கழகங்களின் வகுப்புகளில் அவர்கள் பாடங்கள் கேட்பதும்,மற்றும் பல பல்கலைக்கழக நடவடிக்கைகளில் கலந்து கொள்வதும் காட்டப்படும். தொழில் சம்பந்தமான கல்வியை அவர்கள் பல தொழிற்சாலைகளில் வேலை செய்து கற்றுக் கொள்வதும் காட்டப்படுகிறது. இப்படத்தில் எதுவும் கற்பனை செய்து காட்டப்படவில்லை.

ஜெர்மனியில் அயல்நாட்டு மாணவர்கள் தங்கள் ஓய்வு நேரத்தை எப்படிச் செலவிடுகிறார்கள் என்பதும் படத்தில் காட்டப்படுகிறது. ஆசிய, ஆபிரிக்க மாணவர்கள் மேற்கு ஜெர்மனியில் படிக்கச் சென்றால் எப்படி வாழ்க்கை நடத்தலாம், என்னவெல்லாம் கற்கலாம் என்பதை இப்படம் நன்கு உணர்த்துகிறது.

## திருமதி கி. வா. ஜ உரை நிகழ்த்துவார்

உடுப்பிட்டி வியாழன்

அடுத்த மாதம் கரவெட்டி தச்சன் தோப்பு விநாயகர் ஆலயத்தில் நடைபெற விருக்கும் திருவிழாவின் போது, பத்து நாட்களுக்கு, கலைமகள் ஆசிரியர் திரு.கி. வா. ஜகநாதனும் திருமதி. ஜகநாதனும் உரை நிகழ்த்துவார்களெனத் தெரிகிறது. திருமதி. ஜகநாதன் கரவெட்டி வாணிகலைக் கழகம், அந்திரான் முருகமூர்த்தி ஆலயம் ஆகிய இடங்களில் சொற்பெருக்காற்றுவாரெனத் தெரிகிறது.

## மாதர் சங்க கூட்டம்

ஊர்காவற்றுறை, சனி

"பெண்களாகிய நம் வாழ்வு தூயவாழ்வாக இருக்கவேண்டும். பயனுள்ள வாழ்வாக இருக்கவேண்டும். பயனுள்ள வாழ்வு என்பதுதான் கலை வாழ்வு. ஆகவே, கலைவேறு வாழ்வு வேறல்ல கலையே வாழ்வு. வாழ்வே கலை மாதர் இல்லாக் கலை மதியில்லா வானம் போன்றது." சரவணை நாகேசுவர் வித்தியாசாலையில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற சரவணை மாதர் முன்னேற்றச் சங்கப் பொதுக் கூட்டத்தில் 'மாதரும் கலையும்' என்னும் பொருள்பற்றி உரைநிகழ்த்திய பட்டதாரி ஆசிரியை, செல்வி புஷ்பா இராசரத்தினம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சரவணை மாதர் முன்னேற்றச் சங்கத் தலைவி திருமதி பா. ஞானசக்தி தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது.

## ஆசிரியர் இடமாற்றம்

உடுப்பிட்டி சனி

உரும்பிராய் இந்துக் கல்லூரியில் கடந்த 10 ஆண்டுகளாக விசேட பதவி வகித்துவந்த திரு. எம். சபாநாயகம் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரிக்கு அடுத்த மாதம் முதலாந் திகதியிலிருந்து மாற்றப்பட்டுள்ளார்.

டிறிபேக் கல்லூரி உதவியதிபர் திரு. ஏப்ரகாம் உடுப்பிட்டி அமெரிக்கன்மிஷன் கல்லூரி உப அதிபராக மாற்றப்பட்டுள்ளார்.

## சிறுவனிடம் வழிப்பறி செய்தனராம
### இருவருக்கு அபராதம்

கிளிநொச்சி, சனி

கிளிநொச்சியைச் சேர்ந்த கந்தைய முருகதாஸ் என்ற 10வயது சிறுவன்சுவீப் டிக்கட் விற்பனை செய்வதற்காக கிளிநொச்சி கண்டிவீதி வழியாகச் சென்று கொண்டிருக்கும் போது அச்சிறுவனிடம் தகாத முறையில் நடந்ததுமல்லாமல் 10 சுவீப்டிக்கற்றை வழிப்பறி செய்ததாகவும் தருமபுரத்தைச் சேர்ந்த வில்சன் பெரேரா, சாமி ஆகிய இருவர் மீதும் குற்றஞ்சாட்டி கிளிநொச்சி பொலிஸ் இன்ஸ்பெக்டர் திருமூர்த்தியினால் கிளிநொச்சி மாஜிஸ்ரேட் கோட்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

விசாரணை முடிவில்இருஎதிரிகளையும் குற்றவாளிகளாகக் கண்ட நீதிபதி இருவருக்கும் தலா ரூ. 25 அபராதம்விதித்தார்.

## பூஜ்யம் தபால்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

றள் மகாநாட்டில் பேராசிரியை திருவாட்டி கனகசவுந்தரி இளந்திரையன் கூறியதும் தான் காரணம் புரிந்தது.

தாங்கள் நீடூழி வாழ்ந்து மேன்மேலும் வெற்றி பெறப் பிரார்த்திக்கும்

தங்கள்
பூஜ்யம்

குறிப்பு:-

தங்களைக் கொல்ல முயன்ற வாலிபர் "தாருல் இஸ்லாம்" (சாந்தியின் இருப்பிடம்)எனும் ஸ்தாபனத்தைச் சேர்ந்த ஒருவனென்றுந் தெரிந்தது. பெயருக்கும் நடத்தைக்கும் எவ்வளவு பொருத்தம்! இதுவரை 2000 பேரைக்கொன்று பல கிராமங்களைக் கொளுத்தியுள்ளனராம் இச்சாந்த புருஷர்கள்! அடகடவுளே!

தாங்கள் மேற்கு இரியனை மீட்க இப்போது பெரும் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறீர்கள். ஏகாதிபத்திய சக்திகள் தங்களுக்கு விரோதமாக எதையும் செய்யலாம். என்றாலும் தாங்கள் மீண்டும் பெரிய கண்டத்திலிருந்து உயிர் தப்பியதால், தங்கள் செல்வாக்கு இனி அதிகம் பெருகி, மேற்கு இரியன் விடுதலை நெருங்கி விடுமென்பதே பலரது நம்பிக்கையும்

"பூ"

# அழகு மேடை

'ஜறீன் ரஞ்சிதம்'

## திருமண வைபவ ஆடையலங்காரம்

கல்யாண வீட்டுக்குச் செல்வதென்ருல் பெண்கள், தம்மை எவ்வளவுக்கு அலங்கரித்துக் கொள்ளவேண்டுமோ அவ்வளவுக்கு அலங்கரித்துக் கொள்வார்கள். சுருங்கச் சொல்லப் போனல் ஒரு பெண் மிகவும் அழகாகத் தன்னை அலங்கரித்துக் கொள்ளுவது கல்யாண வைபவங்களுக்குச் செல்லும் போதுதான். அதில் தப்புக் கூட இல்லை. ஏனென்ருல் அது ஒரு மங்களகரமான வைபவமல்லவா ?

விவாகமாகாத இளம்தமிழ்ப் பெண்கள் கல்யாண வீடுகளுக்குச் செல்வது குறைவு. ஆனல் சிநேகிதிகளதும், உறவினர்களதும் திருமணங்களுக்கு அவர்கள் செல்லாது இருந்துவிட முடியுமா ? மணமாகிய பெண்களைப்போல மணமாகாத இளம்பெண்கள் கலியாண வீடுகளுக்கு ஆடையாபரணமணிந்து செல்வதில்லை. அப்படிச் செல்வதிலும் அழகில்லை. இவர்கள் ஐசுவரியமாக ஆடை அலங்காரம் செய்துகொண்டாலும் தோற்றத்தில் எளிமையாகக்காணப் பட்டார்களானல் அழகாகவும் அடக்கமாகவும் இருக்கும். அதாவது கடும் நிறமான சாரிகளையோ அல்லது ஜரிகை நிறைந்த சாரிகளையோ இவர்கள் கட்டிக்கொள்வது பொருத்தமாக இருக்காது.

மாவு நிறமுள்ள உயரமான ஒரு இளம் பெண் கல்யாண வைபவத்துக்குப் போகும் போது செய்துகொள்ளக் கூடிய ஆடையலங்காரமொன்றை இங்கு தருகிறேன்.

அழகிய வெள்ளை மைசூர் சிப்போன் சாரி ஒன்று மாவு நிறமுள்ள பெண்ணுக்கு எடுப்பாக இருக்கும். இலைப்பச்சை நிறத்தில் அகலமான பார்டர் போடப்பட்டு பார்டரில் ஜரிகை சேர்க்கப்பட்டிருந்தால் வைபவத்துக்குப் பொருத்தமாக இருக்கும். அதே இலைப் பச்சை நிறத்தில் சோளியையும் அணிந்து கொள்ள வேண்டும். சேலை மெல்லிய வகையைச் சேர்ந்ததாகையால் சோளிக்குத் தடிப்பான ஜவுளித்துணிசு ஒன்றைத் தேர்ந்தெடுப்பது தான் நல்லது. பெங்களூர் சோளியையோ அல்லது பெனரிஸ்சில்க் துணியையோ சோளிக்குத் தெரிந்தெடுத்துக்கொள்ள வேண்டும். இளம்பெண்கள் விலையுயர்ந்த தடித்த சாரிகளை அணிவதிலும், தடிப்பான சோளி அணிந்து மெல்லியதான சாரியை அணிந்துகொள்வது அவர்களது வயதுக்குப் பொருத்தமாக இருக்கும். அத்தோடு மைசூர் 'சிப்போன்' சாரி,மைசூர் சில்க் சாரிகளுக்கு அதிகம் பணம் வேண்டியதுமில்லை. எவ்வளவு பணக்கார வீட்டுப் பிள்ளைகளாக இருந்தாலும், இளம்பெண்கள் விலை குறைவான சேலை கட்டிக் கொள்வதில்தான் அழகுண்டு. இதில் அதிகம் உண்மை இருக்கின்றதென்பதைப் பலர் புரிந்து கொள்வார்கள். ஆனல் இதன் மர்மம் எவருக்கும் புலனவதில்லை.

வெள்ளைநிற சாரியும் பச்சை நிற சோளியுமென்றல்லவா கூறினேன். இந்த அளவில் அலங்காரம் முடிந்துவிடுமா? இளம்பெண்கள் பெருமளவில் நகைகளை அணிந்துகொள்வதில் அழகில்லை. இந்த சாரிக்கும் சோளிக்கும் இரட்டைப் பட்டில் முத்துச் சங்கிலி அணிந்து விட்டால் மிகவும் எடுப்பாக இருக்கும். அதற்கு மேலதிகமான நகை எதுவுமே கழுத்தில் வேண்டியதில்லை. காதுகளில் முத்து ஜிமிக்கிகளும் அணிந்து கைகளுக்கு சில வளையல்களும் அணிந்து விட்டால் அலங்காரம் திருப்தியாகப் போதுமே. ஜடையைப் பின்னிக் குஞ்சங் கட்டுவதோடு மல்லிகை மாலை ஒன்றையும் வைத்துவிட்டால் அலங்காரம் பூரணமாகிவிடும். இந்துக்களின் கலியாணவீடாக இருந்தால் காலில் வெள்ளிப் பாதரட்சைகளையும் அணிந்து கொள்ளலாம். கழுத்தில் முத்துச் சங்கிலிக்குப் பதில் முத்து நெக்லஸ்சும் கட்டிக் கொள்ளலாம். மாவு நிறமுள்ள இளம்பெண் திருமண வைபவமொன்றுக்குச் செல்வதற்கு இது பொருத்தமான அலங்காரமல்லவா? கற்பனை செய்து பார்க்கும் போதே அழகாக இருக்கிறது.

### பெண்கள் சிந்தனைக்கு....

பெண்கள் பெரும் வாயாடிகள் என்றும் வீண் வார்த்தை வளர்ப்பவர்கள் என்றும் குறை கூறப்படுகின்றனர். சில பெண்களைப் பொறுத்தவரை இது முற்றிலும் உண்மை கூட. வாயாடிப் பெண்கள் சிந்தனைக்கு இதோ ஒரு பெரியாரின் கூற்று. படித்துப் பயனடையுங்கள்!

"நீ அதிகமாகப் பேசும் போது சிந்தனையில் சரிபாதி கொலை செய்யப்பட்டு விடுகிறது"

—கலீல் இப்ரான்

# வள்ளுவருக்கு பெண்கள் அஞ்சலி

இன்றுநாம் வள்ளுவர்விழாக் கொண்டாடுகிருேம் அல்லவா? எத்தனையோ பெண்கள் கூட இவ்விழாக்களில் பங்குபற்றிச் சொற் பொழிவுகளும் ஆராதனைகளும் நடாத்துகிருர்கள். பெருந்தொகையான பெண்கள் விழாக்களுக்குச் சென்று வள்ளுவர் வாசகங்களைச் சொற்பொழிவுகள் மூலமாகவும், விரிவுரைகள் மூலமாகவும் செவியாரக் கேட்டு மகிழ்கிருர்கள். வள்ளுவருக்கு விழா எடுப்பதிலும் விழாக்களைச் சிறப்பிப்பதிலும் அதிக அக்கறை செலுத்தும் நாம் வள்ளுவர் வகுத்த நெறிகள் பற்றி வாழ்க்கையிலும் ஒழுகி வருகிருேமா என்று சிந்திப்பது நல்லதல்லவா? குறிப்பாகப் பெண்களாகிய எமக்கு வள்ளுவர் கூறியுள்ள புத்திமதிகள் அனேகம். பெண்களின் சிறப்பையும் இல்லற வாழ்க்கையில் அவர்கள் வகிக்கும் பெரிய ஸ்தானத்தையும் போற்றிக்கூறும் வள்ளுவர் குறள்கள் பெண்களுக்குத் தெம்பையும் உற்சாகத்தையும் அளிக்கின்றன.

### வாயார வாழ்த்திஞர்

'மனைமாட்சி யில்லாள்கணில்லாயின் வாழ்க்கை
யெனமாட்சித் தாயினுமில்!

எத்தகைய செல்வமும் மாட்சிமையும் மிக்க ஒருவனுங்கூட, இல்வாழ்க்கைக்குஏற்றநற்குண நற்செய்கைகளில்லாத மனைவியைப் பெற்ருனேயானல், அவனது செல்வங்கள் மாட்சிமைகள் யாவும் வீண்போகும் என்று கூறினர். நற்குண நற்

(7-ம் பக்கம் பார்க்க)

# மகளிர் மன்றம்

# மாதர்குல மாணிக்கங்கள்

## 1. சரோஜினிதேவி அம்மையார்

## கவர்னராகவும் கடமையாற்றிய வீரப்பெண்மணி

இந்தியாவின் கவிகோகிலம் என்றும் கவியரசி என்றும் பாராட்டுப் பெற்ற சரோஜினி நாயுடு அவர்கள் 1879-ம் ஆண்டு பெப்ரவரி 13-ம் திகதியன்று பிறந்தார். அகோரநாத் என்பவர் இவருடைய தந்தையாவர். சரோஜினிதேவி இவர்களுடைய மூத்தமகள். அகோரநாத், சட்டோபாத்தியாய என்ற பட்டப் பெயருடைய வங்காள பிராமண குலத்தினர். இவர் இங்கிலாந்து சென்று விஞ்ஞானத்தில் டாக்டர் பட்டம் பெற்று ஹைதராபாத்தில் நைஜாம் கல்லூரியின் தலைவராக அமர்ந்தார். சரோஜினிதேவியின் தாயார் சிறு வயதிலேயே வங்காள மொழியில் பல கவிதைகள் இயற்றியுள்ளார். தாயைப்போலவே மகளும் சிறுவயதிலிருந்தே கவிதை எழுதுவதில் ஈடுபாடுகாட்டி வந்தார்.

சிறு வயதிலிருந்தே சரோஜினி அவர்கள் கவிதை இயற்றத் தொடங்கினர். தமது 13-வது வயதிலேயே ஆறு நாட்களில் 1300 வரிகள் கொண்ட ஆங்கிலக் கவிதை ஒன்றை சரோஜினிஅம்மையார் இயற்றினர். ஆங்கிலமொழியிலுள்ள புகழ்மிக்க "ஏரிமங்கை" (lady of the lake) என்ற காவியத்தைப் போன்று இவரது கவிதை அமைந்திருந்தது. இவ்வளவு சிறிய வயதிலேயே சிறந்த கவிதை இயற்றும் திறமை பெற்றபெண்சரோஜினி அம்மை ஒருவரே எனலாம். அம்மையார் 11 வயதுச் சிறுமியாகவிருந்தபோது அவருக்கு இயற்கணிதக் கணக்கு ஒன்று போட வரவில்லையாம். அதற்கு பதில் ஒரு கவிதையையே அவர் எழுதிவிட்டாராம். தமது 12-வது வயதில் சரோஜினி அம்மையார் நோயுற்றிருந்தாராம். அப்போது 2000 வரிகள் கொண்ட நாடகம் ஒன்றை இயற்றினராம். தமது 14-ம், 15-ம், 16-ம் வயதுப் பருவத்தில் பெருந்தொகையான நூல்களை வாசித்தார். ஒரு நாவலும் எழுதினர். சிறுவயதிலிருந்தே அவருக்கு வாசிப்பதிலும் எழுதுவதிலும் பெரிதும் பிரியமிருந்தது.

சரோஜினிதேவி அவர்கள் கல்லூரிப படிப்பிலும் மகா கெட்டிக்காரியாகவிருந்தார். தமது 12-ம் வயதில் சென்னைப் பல்கலைக்கழகத்தில் மெட்ரிக்குலேஷன் பரீட்சையில் மாகாணத்திலேயே முதல்வராகத் திகழ்ந்தார். 1895-ல் (அவரது 16-வது வயதில்) இங்கிலாந்து சென்று, முதலில் லண்டனிலுள்ள கிங்ஸ் கல்லூரியிலும் பின்னர் கேம்பிரிட்ஜிலுள்ள கர்ட்டன் கல்லூரியிலும் கல்வி பயின்ருர். 1898-ல் ஹைதராபாத்துக்குத் திரும்பினர்.

கல்லூரிப்படிப்பிலும்கவிதை புனைவதிலும் மிக்க வல்லமையுடையவராக மிளிர்ந்த இவர் தமது சொந்தவாழ்க்கையிலும் ஒரு சில புரட்சிகளைப் புரிந்துள்ள வீரப்பெண்மணியாவர். இவர் பிறந்து வளர்ந்த காலமொன்றில் வெற்றிகரமாக இவர் சாதித்த சில காவியங்கள் இவரது மனத்தைரியத்தையும் தளராத உறுதியையும் எடுத்துக்காட்டுகின்றன. தமிழ்நாட்டின் வீரப்பெண்மணி ஒருவர் மட்டுமன்றி உலக மாதர்களிடையேயும், இவர் முக்கியம் வாய்ந்தஒருவராவர்.

லண்டனிலிருந்து திரும்பிய சரோஜினிதேவியவர்கள் சாதிக் கட்டுப்பாடுகளை மீறி ஹைதராபாத்தில் சமஸ்தான டாக்டராக இருந்த எம். கோவிந்தராஜ் நாயுடுவைத் திருமணஞ்செய்தார். அவரது காலத்தில் இது ஒரு புரட்சியான செய்கை கூட.

1915-ல் லண்டனிலே மகாத்மா காந்தியைச் சந்தித்தார். அன்று முதல் இவர் தமது வாழ்நாள் முழுவதையும் அரசியல் விஷயத்தில் செலுத்த முற்பட்டார். இன்றைய நாகரிக உலகில் கூடத் தமிழ்ப்பெண்கள் அரசியல் விஷயங்களில் தலையிடமாட்டார்களல்லவா? சரோஜினி தேவியவர்களை ஒரு புரட்சிக்காரி என்று சொல்வதிலும் பார்க்கப் பிற்காலத் தமிழ்ப் பெண்மணிகளுக்கு வழிகாட்டிய தீரப்பெண்மணி என்பதே பொருத்தமானதாகும்.

காஞ்சிபுரத்தில் கூடப்பட்ட தமிழ்நாட்டு அரசியல் மகாநாட்டிற்குத் தலைமை வகித்தார். வெளிநாடுகளில் நடைபெற்ற மகாநாடுகளுக்குத் தலைமை தாங்கிய தமிழ்ப் பெண்மணி இவரேயாவர். கிழக்காபிரிக்காவில் உள்ள மொம்பாஸா நகரத்தில் நடைபெற்ற மகாநாட்டிற்கும் இவர் தலைமை தாங்கினர். தென் ஆபிரிக்காவில் சுற்றுப்பிரயாணஞ்செய்து, அங்குள்ள இந்திய மக்களுக்கு ஊக்கமூட்டினர்.

1928-ல் இங்கிலாந்துக்கும், அமெரிக்காவுக்கும் சென்று, இந்திய மக்களின் சுயராச்சியக் கிளர்ச்சிபற்றிச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினர்.

1930-ல் காந்தியடிகள் தொடங்கிய உப்புச்சத்தியாக்கிரகத்திலும் இவர் கலந்துகொண்டார். அந்த ஆண்டிலிருந்து காங்கிரஸ் காரியக் கமிட்டி உறுப்பினராக இருந்தார். 1931-ல் லண்டனில் நடைபெற்ற வட்டமேசை மகாநாட்டுக்கு காந்தியடிகளுடன் சென்று வந்தார்.

எல்லாவகையிலும் திறமை பெற்று வாழ்ந்த அம்மையார் சிறை புகுவதற்குக் கூடத் தயாராகவிருந்தார். 1942-ல் காந்தியடிகள் தொடங்கிய தனிநபர் சத்தியாக்கிரகத்தில் பெண் பெரியாராகிய இவரும் கலந்து கொண்டு பின்னர் சிறை சென்ருர்.

1947-ல் இந்தியா சுதந்திரம் பெற்றதும் சரோஜினிதேவி அவர்கள் உத்தரப்பிரதேசத்தின் கவர்னராக நியமனம் பெற்ருர். அவ்வாண்டில் டில்லியில் நடைபெற்ற ஆசிய உறவு மகாநாட்டில் தலைமை வகித்தார். உத்தரப் பிரதேசத்தின் கவர்னராகவிருந்தபோதே 1950 மார்ச் 2-ம் நாள் காலமானுர்.

இப் பெண்பெரியாரின் புகழ் என்றுமே மங்காது. இவரின் மீதுள்ள பெருமதிப்பினலும் அன்பினலும் எத்தனையோ பெற்ருேர்கள் தமது பெண் குழந்தைகளுக்கு இவரது பெயரையிட்டும் வருகிருர்கள். தமிழ்நாட்டு மாதர்களிடையே மட்டுமன்றி மாதர்குலத்திலேயே இவர் ஒரு மாணிக்கம் போன்றவர்.




# நாடு நலம் பெற . . .

# ஆடி மழை தேடி உழு

## நெற்சாகுபடி அனுபவக் குறிப்புகள் 1

" 'லிங்கம் தோட்டம்' என்னும் கமம் இருப்பதை அவதானித்து கமத்துள் மோட்டார் வண்டியைச் செலுத்தி அங்கே மிக அற்புதமான காட்சிகளைக் கண் குளிரக் கண்டேன். என்ன அழகான கமம்? பச்சைப் பசேலான வெங்காயப் பாத்திகள் கடலைப் பாத்திகள் கமத்திற்கேற்ற மனை கமத்தின் முன் புறத்தில் கொத்துக் கொத்தாகக் கனிகாவுந் தோடையும் மாவும் — இது அல்லவா கமம்?" என்பதாக சென்ற வார 'நாடு நலம் பெற...' பகுதியில் பேராசிரியர் மயில்வாகனம் சொல்லியிருந்தார் அல்லவா? 'லிங்கம் தோட்டத்தின்' சொந்த புருஷனே தமது விவசாய அனுபவத்தைப் பற்றிச் சொல்வதானால் பலருக்கும் பலனுண்டு. பெருங் கமக்காரரான பேராசிரியர் செ. சுந்தரலிங்கம் அவர்களின் நெற்சாகுபடிக்குறிப்புகளை அடுத்த வாரமும் படிக்கத்தவறாதீர்கள்.

### 1. தண்ணீர் வசதிகள்

கிராமக் குளங்களும் நெல் வயல்களும் பிரிக்க முடியாத வண்ணம் பின்னப்பட்டிருக்கின்றன. வயல்களுக்கு குளத்தில் கொட்டுகள் அல்லது சலூசுகள் மூலம் வாய்க்கால்களினூடாக நீர்ப்பாய்ச்சப்படுகின்றது. பள்ள வயல்கள் பல இடங்களில் கீழ் குளத்தின் அலை கரைத்தண்ணீரால் மூடப்படுகின்றன. மேல்நிரம்பிவழியும் வான் தண்ணீர் நெல்வயல்களினூடாக இயற்கையாக அமைந்துள்ள அல்லது செயற்கையாக அமைக்கப்பட்ட வாய்க்கால் வழியாக ஓடி கீழ் குளத்தைச்சேரும். இந்நிலைமை புராணகாலந்தொட்டு சமீப காலம் வரை நடைமுறையிலிருந்து வந்திருக்கின்றது. இவ்வண்ணம் வாய்க்கால்களில் பாயும் வான் தண்ணீரைத் தேவையான எந்தநேரத்திலும் வயல்களுக்கு மறித்துப் பாய்ச்சலாம். வான் தண்ணீர் பாயும் பாதைகள் அநேகமாக வண்டிகள் வயலினூடாகப் போய் வர உதவும் பாதைகளாகவும் அமைந்திருந்தன. இந்த நீர்ப் பாய்ச்சல் பாதைகளில் வண்டிகள் செல்வது மிகவும் சுலபமாக இருப்பதை நான் அறிந்தேன். சென்ற காலங்களில் வயற்படங்களைத் தயாரித்த சேவையர்மார்கள் (உலாந்தாக் காரர்) இந்த வான் தண்ணீர் பாயும் பாதைகளை வண்டிகள் செல்லும் பாதைகளாகவே கருதியிருக்கிறார்கள். இதனால், அப்பாதைகள், முக்கியமாக வான் தண்ணீர் வழிந்தோடும் வாய்க்கால்கள் என்பதை உணரத்தவறிவிட்டார்கள்.

இவற்றைவிட, மேல் குளத்திலிருந்து நீர்ப்பாய்ச்ச முடியாத தறைகளும், கீழ் குளத்தின் அலைகரைத் தண்ணீரால் மூடப்படாத தறைகளும் உண்டு. அந்தத் தறைகள், பொதுவாக மழைத் தண்ணீர் விழுந்து, குளத்துள் பாயும் வடிதரைப் பகுதியின் பாகங்களாகும். இப்படிப்பட்ட தறைகள் இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்படலாம்:-

(1) மேல் குளங்களிலுள்ள தண்ணீர்க் கசிவினால் எந்தக் காலத்திலும் ஈரலிப்பாக இருக்கும் தறைகள்.

(2) மழைபெய்யும் நேரத்தில் மட்டும் ஈரப்பசையடையும் தறைகள்: இத்தறைகள் மழை பெய்த அளவுக்கு மட்டும் ஈரமுடையதாய் வெயில் எறிக்கும் போது வரண்டுபோகும். இத்தறைகளில் நெல் தவிர்ந்த, மற்றும் தண்ணீர்அதிகம் தேவைப்படாத தானிய வகைகள் விதைக்கலாம். நிலக்கடலை பயிரிடுவதற்கும் இத்தறை மிகவும் வாய்ப்பானது.

இதிலிருந்து ஓர் உண்மை பெறப்படுகிறது. அதாவது நெற்செய்கைக்கு, பிரதானமாகவும், அத்தியாவசியமாகவும், தேவைப்படுவது தண்ணீர். தேங்கி நின்றாலும் சரி, பாய்ச்சிக் கட்டினாலும் சரி, விதைத்த நாட்தொட்டு வெட்டும் வரையில் அந்தத் தறையில் தண்ணீருக்குக் குறைவு இருக்கக் கூடாது.



லிங்கம் தோட்டத்தில் விவசாயி சுந்தரலிங்கம்

குளவெள்ளாண்மையை நான் தவறாது செய்வது வழக்கம். அதனால் எனக்கு அதிக பலன் கிடைக்கின்றது. சில வருடங்களில் நான் அவ்விதம் விதையாது விட்டிருப்பேனாயின் மிகவும் நட்டமடைந்திருப்பேன். நான் தொடர்ந்து வற்புறுத்திப் புத்திமதி கூறி வந்ததின் பேரில், வவுனியாப்பகுதியில், இப்போது பல கமக்காரர்கள், என்னைப் போலவே, கிராமப் புறங்களிலும், குள வெள்ளாண்மை செய்ய ஆரம்பித்திருப்பதைக் கண்டு பெரு மகிழ்ச்சி அடைகிறேன். குறிப்பிட்ட குளத்திலுள்ள வயல்களை அதன் உரிமைக்காரர் பங்கு வீதமாகவோ, கூட்டுறவு முறையிலோ செய்துவருகிறார்கள். குள வெள்ளாண்மையாலும், காய்ச்சுப் புழுதி வெள்ளாண்மையாலும் அதிக ஆதாயமும், நன்மையும் ஏற்பட்டிருக்கிறது. இதன் காரணமாக, சமீபகாலந் தொடக்கம், பருவ மழையின்மையால் அல்லது அகால மழையினால் அல்லது கடும் வரட்சியினால் ஏற்படும் பயிர்ச்சேத அழிவுகளுக்கும், விளைவுநட்டங்களுக்கும் சகாய வேலை உதவிட்டணம் வழங்குவதில் அரசாங்கம் அதிக பணத்தைச் செலவு செய்யும் அவசியத்தைத் தவிர்க்கக் கூடியதாக இருக்கிறது.

### 2. பூமியைப் பண்படுத்தல்

"ஆடிமழை தேடி உழு" என்னும் வாக்கியம் வன்னிக்கமக்காரர்கள் மத்தியில் வழக்கத்திலிருந்து வருகின்றது. இவ் வாக்கியத்தின் உண்மை, அநுபவவாயிலானது மட்டுமல்ல விஞ்ஞான அடிப்படையிலும் சரியானது. ஒவ்வொருவருடமும் ஆடி - ஆவணி மாசங்களில் பெய்யும் இரண்டு மூன்று பாட்ட மழை விலைமதிக்க முடியாத நன்மையுடையதாகும். இந்த மழை பெய்த பின் தறை உழவுக்குகந்த மாதிரி ஈரம் உடையதாக இருக்கும்போது உழவேண்டும். மழை விட்டு மூன்று அல்லது நாலு அல்லது ஐந்து நாட்கள் கழித்தே உழத் தொடங்குவது நல்லது. அதற்குள், புல்பூண்டு செடி விதைகள் முளைகொண்டுவிடும்; அதனால், முளைகொண்ட இவ்விதைகள் உழவின்போது மண்ணுள் அமுக்கப்பட்டு வளராதபடி முளையிலேயே கழையப்பட்டு விடும். எவ்வளவுக்கெவ்வளவு அடிக்கடி மழை பெய்கிறதோ அவ்வளவுக் கவ்வளவு தரம் உழவும் செய்துகொள்வது வாய்ப்பாயிருக்கும். வயல் உழவு முறையிலும் மூன்று விதத் தறைத்தன்மை கவனிக்கப்படல் வேண்டும். அவை யாவன:-

(1) குளப் படுக்கை உழவு; அதாவது, ஆறுகிழமை வயதுள்ள ஒரு நெற்பயிர் நுனி குளத்தின் வான்மட்டத்திற்குச் சற்று மேலாக வளர்ந்துவரக் கூடிய அளவுக்கு அமையக் கூடிய நிலப்பரப்பு முழுவதும் இதனுள் அடங்கவேண்டும்.

(2) ஏனைய, நீர்ப்பாய்ச்சும் வயல்கள் உழவு.

(3) மேட்டுச் களைத்தறை அல்லது மானாவாரித் தறை உழவு.

"ட்ரூக்ரர்" உழவு முறையினால் கமத் தொழிலில் புரட்சிகரமான மாற்றங்களும், தீவிர முன்னேற்றங்களும் ஏற்பட்டுள்ளன. உழவு குறுகிய நேரத்தில் முடியக்கூடிய முயற்சியாகிவிட்டது. ஆறு வருடங்களுக்கு முன்னர் மாடுகளினாலும் கடாக்களினாலும் செய்யமுடியாத வேலைகளை இன்று இயந்திரங்கள், இரவு பகலாக இலகுவாகச்செய்து விடுகின்றன.

சட்டிக் கலப்பைகளை அடிக்கடி உழவுக்குப் பாவிக்கக் கூடாது. மண்ணையும் அதிக ஆழத்தில் புரட்டுதல் கூடாது. ஆழப்புரட்டி உழுவதனால் உவர்மண் அல்லது கிறவல் மண் கிளறப்பட்டு, மேற்தறை கடுந்தறையாகிப் பழுதடைந்துவிடும். நெற்பயிர் ஆழத்திற்கு வேர் விடாத மேற்தறைப்பயிர் ஆகும். ஆகவே, நெற்பயிருக்கு உணவும், உறுதுணையுமான மேற் படையிலுள்ள பசளை மண்ணை உழவின்போது பாதுகாத்துக்கொள்ள விசேட கவனம் செலுத்தவேண்டும். நிலம், தொட்டாற் சுருங்கி, முள்ளி ஆகிய மற்றும் செடிப்பூண்டுகளினால் மூடப்பட்டிருப்பின் சட்டிக் கலப்பை உழவு நல்லது. அதிலும் விசேடமானது "மோள் போட்" கலப்பை உழவாகும். வயலிலுள்ள புல்பூண்டு செடிகொடிகளையெல்லாம் அழிப்பதற்கும், அவற்றைப் புதைத்துப் பசளையாக்குவதற்கும் உகந்த உழவு "மோள் போட்" கலப்பை உழவாகும். வயலில் சில பகுதிகளில் உவர்த் தன்மையிருக்குமாயின் அதை அகற்ற விசேட நடைமுறைகள் கையாளப்படுதல் வேண்டும். ஒன்றில் மேற்படை மண்ணை அகற்றவேண்டும்; அல்லது, பச்சைப் பசளை, அதாவது, இலைகுழைப்பசளை போட வேண்டும்; அல்லது, உகந்த செயற்கைப் பசளைகள் போட வேண்டும். குளப் பெருக்கைப் பரவிப் பண்படுத்துவது மிகவும் நல்லது.

### 3. (அ) காய்ச்சுப் புழுதி விதைப்பு

இங்கிலிஷ் செப்டம்பர் மாசத்தில்வரும் இரண்டாவது அட்டமி நவமித்திதிக்குப் பின்னர் தறை நிலைபரத்தைக் கவனித்து விதைக்க ஆரம்பிப்பது சிறந்ததாகும் என்பது எனது அனுபவம். இது ஒரு வகையில் தற்பாதுகாப்பான செய்கையாகும். ஏனெனில், அகால மழையினால் அல்லது மழையின்மையினால் ஏற்படக்கூடிய நஷ்டங்களை இம் முறையைக் கையாள்வதன் மூலம் குறைத்துக் கொள்ளலாம்.

நிலம் நன்கு காய்ந்திருக்க வேண்டும். நிலமட்டத்திலிருந்து கீழே கிட்டத்தட்ட ஆறு அங்குல ஆழத்திற்கு ஈரலிப்பு இருக்கவேபடாது. விதைப் பின்போது சூடான சுவாத்திய மாக இருக்கவேண்டும். ஆடி மழையோடும், அதன் பின்னரும், அநேக முறை உழுது புழுதியாக்கப் பட்டிருப்பதால் நிலம் ட்ரூக்ரர் முள்ளுக்கலப்பையால் உழவு செய்வதற்கு ஏற்றதாக இருக்கும். முள்ளுக் கலப்பை உழவு கடைசி ஆறு தொடக்கம் ஒன்பது அங்குல ஆழத்திற்குக் கீழ் போகாதிருக்க வேண்டும். நல்ல இனவிதை நெல்லை விதைத்து மீண்டும் உடனே ஒரு அங்குல ஆழத்திற்கு மேற்படாமல் முள்ளுக் கலப்பை கொண்டு மறை உழவு செய்தல் வேண்டும். குளப்படுக்கைத் தறைகளுக்கு ஐந்து அல்லது ஆறு மாசங்களில் விளையக்கூடிய அடுக்கு வெள்ளை, குளவாழை ஆகிய நெல்லினங்களை விதைத்தால் நல்லது. நீர்ப்பாய்ச்சும் மற்றும் வயல்களுக்கு நாலு மாசத்தில் விளையும் இன நெல் விதைக்க வேண்டும். இந்நாட்களில் "எச் 4" என்னும் இனநெல் இவ்வகை நிலங்களுக்கு ஏற்றதாகக் கருதப்படுகிறது. அதனால் அதிக பலன் கிடைக்கும் என்னும் நம்பிக்கையில் உண்மையும் இருக்கிறது. நீர்ப்பாய்ச்சல் செய்ய முடியாத மேட்டு நிலங்களில் "எச் 4" அல்லது

(10-ம் பக்கம் பார்க்க)



இந்தியாவிலுள்ள அமெரிக்க தூதுவர் ஜோன் கெனத் கல்பிரய்த் ஒரிசா மாகாணத்தில் சேறும் சகதியுமுள்ள வயலொன்றில் இந்தியவிவசாயியுடன் பேசிக்கொண்டு நிற்கிறார். புதுடில்லிக்கு இவர் விஜயஞ் செய்தபோது இப்படியான பல சுற்றுப்பிரயாணங்களை மேற்கொண்டார்.

மிகத் திறமையான

பவர்ஸ்

உரங்கள்

கிருமி நாஸ்தினி தெளிக்கும் யந்திரங்களும்

லாபகரமாய் பயிரிட

- புகையிலை
- வெண்காயம்
- மிளகாய்
- மரக்கறி
- நெல்
- வாழை

மற்றும் பழவகைகளும்

கிடைக்குமிடம்

ஏ. பவர்

அன் கொம்பனி லிமிட்டெட்,

த. பெ. 11, கொழும்பு

# ஆடி மழை தேடி உழு

(9ம் பக்கத் தொடர்ச்சி)

மூன்று மாசத்தில் விளைந்து கொடுக்கும் இனங்களான பச்சைப் பெருமாள் அல்லது சீனட்டியன் ஆகிய இன விதை நெல்லை விதைக்கலாம். "ஒரே வயலில் ஓரின நெல்லை இடைவிடாது தொடர்ந்து விதைப்பது உகந்ததல்ல" என்னும் ஒரு பரம்பரைக் கொள்கையும் உண்டு. இதன் முழு உண்மையையும் இன்னும் நான் பூரணமாகப் பரீட்சித்துப் பார்க்கவில்லை. ஓரளவு உண்மை இதில் இருக்கக் கூடும்.

இரு முக்கிய அம்சங்களை நான் அவதானித்திருக்கிறேன்:-

முதலாவதாக: புழுதி விதைப்பின் பின்னர், குளத்திலிருந்து பாய்ச்சும் நீரில் தங்கியிருக்கும் வயல்களாயினும் சரி, அல்லது கீழ் குளத்து நீரினால் மூடப்படும் வயல்களாயினும் சரி, சூரியவெப்பத்திலும், காய்ச்சுப் புழுதியிலும், எவ்வளவுக்கெவ்வளவு நீண்ட நாட்கள் விதைத்த நெல்லு மண்ணுள் கிடக்க முடியுமோ, அவ்வளவுக்கவ்வளவு, பயிர் செழித்து வளர்வதற்கும், விளைவுப் பொலிவுக்கும் அது உகந்ததாயிருக்கும். சூரியன் கதிரொளியில் பயிருக்குகந்த ஏராளமான பசளைப் பொருள்கள் உண்டென்பது கண்ணறிவு. சூரியன் கதிருக்கும், நெற்கதிருக்கும் சம்பந்தமுண்டு. புல்பூண்டு செடிகள் ஆகியன நெல் முளை கொண்ட பின் இப்படிப் பண்படுத்தப்பட்ட தரையில் தலையெடுக்கமாட்டாமல், வயலில் நிறையும் தண்ணீருள் அமிழ்ந்தி அழுகிச் சிதைந்துவிடும். ஔவைப்பிராட்டியாரின் அமுதத் தமிழ் வாக்கியத்தின் அரும்பொருளை இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் ஞாபகப்படுத்துவதும் ஏற்றதாயிருக்கும்.

"வரப்புயர நீருயரும்,
நீருயர நெல்லுயரும்."

என்னும் ஔவை மொழி நிலைமையைச் சுருக்கமாகவும், விளக்கமாகவும் எமக்கெடுத்துச் சொல்லுகின்றது. அதாவது: வயலில் தண்ணீர் அதிகமாகத் தேங்கி நிற்கமுடியுமானால், புல்பூண்டு செடிகள் யாவும் அழிந்து பசளையாவதோடு நெற்பயிர்களும் செழித்தோங்கிவளர்ந்து பொலிவான விளைச்சலைத் தரும்" என்பது தான் பொருளாகும்.

குளத்தில் சேமிக்கப்பட்டிருக்கும் நீரை அரும்பெரும் பொருளாகப் பாவிக்கவேண்டும். அதைக்கண்டபடி வீணாக்குவதைத் தவிர்க்கவேண்டும். ஔவை சொற்படி, அந்தக் கால முறைப்படி, அதிகம் தண்ணீர் வயலில் தேங்கி நின்றால், புல்பூண்டு செடிகள் யாவும் அழிந்து போவதற்கு உதவுமாயினும், குளத்தண்ணீரை இவ்விடயத்தில் வீணாக்கிப் போடாது கவனமாக இருந்து கொள்ளவேண்டும். அன்றேல், தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்படும் பட்சத்தில் நெல்வயல்கள் வரண்டு, நெற்பயிர்கள் காய்ந்துபோகவும் நேரிடலாம்.

இரண்டாவதாக; நீர்ப் பாய்ச்சல் செய்யமுடியாத அல்லது கீழ்க்குழத்து நீரால் மூடப்படாத தறைகளை அக்டோபர் மாதத்தில் மழை பெய்தவுடன் விதைக்கத் தொடங்க வேண்டும். அக்டோபர் மாதத்தில் ஒருமுறை அல்லது இருமுறை மழை பெய்ததும், புல் பூண்டு செடி விதைகளை முளை கொள்ள மூன்று அல்லது நாலு அல்லது ஐந்து நாட்கள் இடைவெளிவிட வேண்டும். நிலத்தை முள்ளுக் கலப்பையாலும், அல்லது வசதியெனில், விசேடமாக, "டிஸ்க்-ஹறோ" வாலும் உழுது, நல்ல விதை நெல்லை உடனே விதைத்து தறையை மறுபடியும் உழுது விட வேண்டும். மறை உழவு ஒரு அங்குலம் அல்லது இரண்டு அங்குல ஆழத்திற்கு மேற்படக்கூடாது. இதற்கு, அதிகம் ஈரமான தறையாயின் ட்ருக்ரரிலும் பார்க்க மாட்டுழவே உகந்தது. இதனால் புற்செடிகள் நெற்பயிர்களை மூடி வளர்ந்து மூச்சுத்திணற வைப்பதைக் குறைத்துவிட முடியும். இப்படியான விதைப்பு முறை வன்னிப்பகுதியில் பண்டைக் காலத்திலிருந்தே பின்பற்றப்பட்டு வருவதாக அறிகிறேன். இதை "ஈரப்புழுதி விதைப்பு" என்று அழைப்பர். ஏற்கனவே நான் விபரித்திருக்கும் மற்றைய முறையைக் "காய்ச்சுப் புழுதி விதைப்பு" என்று வளங்குவர். இவை இரண்டும் வெவ்வேறு விதமான விதைப்பு முறைகள் ஆகும்.

வவுனியா - முல்லைத்தீவு மாவட்டத்திற்கு அந்தக்காலத்தில் உதவி ஏசண்டராக இருந்த லூயிஸ் என்னும் ஐரோப்பியர் வன்னிப்பகுதியிலும் அப்பகுதி மக்களோடும் வாழ்ந்து பெற்ற அனுபவங்களைத் திரட்டி 1895-ம் ஆண்டில் "வன்னிப் பகுதிக் கைநூல்" ஒன்றினை பல பிரிவுகளாக எழுதி வெளியிட்டார். அந்தக் கைநூல் விபரத்தில் உள்ள கீழ்க்காணும் குறிப்புரைகள் எனது கவனத்தைக் கவர்ந்தன:-

"மழை நீர் வருகையால் அல்லது குள நீர்ப்பாய்ச்சலால் மண் போதியளவு நுகைவும், ஈரலிப்பும் உடையதாய் இருக்கும்போது உழுது விதைக்கப்படும். பின்னர், மூன்றும் அல்லது ஐந்தாம் நாளன்று திரும்பவும் உழப்படும். இம்மாதிரியான விதைப்பு அக்டோபரிலும், நவம்பரிலும் நடைபெறும். இந்த முறை அதிருப்தியானதும், சோம்பேறித்தனமானதும் ஆகும். ஏராளமான கமம் உள்ள கமக்காரர்களினால் இந்த முறை பெரிதும் விரும்பப்படுகிறது. இந்த முறையை மேற்கொள்ளுவதனால் புல், பூண்டுகளும், செடிகளும் வளர உதவியாகும். மண்ணைப் போதிய அளவு உழுது மறுத்துப் பண்படுத்தி வையாத காரணத்தால் நெல்லை விதைக்கும்போது, நெற்பயிர் வேர் விட்டு வீறுகொண்டு வளர முடியாத நிலைமை ஏற்படுகிறது. இது ஒரு புறமிருக்க, தொடர்ந்து மழை பெய்தால், முளை நெல்லை விதைபபார்கள்."

நெல்லை விதைக்க முன்னர் இரண்டொரு உழவை மட்டும் உழுதுவிடும் முறையிலும், மந்தமான எருமைக் கடாவிலும் தங்கியிருந்த சென்ற கால நிலைதரத்தோடு ஒப்புநோக்கிப் பார்க்குமிடத்து இந்தக் குறிப்புப் பொருத்தமுடையதாக இருக்கலாம். ஆனால், இக்காலத்தில் விரைவான "ட்ருக்டர்," சட்டிக் கலப்பை என்பவற்றால் விதைப்புக்கு முன் நாலு அல்லது ஐந்து தரங்கள் மீட்டும், மீட்டும் உழுது பண்படுத்தும் சந்தர்ப்பம் வசதிபோல உண்டாதலின், லூயிஸ் என்பாரின் குறிப்புரைகள் பொருத்தமானதாகத் தெரியவில்லை. காலமும் மாறக் கடைப்பிடிக்கும் கொள்கையும், செயலும் மாறிவிட்டது எனது சொந்த அனுபவத்தைக் கொண்டு நான் சொல்லக் கூடியது என்னவானல் ,ஆடி மழையின் போது நாலு அல்லது ஐந்து முறையுழுது பண்படுத்திய மானாவாரித்தறையில், அக்டோவர் மாதத்தில் முதல் மழை பெய்து மூன்று அல்லது ஐந்து நாட்களுக்குப்பின் "டிஸ்க்ஹறோ" வால் உழுது, உடனடியாக விதைத்து, நாட்டுக் கலப்பையால் சரி, அல்லது முள்ளுக் கலப்பையால் சரி, மறுத்து விட்டால், நெற்புயிர்கள் புல் பூண்டுகளினால் மூடப்படாது மேலோங்கி விரைந்து வளரும். ஆனால் இதற்கும் பருவமழை அல்லது காலபோக மழை முறையாகப் பெய்து கொடுக்க வேண்டும். இதைவிட லூயிஸ் என்பார் குறிப்பிட்டுள்ள மாதிரி "விதைத்து மூன்றும் அல்லது ஐந்தாம் நாளின் பின்னர் திரும்பவும் உழும் முறை" சம்பந்தமாக நான் இன்னும் பரீட்சித்துப் பார்த்து அனுபவப்படவில்லை. ஆயினும் இம்முறை நம்முன்னோர்களின் அனுபவத்தின் அடிப்படையில் கண்டறிந்த முறையாதலின், அதில் உண்மையும், நன்மையும் உண்டென்பது தெளிவாகும். எனது அனுமானப்படி, இம்முறையை அனுசரிப்பதனால்:

முளை கொண்ட நெற்பயிரைத் தாக்காத வண்ணம், புல் பூண்டு செடி விதைகள் முளைப்பதைத் தடுக்க முடியும்; இன்னும், நெல்லு முளை கொண்டதும், மழை தொடர்ந்து பெய்யாவிடின் அவை மண்ணில் ஏற்படும் புழுக்கத்தில் அவிந்து பழுதாகா வண்ணம், மண்ணைக் கீழ் மேலாகப் புரட்டி, நுகைவாக்கி, காற்றோட்டம் வெளிச்சம் என்பனவற்றை ஏற்படுத்தி, அடி ஈரத்தையும் பாதுகாக்க முடியும்; மூன்றாவதாக, இளம்பயிர்கள் நெருக்கமின்றி, விரைந்து வேர் விட்டுச் செழித்து வளரவும் உதவியாகலாம். இந்தவிதமான நன்மைகள் அவ்வித உழவினால் ஏற்படக்கூடும் என்பதை நான் நம்பிக்கொள்ளக் கூடியதாக இருக்கிறது. யாழ்ப்பாணக்குடா நாட்டில் சில பகுதிகளில் இன்றும் நடைமுறையிலிருந்து வரும் "முளைஉழவு" என்னும் முறையை வன்னிப் பகுதிகளில் ஓரளவு மறந்து, மறைந்து போன, கைவிடப்பட்ட முறையாயிருப்பினும், லூயிஸ் என்பார் குறிப்பிட்டுள்ள உழவுக்கு ஏறக்குறைய ஒற்றுமையுடையதாய் இருக்கின்றது. முளை உழவு என்பது, விதைத்து மூன்று தொடக்கம் ஐந்து நாட்களின் பின்னர் "மேல் மண்ணைச் சுரண்டி அல்லது கீறி உழுதலாகிய மேல்உழவு" என்னும் முறையாகும். இந்த விஷயத்தில், என்னுடைய அருமையான நண்பர்களும் சகாக்களும், ஆதரவாளர்களுமான ஏனைய வன்னிக்கமக்காரரின் அனுபவவாயிலாகக் கண்டறிந்த உண்மைகளை அறிவதற்குப் பெரிதும் ஆசைப்படுகிறேன்.

## 3. (ஆ) ஈரப்புழுதி விதைப்பு

குளத்தில் தண்ணீர் நிரம்பினாலன்றி சேற்று விதைப்பு முடியாத காரியமாக இருந்தது. ஆனால் "ட்ருக்டர்" பாவனைக்கு வந்த நாள் தொட்டு இந்நிலைமை மாறி மடைந்தது. இதிலிருந்து பெறபபடுவது என்ன? நான் ஏற்கனவே கூறியது போல வயல்களை ஆடி மழையோடு உழுது பண்படுத்தி வைத்திருப்பது உவப்பானது. வடகீழ்ப் பருவக்காற்று மழை அல்லது காலபோக மழை நேர்சீராகப் பெய்ய ஆரம்பமானதும், நெல் வயல்களெல்லாம் மழைநீரினால் பரந்திருக்கும்; அல்லது ஓரளவு நிறைந்த குளங்களிலிருந்து சுலூசுகள் மூலம் பெறப்படும் நீரினால் பாய்ச்சப்படும். இப்படியான வயல்களை முள்ளுக் கலப்பையால் உழுது பலகையடித்து முளைநெல்லால் வழக்கமான பழைய முறைப்படி விதைத்துவிட வேண்டும். சேற்றடிப்பு உழவுக்குக் குளத்துத் தண்ணீரைக் கண்டபடி செலவாக்குவதை இயன்றவரை தவிர்க்க வேண்டும்.

(அடுத்த இதழில் முடியும்)





ஒட்டகத்துக்குக்கூட தன்னுடலில் ப்ரோட்டீன் சேமிக்க முடியாது!

அனுதினம் உங்களுக்கு ப்ரோட்டீன் தேவைப் பட்டபோதிலும், உங்கள் தேகம் ப்ரோட்டீனை சேமிக்க சக்தியற்றது. ப்ரோட்டீனையே தினமும் உங்கள் தேகம் எரித்து, தேக உஷ்ணத்தையும் சக்தியையும் உண்டுபண்ணி, பிராணி தாவர உடலமைப்புப் பொருள்களை உருவாக்கி, உடைந்துபோன உடம்பு ஸெல்களை சரிபடுத்துகின்றது. தினமும் உங்களுக்குப் போதுமான ப்ரோட்டீன் கிடைக்காவிடில் — எப்படி ஒரு எண்ணெய் விளக்கின் திரி எண்ணெய் இன்றி தன்னைத்தானே எரித்துக்கொள்கிறதோ, அது போலவே நீங்களும் சிக்கிரத்தில் உங்கள் சொந்த உடலை எரித்து, சக்தி இழந்து, சோர்ந்து போவீர்கள்.




ப்ரான்ட்ஸ் எஸன்ஸ் ஒப் சிக்கன் சுத்தமான, கரையக்கூடிய, கொழுப்பற்ற ப்ரோட்டீனை எளிதில் ஜீரணிக்கக்கூடிய முறையில் கொண்டது. ஒன்று அல்லது இரண்டு சிறு புட்டி ப்ரான்ட்ஸ் எஸன்ஸ் ஒப் சிக்கன் தினமும் உட்கொள்ளுங்கள். விருப்பமானல், சிறிது வெந்நீருடன் கலந்து உட்கொள்ளுங்கள். டாக்டர்கள் இதை நோயாளிகளுக்கும், நோயினின்று குணமடைபவர்களுக்கும், ஜீரண சக்தி குறைந்தவர்களுக்கும் சிபார்சு செய்கின்றனர்.




ஒவ்வொரு நாளும் தேவைப்படும் ப்ரோட்டீனுக்கு, அனுதினம் ப்ரான்ட்ஸ் எஸன்ஸ் ஓப் சிக்கன் உட்கொள்ளுங்கள்.

ப்ரான்ட்ஸ்

எஸன்ஸ் ஓப் சிக்கன்

AT-7121

# சிறுவர் பூங்கா

## எது பெருமை?

— வ. கா. —



பாடசாலைக்குப் போய்ச் சேர்ந்தவுடன் தமிழில் 'அ', 'ஆ' என்ற எழுத்துக்களை ஆரம்பிக்கின்றோம். நாம் முதலில் படிக்கும் 'அ' வில் தொடங்கி தமிழில் உள்ள கடைசி எழுத்தான 'ன்' னில் முடித்து உலகம் அனைத்தையும் - அதன் ஒவ்வொரு அங்கத்தினையும் அளந்து, வரம்பு கட்டி, நல்ல பயிர் வளர்த்து, உலகம் வளம் பெருக வழிகாட்டிய பெருமை திருககுறள் தந்த வள்ளுவரையே சாரும். அவர் தந்த 1330 பாக்களிலும் உலகம் அடங்கியிருக்கின்றது. அவற்றில் அவர் எழுத்து வன்மை விளங்குகின்றது. அவரின் நூலின் பெருமை சொல்ல நம்மால முடியாது! அவருக்குப் பின் தோன்றிய புலவர்கள், அறிஞர்கள் எல்லோருமே அவருடைய எளிய நடையிலும், அரிய கருத்திலும் அளவில்லா நயம் கண்டிருக்கிறார்கள். உலகில் விளங்கும பலமொழி அறிஞர்களும் திருக்குறளை தம் மொழியில் மொழி பெயர்ப்பதற்கு விழைகின்றார்கள் என்றால் திருக்குறளின பெருமையைப் பேசவும் வேண்டுமோ? உயரிய கருத்துக்களைத் திறம்படச்சொல்லும்திறமை உலகில் வள்ளுவனைவிட வேறுஎவர்க்குமில்லை. தெய்வப்புலவர், செந்நாப்போதர், பெரு நாவலர் என மறுபெயர்களால் அழைக்கப்படும் வள்ளுவர் பெருமானுக்கு இன்னும் எத்தனையோ சிறப்புப் பெயர்களைச் சூட்டினாலும் பொருந்தும். அதுபோலவே அவர் தந்த தெய்வ நூலிற்கு பொதுமறை, தமிழ் மறை, வாயுறை வாழ்த்து என்று அழைப்பதுடன் இன்னும் பல சிறப்புப், பெயரிட்டு அழைக்கலாம்.

உலகில் உள்ள எல்லாவற்றைப் பற்றியும் கூறியவள்ளுவர்,

"தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்கு
கற்றனைத் தூறும் அறிவு"

என்று கல்வி பற்றிக் கூறியிருக்கின்றார். தோண்டத் தோண்ட மணற்கேணியில் எவ்வாறுநீர்வருகின்றதோ அதுபோன்று மற்றவர்களுக்குச் சொல்லிக் கொடுப்பதால் நம் அறிவு வளர்கின்றது. எவ்வளவு அழகாகச் சொல்லித் தெளிவாக விளங்கப்படுத்தியிருக்கின்றார் பெருமானார்.

"எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு."

கேட்பதெல்லாம் மெய்ப் பொருள் அல்ல; நல்லது எது, தீயது எது, ஏற்றது எது, ஏற்காதது எது எனப் பிரித்து அதனுள் கிடக்கும் உண்மையான பொருளைக் காண்பது தான் அறிவு. எவர் கூறினும் ஒவ்வொரு கூற்றையும் அலசி, ஆராய்ந்து உண்மைப் பொருளைக் காணவேண்டு மென்பதே வள்ளுவர் விழைவதாகும்.

வாழ்நாளில் முழுவதிலுமே வள்ளுவர் காட்டிய வழியைப் பின்பற்றி வாழ்ந்தால் தான் நாம் உண்மையில் மனிதர்களாவோம்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைத் தெண்ணப்படும்."

என்று கூறும் வள்ளுவர் வாக்கின்படி அவர் வழி நடந்தால் நாம் தெய்வத்துள் வைத்தெண்ணப் படுவோம். "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?" என்ற ஒரு முதுமொழியுண்டு; நாம் பெரியவர்களாய் வளர்ந்த பின்பும் வள்ளுவர் வழிப்படி நடப்பதற்கு இப்பொழுது தொட்டே குறள் வழிநடக்கப் பயிலவேண்டும். திருக்குறளை மனப்பாடஞ் செய்வது நாம் வள்ளுவருக்கு எடுக்கும் விழாவாக இருக்காது. அவர் வழிப்படி நடப்பதாலேயே நாம் அவருக்குப் பெருமை செய்தவர்களாவோம்.

### யாகத்தில்....

(2ம் பக்கத் தொடர்ச்சி).

எல்லாம் அளிக்க வல்லது. இதைத் தவிர வேறு வழியில்லை. சாதுக்களைத் தேடியலை. அவர்கள் எங்குமுளர். உண்மை உள்ளமும் ஆவலும் தேவை. அவர்கள் எப்போதும் உன்னை அன்புடன் வரவேற்கத் தயாராய். இருக்கிறார்கள்.

சத் சங்கத்தின் மூலம் தெய்வம், அவர் பெருமை, தெய்வ வியாபகம் இவைகளைப் பற்றிய சிந்தனைகளும், உள்ளத்தைத் தட்டி எழுப்பும் தெள்ளிய ஆத்மிகச் சிந்தனைகளும், நீரில் கரைந்திருக்கும் சர்க்கரைபோல் நம் மனதில் நிறைந்திருக்கும். அப்போது தான் நீ தெய்வீக உணர்வெய்துவாய். அப்பொழுது ஒரு நொடிப் பொழுதில் நீ ஆத்ம ஞானம் எய்துவாய்.

### மாம்பழம்

—மு. சடாட்சரன் —

சின்னச் சின்ன மாம்பழம்
சிவந்த நல்ல மாம்பழம்
அண்ணா தந்த மாம்பழம்
அழகான மாம் பழம்

நல்ல நல்ல மாம்பழம்
நாவுக் கேத்த மாம்பழம்
மெல்ல மெல்ல வெட்டியே
மென்று உண்ணும் மாம்பழம்

எல்லோ ருக்கும் கொடுத்து
இனிக்க உண்ணும் மாம்பழம்
பல்லே இல்லாப் பாப்பாவும்
பறித்து உண்ணும் மாம்பழம்

## இன்று ஒருநாள் மட்டும்....

தினசரி காலையில் எழுந்ததும், கீழ்க்கணடபடி தீர்மானம் செய்துகொள்ளுங்கள்.

1. இன்றுஒருநாள் மட்டும், என்ன நேர்ந்தாலும் மகிழ்ச்சியுடன் இருப்பேன்.

2. இன்று ஒருநாள் மட்டும், உண்மை நிலைக்கு ஏற்ப என்னைச் சரிசெய்து கொள்வேன். என் ஆசைகளுக்கு ஏற்ப நிலைமையை மாற்ற முயலமாட்டேன்.

3. இன்று ஒருநாள் மட்டும், என் உடலைக் கவனத்துடன் பேணுவேன்.

4. இன்று ஒருநாள் மட்டும், சோம்பேறியாக இல்லாமல், பிரயாசை, சிந்தனை, ஒரே நோககு ஆகியவை தேவைப்படும் படியான ஒரு விஷயத்தைப் படிப்பேன்.

5. இன்று ஒருநாள் மட்டும், யாருக்காவது ஓர் உதவி செய்வேன். அது மற்றவர்களுக்குத் தெரியாமல் இருக்கும்படி வைத்துக் கொள்வேன்.

6. இன்று ஒருநாள் மட்டும், நான் எல்லோருக்கும் உகந்தவனாக இருப்பேன். கூடுமான வரையில் சுத்தமாக உடை அணிவேன், மெல்லப் பேசுவேன், தாராளமாகப் பாராட்டுவேன், யாரையும் திருத்தமுயல மாட்டேன்.

7. இன்று ஒருநாள் மட்டும், முழுமையுடன் வாழ்வேன். வாழ்நாள் பிரச்னை அனைத்தையும் இன்றே சமாளிக்க முனைய மாட்டேன.

8. இன்று ஒருநாள் மட்டும், எனக்கென ஒரு நிகழ்ச்சிநிரல் தயார் செய்து கொள்வேன். ஒவ்வொரு மணிநேரமும் நான் என்ன செய்யப்போகிறேன் என்பதைக் குறித்துக்கொண்டு கூடுமான வரை அதன்படி நடப்பேன்.

9. இன்று ஒருநாள் மட்டும், பிரத்தியேகமாக எனக்கென்றே ஒரு அரை மணியை ஒதுக்கி வைத்துக்கொண்டு, அந்தநேரத்தில் அமைதியாகக் களைப்பாறுவேன்.

10. இன்று ஒருநாள் மட்டும், நான் அச்சமின்றி இருப்பேன். மகிழ்ச்சியுடனிருக்கவும், அழகை அனுபவிக்கவும், அன்பு செலுத்தவும், நான் அன்பு செலுத்துகிறவர்கள் என்னிடம் அன்பு செலுத்துகிறார்கள் என்பதை உறுதியாக நம்பவும் சிறிதும் தயங்க மாட்டேன்.

—வில் பார்ட்ரிஜ்

## திருந்திய பாலன்

— சி. பி. சத்தியநாதன் —

வகுப்புக்கு வந்தவுடன் மாணவர்களின் வழக்குகளை விசாரணை செய்வதிலேயே நாலாம் வகுப்பு ஆசிரியரின் நேரமெல்லாம்செலவாகிவிடும். சண்டை செய்ததற்காகவும், திருட்டு செய்ததற்காகவும், மாணவர்களை விசாரித்துத் தண்டனை அளிப்பார் ஆசிரியர். வழக்குகளில் பெரும்பாலும் எதிரியாய் இருப்பவன், பாலன் என்ற பையன். வகுப்பில் புரட்சிஉண்டாக்குவதே அவன் தான்.

பாலன் இயற்கையிலே சற்றுத் துடியன். எல்லா மாணவர்களையும் அடக்கி ஆளவேண்டும் என்பது அவனது விருப்பம். நான்காம் வகுப்பு 'மொனிட்டர்' பாலனின் முதல எதிரி. மூன்றும் வகுபபில் பாலன் தான் 'மொனிட்ட'ராயிருந்தான். நாலாம் வகுப்புக்கு வந்ததும் வேறு ஒரு பையனை மொனிட்டர் ஆக்கி விட்டார் ஆசிரியர். அதனால் ஆசிரியர் மீதும் சற்றுக்கோபம். இதனால் தான் வகுப்பில் ஏககளேபரம்!

'மொனிட்டர்' 'எழுந்துநில்' என்று சொன்னால் எழுந்து நின்று சேஷ்டைகள்செய்வான். அவனது சட்டைப் பையில் கடலை, கச்சான்கொட்டை ஆகியன குறையமாட்டா. அவனது வாய் எந்நேரமும் அசைபோட்டுக் கொண்டேயிருக்கும்.

பாடசாலைநேரத்தில் பாலனை எதிர்ப்பவர்களுக்கு பாடசாலை முடிந்ததும் தெருவில் மறித்து அடிப்பான். தன்னைச் சிநேகித்தவர்களுக்கு மட்டும்தான் கடலைப் பருப்புகள் கொடுப்பான். பாலன் தலைமையில் வகுப்பில் ஓர் எதிர்அணி இயங்கிவந்தது.

ஓய்வு நேரத்தில் பாடசாலையில் கொடுக்கும் பணிசும், பாலும் பல மாணவர்களுக்கு விருப்பை அளிக்கும். பாலன் பணிஸ்மட்டும்தான உண்பான். பால் விரும்பிக் குடிக்கமாட்டான். குடிக்க வேண்டுமானால் வீட்டிலிருந்து சீனி கொண்டு வருவான். சில உயர்வீட்டு மாணவர்கள் ஓய்வு நேரத்தில் குடிக்க தோடம்பழரசம், சோடா, சர்பத் ஆகியன கொண்டுவருவார்கள். அவைகள் அனைத்தையும் கரும் பலகை மூலையில் வைக்கும்படி ஆசிரியர் கட்டளையிட்டிருந்தார். ஓய்வுநேரமணி ஒலித்ததும் மாணவர்கள் தங்கள் தங்கள் போத்தல்களைத் தூக்குவார்கள். பாலனும் வைத்தவன் போன்று ஒரு போத்தலை எடுத்து அரைவாசியைக் குடித்து விட்டுத்தான் வைப்பான அதற்காகத் தன்னுடன் சண்டையிடுபவனை பள்ளிக்கூடம் கலைந்ததும் 'ஒரு கை பார்த்துவிடுவான்.'

ஓய்வு நேரத்திற்கு மணி ஒலித்தது. அன்று வெள்ளிக்கிழமை ஆதலால் ஆசிரியர் அவ்வார தினவரவுக் கணக்குகளைப் பார்த்துக் கொண்டிருந்தார். அவர் ஓய்வு நேரத்தைப் பொருட்படுத்தவில்லை.

இடைவேளை நேரத்தில், வகுப்பில் இரைச்சலுக்கும் ரகளைக்கும் குறைவில்லை அல்லவா? தனது மாணவர்களைத் துரத்திவிட்டுத் தன்வேலையிலே மூழ்கினார் ஆசிரியர்.

மணி அடித்தது. மாணவர்களெல்லாம் ஓய்வு நேரம் முடிந்துவிட்டதை உணர்ந்து வகுப்பை நோக்கி ஓடி வந்தார்கள். அப்பொழுதுதான் ஆசிரியரின் கணக்கு வேலைகள் முடிந்தன.

பழரசங்கள் வைக்கும் கரும் பலகைப் பக்கத்தை ஆசிரியர் பார்த்தார். அவர் முகத்தில் ஏமாற்றத்தின் பிரதிபலிப்பு!

ஆசிரியரும் பழரசம் கொண்டு வருவார்.

"எனது தோடம்பழரசத்தை யார் எடுத்துக் குடித்தீர்கள்." என்று மாணவர்களிடம் கேட்டார். யாராவது தவறி எடுத்திருப்பார்கள் என்று தான் அவர் நினைத்தார்.

மாணவர்கள் 'திருதிரு' வென்று விழித்தார்கள். ஒவ்வொருவரும் தாங்கள் எடுக்கவில்லை என்றார்கள். கடைசியில் இறுதி வாங்கில் இருந்த பாலன் எழுந்து "நான் தான் எடுத்துக் குடிததேன் சார்!"— என்றான்.

"ஏன் எடுத்துக் குடித்தாய்?" என்றார் ஆசிரியர்.

"உங்களுடையது என்று தெரிந்தால் எடுத்திருக்க மாட்டேன் சார்!"—பதட்டத்துடன் பாலன் சொன்னான்.

ஏனைய மாணவர்களின் பழரசங்களைக் குடித்த பாலனைத் தண்டித்த ஆசிரியர், தன் பழரசத்தைப் பருகியதற்குத் தண்டனை கொடுக்க முடியாதவராய் பாலனைப் பார்த்தவாறே நின்றார்.

பாலன்தலை குனிந்தான். அப்பொழுதுதான் அவன் தனது தவறுகளை உணர்ந்தான். அச்சம்பவத்தின் பின பாலன் தன் தவறுகளைத் திருத்தி நடந்து கொண்டான்.

## மேற்கு ஜெர்மனியில் மாணவர்கள் வாழ்க்கை

இந்தியாவைச் சேர்ந்ததிரு. சதீஷி கடேகா, இந்தோனேஷியாவைச் சேர்ந்த திரு. வில்கின் கிரீந்திரா, காமடுனைச் சேர்ந்த திரு. கஸ்டாவி எஸ்ஸாகா இவர்கள் மேற்கு ஜெர்மனியில் படிக்கவந்த போது சினிமாவில் நடிக்கப்போகிறோம் என்பதை அவாகள் நினைத்துக் கூடப் பார்க்கவில்லை. இவர்கள் இப்போது மேற்கு ஜெர்மனியில் மாணவர்களின் வாழ்க்கையை விளக்கும் டாகுமெண்டரிப் படத்தில் நடித்து வருகின்றனர்.

மேற்கு ஜெர்மனியில் ஆசியா, ஆபிரிக்காவிலிருநது படிக்க வரும் மாணவர்கள் என்ன பயிற்சிகளைப் பெறலாமென்பதை இப்படம் விளக்குகிறது. 40 நிமிஷம் ஓடக்கூடிய இந்த டாகுமெண்டரி 5 பாஷைகளில் விளக்கம் கொண்டதாக இருக்கும். ஆசிய ஆப்பிரிக்க நாடுகளில் இது காட்டப்படும்.

இப்படத்தில் 15 நாடுகளைச் சேர்ந்த மாணவர்க்ள் நடித்திருக்கின்றனர். இந்த 15 நாடுகளைச் சேர்ந்தவர்களும் நன்றாக ஜெர்மன் பாஷையைக் கற்றுவிட்டதால் இப்படத்தில் டைரக்டர் ஜெர்மன் மொழியிலேயே இவர்களுடன் பேசி நடிக்கச் செய்திருக்கிறார்.

ஜெர்மனியில் அயல் நாட்டு மாணவர்கள் எபபடி வாழ்க்கையை நடத்துகிறார்களென்று இப்படம் விவரிக்கிறது. எந்த நாட்டு மாணவர்களானாலும்

(7-ம் பக்கம் பார்க்க)

### சுட்டித் தம்பி

வீட்டு வாத்தியார்:- தம்பி, ஒரு வாழைப்பழம் ஐந்து சதமென்றால் பத்துப் பழங்களின் விலை என்ன ஆகும்?

மாணவன்:- நாற்பது சதமாவது ஆகும்.

வி. வாத்தியார்:- (கோபத்துடன்) அடே, மக்கு, நிதானமாகச் சொல்..... பத்துப் பழங்களுக்கும் ஐம்பது சதமாகும்.

மாணவன்:- அதெப் படி சார்? தொகையான பழம் வாங்கும் போது கடைக்காரன் விலைகுறைத்துத் தானே கொடுப்பான்?

அனுப்பியவர்,
ம. பவானிதேவி,
யாழ்ப்பாணம்.

## கரணவாயில திருவள்ளுவர் விழா

கரணவாய், சனி

கரணவாய் உபதபாற் கந்தோருக்கருகாமையில் அமைக்கப்பட்டுள்ள வள்ளுவர் அரங்கில் இம்மாதம் 22-ம் திகதி பிற்பகல் 5 மணியளவில் திருவள்ளுவர் நினைவுவிழா இளைஞர் முன்னேற்றக் கழகத்தினரால் கொண்டாடப்படும்.

இவ்விழா வித்துவான் க. கார்த்திகேசு தலைமையில் நடைபெறும்.

பேராசிரியர்சாலை இளந்திரையன், பேராசிரியை திருவாட்டி கனகசவுந்தரி இளந்திரையன், செல்வி புஷ்பா செல்வநாயகம் வித்துவான் கவேந்தனர் ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள்.

---

## கால நிலை சீராகிறது

யாழ்ப்பாணம் சனி

கடந்த செவ்வாய்க் கிழமையன்று யாழ்ப்பாணப் பகுதியில் எழுந்த சூறுவளிக் காற்று இங்போது இங்குஅடங்கியுள்ளது. இச்சூறுவளி மேலும் வடக்குப் புறமாகச் சென்றுள்ளதாகக் காலநிலை அவதான நிலையம் கூறுகிறது. இலங்கையின் கால நிலைமைகள் சீராகி வருவதாகவும் சூறுவளி அபாயங்கள் எதுவும் இங்கு நிகழமாட்டாதெனவும் அவதான நிலையம் மேலும் கூறியுள்ளது. தென் மேற்குப் பருவப் பெயற்சிக் காலம் தற்போது இலங்கையில் ஆரம்பித்துள்ளது தென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழ் பல்கலைக் கழகம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எல்லாவுயிர்க்கும்'' என்ற பரந்த நோக்கம் போதிக்கும் தமிழ் மறையை தமிழ்மக்களின் வழிகாட்டியாகக் கொள்ள வேண்டும். இந்தக் கொள்கையை வலியுறுத்துவதற்காக "தமிழ் மறைக்கழகம்" ஆரம்பிக்கப்பட்டது. இப்பொழுது தமிழ் மறைக்கழகத்தின் நோக்கம் படிப்படியாக வெற்றியடைவதைக் கண்டு நாம் மகிழ்ச்சியடைகிறோம்.

திருவள்ளுவரை ஒரு மதத்தவருக்கோ, இனத்தவருக்கோ தனி உடமையாக்கக் கூடாது. அவர் உலகத்திற்கே பொது நீதி தந்த பெருந்தகை. அவர் உலகத்திற்கே சொந்தமானவர். காலதேச வர்த்தமானங்களைக் கடந்து நின்று அறிவொளி பரப்பும் உதயசூரியன் அவர்.

திருவள்ளுவர் ஒரு சிறந்த சீர்திருத்த வாதியும் ஆவார். எதிலும் உண்மைப் பொருளை ஆராய்ந்து காணவேண்டும் என்ற கருத்தை வலியுறுத்திச் சொன்னவர். மனிதனே நீ உன் முயற்சியில் நம்பிக்கை வை. அதனால் நீ எண்ணியதை அடையமுடியும் என்று துணிவையும் தன்நம்பிக்கையையும் ஊட்டியவர் அவர்.

மக்களாகப் பிறந்த இருவர்களுக்கு தமிழர்கள் கோவில் கட்டி சிலையெடுத்து அவர்களைத் தேவர்களாகக் கருதி வழிபட்டார்கள். ஒருவர் கண்ணகி மற்றவர் திருவள்ளுவர். திருவள்ளுவரைப் போற்றுவதோடு நில்லாமல் அவருடைய வழியில் வாழ்க்கை நடத்த முயல்வது தான் நமது இன்றியமையாத கடனாகும்.

இன்று உலகத்தில் நாலு கோடி தமிழர் இருந்தபோதும் அவர்களுக்கெனத் தனிக்கொடி கிடையாது. சமயத்துறையில் இசைத்துறையில், அரசியல் துறையில் எல்லாம் தமிழ் புறக்கணிக்கப்பட்டுவருகிறது. தமிழ் என்றால் இனிமை என்று பொருள். தமிழ்மறை, இனிமையான மறையாகும். ஒரு குலத்துக்கொரு நீதிகூறுமலும் ஒருவருக்குச் சாதகமாகவும் மற்றவருக்கு பாதகமாகவும் விதிகள் செய்யாமல் எல்லோருக்கும் பொதுவான நீதி உரைப்பது திருக்குறள்.

மாநாட்டைத் தொடக்கி வைத்த பேராசிரியர் திரு. அ. சின்னத்தம்பி கூறியதாவது:-

தமுழர் தாய்மையைப் போற்றுபவர்கள். கீற்புக்கரசி கண்ணகிக்கு விழாவெடுத்தவர்கள் தமிழர்கள். தமிழர்களுடைய வாழ்க்கை உலகோடு ஒட்டியது. பின்னாளில் சமண பௌத்த மதங்களின் வருகையில் தமிழர்களது வாழ்க்கை நெறிகளில் மாற்றம் ஏற்படத் தொடங்கியது. இக்காலத்தில் தமிழருடைய வாழ்க்கையில் பெரும் மாறுதல்களும் சிக்கல்களும் ஏற்பட்டுள்ளன. உழுதுண்டு வாழ்ந்த பெருமைக்குரிய நிலைமாறி இன்று தொழுதுண்டு வாழும்நிலை ஏற்பட்டுள்ளது. தொழுதுண்டு வாழ்வதையே பெருந்தொகையானோர் விரும்பி ஏற்றுள்ளார்கள். இதுவே தமிழ்ச்சமுதாயத்தின் வீழ்ச்சியாகும். இன்று உலகெங்கும் வாழும் தமிழ்மக்கள் பெரும்அவலநிலையில் உள்ளார்கள். கஷ்டம் வந்த போதும் கைகொடுத்து உதவக்கூடியது திருக்குறள். தென் ஆபிரிக்காவில் காந்தியடிகள் திருக்குறளைத் துணையாகக்கொண்டு தான் தன் அறப்பணியை ஆற்றினர்.

ஈழத்தில் தமிழர்களது கலைகள், பண்பாடு என்பன வளர்வதக்கேற்ற வசதிகள் கிடையாது. இதனால்தான் தமிழ்ப் பல்கலைக்கழக இயக்கம் தொடங்கி இப்பொழுது செயல்பட ஆரம்பித்துள்ளது.

புதுடில்லி திருவேங்கடவன் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியை திருமதி கனகசவுந்தரி இளந்திரையன் தமதுஉரையிற்குறிப்பிட்டதாவது:-

"உள்ளத்தை உயர்த்துவது திருக்குறள். வாழ்க்கையின் எந்த நிலையிலும் கைக்கொள்ளக் கூடியது திருக்குறள். வள்ளுவருக்கு பின்வந்த இலக்கிய ஆசான்கள் பலரும் தமது நூல்களில் அவரது கருத்துக்களை எடுத்தாண்டு உள்ளனர். இளங்கோவடிகள், சாத்தனர், திருத்தக்கதேவர் முதலாக மனோன்மணியம் சுந்தரம்பிள்ளை பாரதியார் வரை பலரும் திருவள்ளுவரின் கருத்தைக் கையாண்டுள்ளனர். இது திருக்குறளின் பெருமையைக் குறிப்பதாகும்."

கம்பராமயணம் என்னும் பெருங்கடலில் வள்ளுவத்தின் பல துளிகளைக் காண முடியும். "திறமான புலமையெனில் வெளிநாட்டார் அதை வணக்கம் செய்தல் வேண்டும்'' என்றார் பாரதியார். வெளிநாட்டார். பலராலும் போற்றி வணங்கப்படுவது திருக்குறள். ஆனல் வள்ளுவனைத் தந்த தமிழ்ச் சமுதாயம் இன்று பெருமையும் பீடும் இழந்து காணப்படுகிறது. இந்நிலையை மாற்றியமைப்பதே வள்ளுவருக்கு நாம் செலுத்தும் வணக்கமாகும்."

டில்லிப் பல்கலைக் கழகப் பேராசிரியர் திரு. சாலை இளந்திரையன் தமது பேச்சிற்குறிப்பிட்டதாவது:-

யாழ்ப்பாணத்து நாவலரும் யாழ் நூல் தந்த விபுலானந்த அடிகளாரும் தமிழுக்கு செய்த தொண்டு மறக்கமுடியாதவை. ஈழத்தை 'தமிழ் நாடு' என்று அழைப்பினும் மிகவும் பொருந்தும்.

நாம் தமிழர் என்ற நிலைக்கும் மேலாக, நாம் மனிதர் என்றும் நினைக்க வேண்டும். மாறி வருகின்ற மனிதன் மாண்பு மிக்க வைகளை விட்டு விட்டு மாண்பற்றவைகளைக் கைக்கொள்கிருன். தன்னுடைய தவறை உணராமல் மற்றையவர்களுடைய தவறுகளை சுட்டிக்காட்டுவதிலேயே அவன் நாட்டம் கொள்கிருன். மற்றவர்களுடைய குற்றத்தைப் பார்க்கும் அவன் தன் குற்றத்தையும் உணரும்போது தான் முழ மனிதனக முடியும்.

திருச்சி அர்ச். சூசையப்பர் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் திரு. ஐயம் பெருமான் கோனர் "வள்ளுவரும் கம்பரும்" என்னும் பொருள் பற்றிப் பேசினர்.


இப்பொழுது திரையிடப்படுகிறது!

கெப்பிட்டல் (கொழும்பு) நவா (கொம்பனித்தெரு) விஜயா (மட்டக்களப்பு)

மோடர்ன் (பதுளை) விஜிதா (மஸ்கெலியா) கிரசன்ட் (புத்தளம்)



ஈ. வி. சரோஜா, டி. ஆர். மகாலிங்கம்

எம். ஆர். ராதா, அசோகன், எம். வி. ராஜம்மா

பத்மினி பிரியதரிசனி

நடித்த

இரத்தினபுரி இளவரசி

டைரக்ஷன்: ராமண்ணு

5வது வெற்றி வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

மற்றும் 10 திரைகளில்

சிவாஜி கணேசன் - பி. சரோஜா தேவி,

நடித்த

பாலும் பழமும்

மனோஹரா (யாழ்ப்பாணம்) நாகேஸ்வரராவ், அஞ்சலிதேவி

நடித்த

அனர்கலி


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1962-ம் ஆண்டு மே மாதம் 20-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


யாழ்ப்பாணத்தில் மிகப்பெரியது! இலங்கையில் ஒரு திறமானது!

16,000 முட்டைகள் அடை வைக்கக் கூடிய கருவியிலிருந்து

**கோழிக் குஞ்சுகள்**

**60 சதம்**

உத்தரவாதமுள்ள உயர்தர

ஒரு நாள் வெள்ளை லெக்கோன் கோழிக் குஞ்சுகள்

**70 சதம்**

மற்றைய சாதிகள்

முன் கூட்டிய ஆடர்களை முற்பணம் 50 சதவீதம் கட்டி பதிவு செய்து கொள்ளலாம்.

**முட்டை அடைவைக்கும் விபரங்கள்**

| | |
|---|---|
| முதல் நூறுக்கு | 15 சத விகிதம் |
| இரண்டாம் நூறுக்கு | 14 சத விகிதம் |
| மூன்றும் நூறுக்கு | 13 சத விகிதம் |

அடைவைப்பதற்கு ஆகக் குறைந்த தொகை 10 முட்டைகள். ஆடர்களை முன் கூட்டியே பதிவு செய்து ஏமாற்றத்தைத் தவிருங்கள்!

ஒரு நாள் குஞ்சுகள் விற்பனை செய்வதற்கு வட கிழக்கு மாகாணங்களில் ஏஜண்டுகள் தேவை.

**தேசிய அவயகூடமும் கோழிச் சேவையும்**

மானிப்பாய் வீதி, கூளாவடி, ஆனைக்கோட்டை.

( 4-ம் கட்டை, ஆனைக்கோட்டை உப-தபாற் கந்தோருக்கு அருகாமை )